# வான்மதி
# 2002




## ப/ஹாலிஎல தமிழ் மகா வித்தியாலயம்

## ஹாலி-எல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes from :*

# Victoriya Agencies

P.O BOX 10.
BADULLA.

**Distributors for :**

- **United Breweries Lanka Ltd.**
- **Shell Gas Lanka Ltd.**

Tel : 055-23588, 22987, 30088

Fax : 074-499466

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எழுத்தாணி கொண்டு ஓர்

ஏற்றம் மிகுந்த எதிர்காலத்தை

எட்டிப் பிடிக்க எத்தணிக்கும் நாம்

முத்தமிழ் தேன் கலந்து


முகம் மலர கரம் குவித்து

எண் கோண திசையெல்லாம்

கலை கொண்ட எந்த உள்ளங்களுக்கும்

தருகின்றோம் சமர்ப்பணமாய்

விநாயகனே எற்றருள்வாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes from :*

# Victoriya Agencies

P.O BOX 10.
BADULLA.

***Distributors for :***

- *United Breweries Lanka Ltd.*
- *Shell Gas Lanka Ltd.*

Tel : 055-23588, 22987, 30088

Fax : 074-499466

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எழுத்தாணி கொண்டு ஓர்

ஏற்றம் மிகுந்த எதிர்காலத்தை

எட்டிப் பிடிக்க எத்தணிக்கும் நாம்

முத்தமிழ் தேன் கலந்து


முகம் மலர கரம் குவித்து

எண் கொண்ட திசையெல்லாம்

கண் கொண்டளந்த உன்னடிக்குத்

தருகின்றோம் சமர்ப்பணமாய்

விநாயகனே ஏற்றருள்வாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய கீதம்

ஸ்ரீ லங்கா தாயே - நம் ஸ்ரீ லங்கா
நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நமதலை நினதடி மேல்வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் ஸ்ரீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலி யானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல்செறி துணிவருளே - நம் ஸ்ரீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே.

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெல்லாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே நம் ஸ்ரீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்திரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே.....!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண் மொழி வாழியவே !

ஏழ் கடல் வைப்பினும் தன் மணம் வீசி
இசை கொண்டு வாழியவே !

எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்னென்றும் வாழியவே !

சூழ் கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே !

தொல்லை வினை தரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே !

வாழ்க தமிழ் மொழி ! வாழ்க தமிழ் மொழி !
வாழ்க தமிழ் மொழியே !

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர் மொழி வாழியவே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் தாய் வாழ்த்து

காதொளிருங் குண்டலத்தாள்
கனிமொழியாள் வாழ்க
கைக்குவளை யாபதி கொள்
கன்னிகையாள் வாழ்க !

மேதகு மென் மார்பிடைச்சிந்
தாமணியாள் வாழ்க.
மின்னுமணி மேகலை சூழ்
மெல்லிடையாள் வாழ்க!

சீதமலர்ப் பாத மொளிர்
சிலம்புடையாள் வாழ்க
சேர சோழ பாண்டியர் தஞ்
செல்வ மகள் வாழ்க!

நீதியுறுஞ் செங்கோலாய்த்
தூய குறல் தாங்கும்
நிகரறியாச் செந்தமிழ் தாய்
நீடூழி வாழ்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை கீதம்

வாழ்க வாழ்க வளமுடன் - எங்கள்
ஆலி-எல தமிழ் வித்தியாலயம் !!!

வாழ்க.

ஆறுகள் மலைகள் அணைந்திடும் இயற்கை
அமைந்துள்ள பதியாம் ஆலி எலையில்
அமைத்த எங்கள் வித்தியாலயம்
அவணியில் சிறந்து அனைத்தும் பெற்றிட...!

வாழ்க

கல்வி உயர்ந்திட கலைகளில் சிறந்திட
நிலையினை உயர்த்திட நேர் வழி சென்றிட
அஞ்சுதல் நீக்கும் ஆலி எலை தமிழ் வித்தியாலயம்
அகிலம் போற்றிட எழில் நலம் பெற்றிட !

வாழ்க

அறியுயர் ஆசான்கள் அள்ளி வழங்கிடும்
நெறி பல கற்போம் நித்தமும் பணிவோம்
அறிவு ஆற்றல் அடக்கமும் சூழ்ந்திட
ஆக்கத்தின் ஒளியாய் ஊக்கத்தின் வழியாய்

வாழ்க

பாரினில் சிறந்த பல் தொழில் புரிந்திட
சீருடன் நின்று சிறப்பாய் நடந்திட
ஆற்றிடும் சேவையில் அகிலமே போற்றிட
ஆலி எலை தமிழ் வித்தியாலயம்

வாழ்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை முதல்வரிடமிருந்து



முற்றிலும் புதியதும், வெறுமையானதுமான 90'X20' அளவுள்ள ஒரு பாடசாலைக் கட்டிடத்தின் திறப்புகளை மாத்திரம் என்னிடம் தந்து, பாடசாலையை ஆரம்பித்து நடாத்துமாறு நான் பணிக்கப்பட்டேன். ஏற்றுக்கொண்ட பொறுப்பை எவ்வாறயினும் நிறைவேற்றும் துணிவுடன் கல்வி பணிப்பாளர்கள், அரசியல் பிரமுகர்கள், பெற்றார்கள், நலன் விரும்பிகள் அனைவரது ஒத்துழைப்பையும் பெற்று 37 மாணவர்களுடன் 1989-02-10ஆம் திகதி பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.

பெற்றாரும், நலன் விரும்பிகளும், ஆசிரியர்களும், மற்றும் கல்வி அதிகாரிகளும், காலத்துக்கு காலம் அரசியல் தலைவர்களும் வழங்கிய பூரண ஆதரவுடன் மாணவர்க்குத் தேவையான பல்வேறு வகைப்பட்ட கற்றல் உபகரணங்களையும், பல கட்டிடங்களையும் பெற்று இக் கல்விக் கூடத்தை ஹாலி-எல நகரினதும், அண்மித்த பகுதிகளினதும் தமிழ்ப் பெற்றார்கள் 1965 முதல் கண்ட கனவை நனவாக்க ஆண்டவன் அனுக்கிரகம் கிடைத்தது.

பாடசாலை தோற்றம் பெற்று பதினான்காவது ஆண்டில் ஏனைய பாடசாலைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது இதன் நிலையை எண்ணிப் பெருமைப்படுகின்றேன். 5ஆம் ஆண்டு புலமை பரிசில் பரீட்சை, க.பொ.த.(சா/த) பரீட்சை, மற்றும் சைவ சமயம் சார்ந்த நிகழ்ச்சிகள் - போட்டிகள், கலை நிகழ்ச்சிகள், விளையாட்டுத்துறை ஆகியவற்றில் பாடசாலை மாணவர் எய்திய வெற்றிகளைக் கண்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

மேலும் பல வளங்கள் பெற்று, சிறந்த சாதனைகளை நிலைநாட்டி, எதிர்காலத்துக்குத் தேவையான நற்பிரசைகளை இப்பிரதேசத்திலிருந்து உருவாக்கித் தரவல்ல ஓர் உயர் நிலையில் என்றும் மிளிர எனது இதய பூர்வமான நல்லாசிகளை சமர்ப்பிக்கின்றேன்.

*P.* சுப்பையா,
அதிபர்,
ப/ஹாலி-எல தமிழ் மகா வித்தியாலயம்,
ஹாலி-எல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவ அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் இதயத்திலிருந்து...




மலையக கல்வி அபிவிருத்தியின் மேன்மையில் தான் சமூகங்களுக்கிடையிலான தரப்படுத்தலில் இந்திய வம்சாவழி சமூகம் சமத்துவத்தை பெற முடியும் என்ற இலட்சியத்தோடு ஐயா சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கையை அடையாளப்படுத்தும் சின்னமாக ஹாலி-எல தமிழ் மகா வித்தியாலயம் திகழ்கிறது.

13 ஆண்டுகளை பூர்த்தி செய்து இந்த 13 ஆண்டுகளுக்குள் கல்வியோடு, கலை கலாசார, விளையாட்டு துறைகளிலும் புதிய பரிமாணங்களை பெற்றுவரும் இக்கல்லூரி "வான்மதி" என்ற நூலினை வெளியிடுவதையிட்டு எனது இதயப்பூர்வமான பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

எங்கே கட்டுப்பாடும், கண்ணியமும் மேலோங்கி இருக்கிறதோ அங்கே கடமையின் சாதனைகளை ஒரு தொடர் அலையாக பிறக்கும் என்பதில் நம்பிக்கைக் கொள்ளலாம். அந்த நம்பிகையை எற்படுத்தும் நிலையை 28 ஆசிரியர்களைக் கொண்ட உங்கள் ஆசிரிய குழாமும், அதிபரும், மாணவ மாணவியரும் நிலைநாட்டியுள்ளீர்கள்.

எதிர்காலத்திலும் இத்தகைய அரும் பணிகளுக்கான வெற்றிகளை தாங்கள் சுவீகரித்து வான்மதி தொடர்ந்தும் எழில் தரவேண்டுமென வாழ்த்தி நிறைகொள்கின்றேன்.



ஆறுமுகன் தொண்டமான் (பா.உ)
அமைச்சர் தேசிய வீடமைப்பு பெருந்தோட்ட உட்கட்டமைப்பு
இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொது செயலாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ඌව පළාත් ගරු ප්‍රධාන අමාත්‍ය ඒ. එම්. බුද්ධදාස මැතිතුමාගේ සුභාශිංෂණ

බදුල්ල අධ්‍යාපන කලාපයට අයත් හාලිඇල දෙමළ මහා විදුහල 1989 පෙබරවාරි 20 වන දින ආරම්භ වී, මේ දක්වා වූ ප්‍රගතිය විදහා දැක්වීම, ඒ හා පවත්වන විවිධප්‍රසංගයක් හා පොතක් එළිදැක්වීමට සුභාශිංෂණය පතා පණිවිඩයක් ලබා දීමට ලැබීම ඉමහත් සතුටට කරුණකි.

ආරම්භයේ දී ස්ථිර හා ස්වේච්ඡා ගුරුවරුන් දෙදෙනකු හා ළමුන් 37 දෙනකු ගෙන් හය වසරින් ආරම්භ වූ පාසල, අද ඉතාමත් කෙටි කාලයක් තුල විවිධ ක්ෂේත්‍රයන් ඔස්සේ දියුණුවේ මාවතට පැමිණ ඇත. එහි ප්‍රතිඵලයක් ලෙස ගුරුවරුන් 28 ක් ළමුන් 650ක් පමණ පළමු ශ්‍රේණියේ සිට 13 ශ්‍රේණිය දක්වා පංති පැවැත්වීම පාසලේ දියුණුවට කදිම නිදසුනකි

වර්තමානයේ දි පාසැල් අධ්‍යාපනය, අධ්‍යාපන සංවර්ධනයට පමණක්ම නොව විවිධ ක්ෂේත්‍ර ඔස්සේ අධ්‍යාපන විෂය සමගාමී ක්‍රියාකාරකම් මගින්ද මිශ්‍රව පවතී. එහිලා ද මෙම විදුහල සියලු ක්‍රියාකාරකම් තුලින් නාගරික උසස් පාසල් සමග තරගකාරී මට්ටමකට පැමිණීමද, පැසසුමට ලක්විය යුතු කරුණකි.

මෙම සියලු ප්‍රගතින් කරා ආරම්භයේ සිට මේ දක්වා එහි පුරෝගාමීව කටයුතු කරන විදුහල්පතිතුමාටත් සේවය කළ හා සේවය කරන ගුරුවරුන්ටත්, පාසල් සංවර්ධන සමිතියටත්, පාසලේ අවශ්‍යතා සපුරා දුන් පරිත්‍යාගශීලීන්ටත්, දයාබර සිසු දරුදැරියන්ටත් මාගේ කෘතවේදී ස්තුතිය පිරිනමමි. ඌව පළාත් ප්‍රධාන අමාත්‍යවරයා මෙන්ම අධ්‍යාපන විෂය භාර අමාත්‍යවරයා වශයෙන් ඔබ විදුහල සියලු ක්ෂේත්‍රයන් ඔස්සේ ලබාගත් ප්‍රගතිය වර්ධනය කරගැනීමට ශක්තිය ධෛර්ය නොඅඩුව ලැබේවායි ද, මේ තාක් අත්කරගත්තාවූ ප්‍රගතිය පිළිබඳව එළිදක්වන පොත්පිංච සමග විවිධප්‍රසංගය සාර්ථක වේවායිද මම ප්‍රාර්ථනා කරමි.

ඒ. එම්. බුද්ධදාස.
ගරු ප්‍රධාන අමාත්‍ය,
ඌව පළාත් සභාව.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்
# திரு. கே. வேலாயுதம் அவர்களின் ஆசிச் செய்தி

பதுளை ஹாலி எலை தமிழ் மகா வித்தியாலயம் 13 ஆண்டு கால தனது வளர்ச்சியை நினைவு கூறும் முகமாக ஏற்பாடு செய்கின்ற விழா சிறப்புற அமைய எனது உளம் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் இவ்விழாவில் வெளியிடப்படவிருக்கின்ற சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இப்பாடசாலையின் வளர்ச்சியை கணிப்பிடுகின்ற பொழுது தற்போது இப்பாடசாலையின் அதிபராகச் சேவையாற்றுகின்ற திரு. *P.* சுப்பையா அவர்களது ஈடுபாட்டையும், பாடசாலையின் அபிவிருத்தியையும் வேறுபடுத்திக் காண முடியாது எனக் கருதுகின்றேன்.

1989ம் ஆண்டு 50இற்கு குறைவான மாணவர்களோடு ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலை இன்று 650இற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு கல்விச் சேவையை வழங்கிவருகின்றது. அன்று முதல் இன்று வரை இப் பாடசாலையின் தரமான கல்வி பௌதிக வளங்கள் ஆசிரியர் ஆளனி, விளையாட்டுத்துறை, கலைத்துறை, மேம்பாட்டுக்கு இப் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள் பெற்றோர்கள் மற்றும் மாணவர்களது கூட்டு முயற்சியும் திடமாமன தளராத செயற்பாடும் உறுதுணையாக இருந்து வந்துள்ளது.

இப் பாடசாலையின் மாணவர்கள் மாவட்ட ரீதியில் மட்டுமன்றி மாகாண தேசிய மட்டத்திலும் பல போட்டிகளில் கலந்து கொண்டு பெருமை சேர்த்துள்ளனர். மிகவும் குறைந்த வளங்களைக் கொண்ட இப்பகுதியின் பெருந்தோட்டத்துறை மாணவர்களது கல்வி மேம்பாட்டுக்கு மிகுந்த பொறுப்புடன் இப்பாடசாலை சேவையாற்றி வருகின்றது.

இப்பாடசாலையின் சில ஆசிரியர்கள் தங்களது ஓய்வு நேரங்களில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்ற கஷ்டமான பிரதேசங்களுக்கு சென்று ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் போன்ற பாடங்களை சேவை அடிப்படையில் வழங்கிவருகின்ற நல்ல மனோபாவத்தைக் கொண்டிருப்பதனை நான் நேரடியாகவே கண்டிருக்கின்றேன்.

ஒரு சமூகத்தின் அளவுகோலில் முதன்மையானது அச்சமூகத்தின் மத்தியில் காணப்படுகின்ற கல்வி அபிவிருத்தியே ஆகும். வேகமாக வளர்ந்து வருகின்ற விஞ்ஞான, கணணித் தொழினுட்ப யுகத்தில் மலையக இளம் சமூகத்தினர் முழுமையாக பங்கேற்று எமது சமூகத்தின் கீர்த்தியை உயரச் செய்ய முடியும்.

மலையக சமூகத்தின் முழுமையான அபிவிருத்தியில் மாறிவருகின்ற சமூக அமைப்பில் எமது சமூகத்திற்கு கிடைக்க வேண்டிய உரிய இடத்தினை பெற்றுக் கொடுக்கின்ற பணியை மலையகப் பாடசாலைகள் மிகவும் பொறுப்புடனும் சமூக சிந்தனையுடனும் மேற்கொள்ள வேண்டியது மிக அவசியமாகும்.

எனவே ஹாலி எல தமிழ் வித்தியாலயம் தமிழ் பேசும் இளைஞர்களின் கல்வித் தராதரத்தை உயர்த்தும் இவ்வரிய பணியை தொடர்ந்து நல்கி தனது சேவையை மென்மேலும் சிறப்புற ஆற்றுவதற்கு எனது மனமார்ந்த நல்லாசிகளை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

கே. வேலாயுதம்,
பாராளுமன்ற உறுப்பினர்,
பதுளை மாவட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவ ஊவா மாகாண சபை உறுப்பினர் மு. சச்சிதானந்தன் அவர்களின் ஆசிச்செய்தி

ஹாலி எலை தமிழ் மகா வித்தியாலயத்தினுடைய கலை விழா மலரில் எனது ஆசிச் செய்தியை வெளியிடுவதை அறிந்து பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். இப்பாடசாலை பல இன்னல்களின் மத்தியிலும் இந்தளவிற்கு உயர்வடைய அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்கள் உறுதுணையாக இருந்துள்ளார். அவரை இவ்வேளையில் நாம் அனைவரும் நினைவு கூறல் எம் கடமையாகும். மேலும் இப்பாடசாலையின் வளர்ச்சிக்காக உழைத்த அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்,மாணவர்கள் அனைவரையும் வாழ்த்துவதுடன் கணணிமயமான இந்த நூற்றாண்டில் பாடசாலை வளர்ச்சியில் கணணியும் முக்கியத்துவம் பெற்று எதிர்காலத்தில் இப்பாடசாலையில் இருந்து சிறந்த மாணவர்கள் உருவாக வேண்டும் எனவும், அவர்கள் பட்டதாரிகளாக வெளிவர வேண்டும் எனவும் வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

மு. சச்சிதானந்தன்,
ஊவா மாகாண சபை உறுப்பினர் (இ.தொ.கா.).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவ ஊவா மாகாண சபை உறுப்பினர் வே. குமரகுருபரன் அவர்களின் ஆசிச் செய்தி

ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தொன்பதாம் ஆண்டு ஹாலி-எல தமிழ் மகா வித்தியாலயம் (பதின் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர்) சுமார் முப்பத்தைந்து மாணவர்களையும் ஒரேயொரு ஆசிரியரையும் மட்டும் கொண்டு இயங்கியது. இன்று அறுநூற்றைம்பது மாணவர்களுடன் இருபத்தைந்து ஆசிரியர்களையும் கொண்டு க.பொ.த. உயர்தரம் வரை கல்விகற்கும் வாய்ப்பையும் கொண்டு பெருமையுடன் திகழ்கின்றது. இக்குறுகிய காலத்தில் எய்தியுள்ள வளர்ச்சியைக் கண்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். இத்துணைச் செயலாற்றல் மிக்க அதிபர், ஆசிரியர், மாணவர்களின் சாதனைகளைக் கண்டு வியக்கின்றேன்.

இப்பதின்மூன்றாம் ஆண்டின் பூர்த்தியையொட்டி பாடசாலை அதிபர், ஆசிரியர், மாணவர்கள் ஆகியோரின் முயற்சியால் வெளிவரவிருக்கும் இந்த "பதின்மூன்றாம் ஆண்டு நிறைவு மலர்" சஞ்சிகை சிறப்புற அமைய என் நல்லாசிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

"வாழ்க மாணவ சமுதாயம்,
வளர்க அவர்தம் கல்வி"

*V.* குமரகுருபரன்,
ஊவா மாகாண சபை உறுப்பினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ඌව පළාත් අධ්‍යාපන අධ්‍යක්ෂ තුමාගෙන්

ඕනෑම රටක අනාගත සංවර්ධනයට උරදෙන පුරවැසියන් බිහිකරන ප්‍රධාන ආයතනය වන්නේ පාසලයි. ළමයෙකු පූර්ණ පෞරුෂයකින් හෙබි මිනිසෙකු බවට පත්කොට සමාජයට දයාද කරන්නේ පාසලයි. මෙම කාර්යය සාර්ථක ලෙස ඉටුකරමින් පෙරට එන ආදර්ශමත් පාසලකි බ/හාලිඇල දෙමළ මහා විදුහල.

1989 වර්ෂයේ 6 වසර පංතියෙන් 40 කට ආසන්න සුළු ශිෂ්‍ය සංඛ්‍යාවකින් ආරම්භ වු මෙම පාසල අද හයසියයකට අධික ශිෂ්‍ය පරපුරකට සෙවන දෙන විදුහලක් බවට පත්ව ඇත.

හාලිඇල නගරය අවට පිහිටි දමිළ මාධ්‍ය ප්‍රාථමික පාසල් වලින්, උසස් අධ්‍යාපනය සඳහා මෙම පාසලට සිසුහු පැමිණෙති. මෙම සිසුන්ගේ අධ්‍යාපනය හා අනාගත ජිවිතය වෙනුවෙන් විදුහල්පති ඇතුළු ගුරු මණ්ඩලය කැපවී, කටයුතු කිරීම සතුටට කරුණකි.

අවුරුදු 13ක් වැනි කෙටි කාලයකින් භෞතික හා මානව සම්පත් වලින් පිරුණු, අ.පො.ස. (උ.පෙල) දක්වා පන්ති පැවැත්වෙන පාසලක් බවට පත්වීම විශාල ජයග්‍රහණයකි.

අනාගතයේ දි නිපුණතා පෙරදැඩි කරගත්, අභියෝග ජයගත හැකි නිර්මාණශිලි සිසු පරපුරක් බිහිවේවායි ප්‍රාර්ථනා කරමි.

ජෝර්ජ්. ඒ. ද. සිල්වා.
ඌව පළාත් අධ්‍යාපන අධ්‍යක්ෂ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊவா மாகாண உதவி கல்விப்பணிப்பாளரின் ஆசிச் செய்தி

உங்கள் வித்தியாலயத்தின் வெளியிடப்பட்டுள்ள மலருக்கு ஆசிச் செய்தியொன்றை வழங்குவதில் என் உள்ளம் மகிழ்கிறது. ஏனெனில் அதிபர் என்றமுறையில் ஒரு தனிமனிதனின் சாதனையும் ஒரு பாடசாலையின் பிறப்பும் பின்னிப்பிணைந்த வரலாற்றைக் கொண்டது உங்கள் வித்தியாலயம் மிகக் குறுகிய காலத்துள் மிகப்பெரிய வளர்ச்சியைக் கண்ட வித்தியாலயம் உங்களது!

ஆர்ப்பரிப்பு, ஆரவாரம் இல்லாது அமைதியாகப் பணிபுரிவதன் மூலம் மலையகத்தின் கல்வித்தேவையை இனங்கண்டு கொண்டு அதற்காகத் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட ஆசிரியர் குழாம் பணிவும் பண்பும் கல்வியின் இரு கண்கள் என்பதற்கமைய பயிலுகின்ற மாணவர்கள்! சிந்தனையும் கொண்டு ஏனைய பாடசாலைகளுக்கு வழிகாட்டும் ஒரு சாந்தி நிகேதனாக விளங்கும் உங்கள் வித்தியாலயம் தன் வரலாற்றை எழுத்தில் வடிக்கும் பணியை மேற்கொண்டது சாலவும் பொருந்தும் !.

உங்களது இந்த பணி தொடரட்டும் வரலாற்றைப் பொறித்துவைக்கும் "மலர்கள்" தொடர்ந்து பூக்கட்டும், உங்கள் வித்தியாலயம் மேலும் சிறக்கட்டும் என வாழ்த்துகின்றேன்.

குமார இராமநாதன்
உதவிக் கல்விப் பணிப்பாளர்,
ஊவா மாகாண கல்வித் திணைக்களம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# කලාපීය අධ්‍යාපන අධ්‍යක්ෂ තුමාගේ පණිවිඩය.

හාලිඇල දෙමළ මහා විද්‍යාලය ආරම්භ වර්ෂ 13ක් සම්පූර්ණ වීම නිමිත්තෙන් නිකුත් කෙරෙන "සමර්ථ කළඹ" සඳහා සුභ පැතුම් පණිවිඩයක් නිකුත් කිරීමට ලැබීම ගැන මම බෙහෙවින් සතුටු වෙමි.

1989 පෙබරවාරි තරම් මැත, සිසුන් 37 ගෙන් ආරම්භ වූ මෙම විදුහල 2002 වර්ෂය වන විට 1-13 ශ්‍රේණි දක්වා දියුණුකර ගැනීමටත්, ශිෂ්‍ය සංඛ්‍යාව 650 දක්වා වර්ධනය කර ගැනීමටත් ආරම්භක විදුහල්පති පී. සුප්පයියා මහතා ඇතුළු ගුරු මණ්ඩලය ඉමහත් පරිශ්‍රමයක් දරා ඇත.

වර්තමාන විදුහල්පති ඇතුළු ගුරු මණ්ඩලය, මනා ප්‍රජා සම්බන්ධතා පවත්වා ගැනීමේ ප්‍රතිඵලයක් වශයෙන් රොකතැන්න වතුයායෙන් ඉඩම් කැබැල්ලක් ගෙන, ගොඩනැගිලි අඩුපාඩු ද සම්පූර්ණ කර ගනිමින් භෞතිකමය දියුණුවක් ද ලබා ඇත.

අවට වතුකරයේ වෙසෙන අඩු ආදායම්ලාභී දමිල දූදරුවන්ගේ අධ්‍යාපනික ප්‍රගතිය සඳහා වර්තමාන විදුහල්පති ඇතුළු ගුරු මණ්ඩලය දරණ කැපකිරීම අගය කරන අතර, මේ විදුහල තුලින් සිසු දරුවන්ගේ අනාගත අභිවෘද්ධිය සැලසේවායි සුභාශිංසනය කරමි.

ඩී.ඇම්.පියසේන,

බදුල්ල කලාපීය අධ්‍යාපන අධ්‍යක්ෂ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதிக் கல்விப் பணிப்பாளர் அவர்களின் ஆசிச்செய்தி

ப/ஹாலி-எல தமிழ் மகா வித்தியாலயத்தின் கன்னி வெளியீடான இவ் "வான்மதி" நூல் வெளியீட்டிற்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்தஏற்பாடு காலத்தின் மிக முக்கிய ஒரு தேவையாகும். இப்பாடசாலையில் திறமையும் ஆர்வமும் நிறைந்த மாணவ மாணவிகளும், ஆசிரியர்களும் இலை மறை காயாகக் காணப்படுகின்றனர். இவர்களின் திறமைகளை வெளிக்கொணர்வதற்கு இவ் வான்மதி நூல் வெளியீடு இப்பாடசாலை அதிபரின் ஒரு சிறந்த வழிகாட்டலாகும்.

எனவே இவ்வாண்டு வித்திட்ட இவ்வரும் பணி கோடையிலும் மாரியிலும் பூத்துக் காய்க்கும் பெரு விருட்சமாக என்றென்றும் சிரம் நிமிர்ந்து நிற்க வேண்டும் என மனமார வாழ்த்துகின்றேன்.

நன்றி

திரு. எஸ். அய். எம். பாருக்.
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
பதுளை வலயக் கல்விக் காரியாலயம்,
பதுளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதுளை வலயக் கல்விப் பணிப்பாளரிடமிருந்து

ஊவா மாகாணத்திலுள்ள தமிழ்ப் பாடசாலைகளில் ஒன்றான ஹாலி எலை தமிழ் மகா வித்தியாலயம் கலைவிழாவொன்றினை நடாத்தி, (சிறப்பு) மலர் ஒன்றினையும் வெளியிடவுள்ளதை அறிந்து பெரும் மகிழ்வடைகின்றேன். இப்பாடசாலை இப்பிரதேச தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்கின்ற ஒரு கல்வி நிறுவனமாக அமைந்துள்ளது. மாணவர்களுக்கு சிறந்த கல்வியை வழங்கும் பணியுடன் அவர்களை நாட்டுக்குகந்த நற்பிரஜைகளாக உருவாக்கும் பணியிலும் இப்பாடசாலை தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. கலை, கலாசாரம் சார்ந்த செயற்பாடுகளிலும் மாணவர்களை ஈடுபடுத்தும் வகையில் இப்பாடசாலை தன் வரலாற்றில் கலைவிழா எடுத்து, மலர் வெளியிட்டு மாணவர்களின் திறமைகளுக்கு களம் அமைத்துக் கொடுக்க முயற்சி செய்தமை பாராட்டுக்குரியது. இப்பணி மேலும் சிறப்புற அமைவதற்கு எனது ஆசிகள்.

திருமதி. யோ. கலையரசி,
உதவிக் கல்விப் பணிப்பாளர்,
பதுளை வலயக் கல்விக் காரியாலயம்
ஹாலி-எல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# සහකාර අධ්‍යාපන අධ්‍යක්ෂ තුමාගෙන්

14 වන වසරට පාතබන බ/හාලිඇල දෙමළ මහා විද්‍යාලය, හාලිඇල කොට්ඨාශ අධ්‍යාපන කාර්යාලයට අයත් දමිළ මාධ්‍ය පාසල් 26 අතුරින් විශේෂ ස්ථානයක් ගනි.

වසර 13ක් සම්පූර්ණ කළ මෙම කෙටි කාලය තුලදී බිහිකළ විද්වතුන් ප්‍රමාණය අතිමහත්ය.

ජාතික සමගිය ගොඩනැගීම සඳහා සිංහල මාධ්‍ය පාසල් සමග එකමුතුව කටයුතු කිරීම මුළු මහත් ලාංකික ජනතාවට පමණක් නොව ලෝකවාසී ජනතාවටද දෙනු ලබන අගනා ආදර්ශයකි.

ලොවට වැඩ දායක දූදරුවන් විශාල සංඛ්‍යාවක් බිහි කිරීමට බ/හාලිඇල දෙමළ මහා විද්‍යාලයට ශක්තිය ධෛර්ය ලැබේවායි පතමි.

ඒ.ආර්. රාමනායක<br>
හාලිඇල කොට්ඨාශ අධ්‍යාපන අධ්‍යක්ෂ,<br>
හාලිඇල.

# உதவிக் கல்விப் பணிப்பாளர்
# திரு. P. வேதாந்தமூர்த்தி அவர்களிடமிருந்து

ஆசிச் செய்தி என்பதை விட ஆலி-எல தமிழ் வித்தியாலயம் உருவான வரலாற்றை இரததினச் சுருக்கமாக முன்வைக்கிறேன். ஏனெனில் உண்மைச் சம்பவங்களும், நிகழ்வுகளும், காலத்தின் கோலத்தால் புனைகதையாக மாறுவதைச் சகிக்க முடியாது.

"ஆலி - எலயில் ஒரு தமிழ் வித்தியாலயம் தேவை" இந்தப் பணியில் 1983இற்கு முன் ஈடுபட்டவர்கள் எதையும் சாதிக்க முடியவில்லை. 1983 ஆடிக் கலவரத்தின் பின் எவருமே இது பற்றி சிந்திக்கவுமில்லை. 1984களின் நடுப் பகுதியில் இது பற்றி ஆலி-எல வீரசக்தி விநாயகர் ஆலய பரிபாலனக் குழுத் தலைவர் திரு. *P*. வாசுதேவன் அவர்களும், வர்த்தகர் கோவி செல்வராசா அவர்களும் *P*. வேதாந்தமூர்த்தி ஆகிய யானும் இது பற்றி கலந்துரையாடி இக்காலப்பகுதியின் இறுதிப் பகுதியில் வீரசக்தி முன்றலில் சிறு கூட்டம் கூடி தமிழ் வித்தியாலயம் நிறுவுவதற்கு கூட்டத்தில் தீர்மானித்தோம்.

இச்சந்தர்ப்பத்தில் முன்பு செயற்பட்ட "ஆலி-எல தமிழ்ப் பெற்றோர் சங்கம்" மறுசீரமைக்கப்பட்டு அதன் தலைவராக திரு. *P*. வாசுதேவன், செயலாளராக திரு. *P* வேதாந்தமூர்த்தியும், உதவிச் செயலாளராக கோவி செல்வராசாவும், பொருளாளராக திரு *P.K* மாதவன் நியமிக்கப்பட்டோம்

மேற்படி சங்கத்தின் தலையாய பணியாக ஆலி-எல நகரில் ஒரு தமிழ்ப் பாடசாலை உருவாக்குவது எனத் திட்டமிடப்பட்டது. இப்பணி சாதாரண பணி அல்ல. இதில் இறங்கிய பின் எமக்கு சோதனையாகவும், வேதனையாகவும் பின்வரும் விடயங்களில் அமைந்தன.

1. காணி பெறல்
2. நிதி பெறல்
3. கல்வி அமைச்சில் ஆலி எல தமிழ் வித்தியாலயத்துக்கு அங்கீகாரம் பெறல்.

மேற்படி விடயமாக பதுளை மாவட்ட அபிவிருத்திச் சபை அங்கத்தவரும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தொழிலுறவு அதிகாரியுமான கௌரவ *M* சுப்பையா அவர்களுடன் தொடர்பு கொண்டோம். அவர் அம் முயற்சியில் பூரண ஒத்துழைப்பை நல்கியதுடன் கௌரவ அமைச்சர் தொண்டமான் அவர்களுடன் தொடர்பு கொண்டு தொழிலாளர் நலன் புரி நிதி இல. 103 இல் ஆலி-எல தமிழ் வித்தியாலய கட்டட நிர்மாணத்திற்கு நிதியை ஒதுக்கினார். 1985ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்டட நிதி காணி கிடைக்காததால் வேறு வேலைத்திட்டத்துக்குப் பயன்படுத்தப்பட்டது.

என்றாலும் யாம் சலைக்கவில்லை. முன்வைத்த காலை பின்வைக்கவில்லை. மீண்டும் 1986ம் ஆண்டு மேற்குறிப்பிட்ட நிதியில் கௌரவ. *M*. சுப்பையா அவர்கள் மீண்டும் நிதியை ஒதுக்கினார். ஆயினும் காணியும், கல்வி அமைச்சின் அங்கீகாரமும் இடைஞ்சலாக இருந்தது. யாம் மீண்டும் கல்வி அமைச்சுடன் தொடர்பு கொண்டு அப்போதைய மேலதிக கல்விப் பணிப்பாளர் ஐயர் அவர்கள் மூலம் *14/06/1978* கடிதப்படியும் இல *SO/20/2/535* இன் படியும் ஆலிஎல தமிழ்ப் பாடசாலைக்கான அனுமதி கோவையில் இருப்பதை அறிந்து, பண்டாரவளைக் கல்விக் காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு அங்கீகாரம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

ஆலி-எல தமிழ் வித்தியாலயத்துக்கு காணி கிடைக்காததால் கௌரவ *M*. சுப்பையா அவர்கள் ஒதுக்கிய பணம் 3 லட்சம் மீண்டும் திறைசேரியை அடையும் என்பதை நாம் அறிந்து, உடன் நடவடிக்கையில் இறங்கினோம். ஆலிஎல வீரசக்தி விநாயகர் ஆலய பரிபாலகரும், ஆலிஎல தமிழ்ப் பெற்றோர் சங்கத் தலைவருமாகிய திரு. *P*. வாசுதேவன் அவர்களோடு தொடர்பு கொண்டு ஆலிஎல வீரசக்தி விநாயகர் கோவிலுக்குச் சொந்தமான காணியில் ஆலிஎல தமிழ் வித்தியாலயத்துக்கு கட்டடம் நிர்மாணிப்பதற்கு அனுமதியளிக்குமாறு வேண்டுகோள் விடுத்தோம். முதல் இதற்கான எதிர்ப்பும் கண்டனமும் எமக்கு பெரும் மனவேதனையை ஏற்படுத்தியது. சளைக்காமல் அவருடன் தொடர்பு கொண்டு கட்டிட நிர்மாணப் பணிகளுக்கான காணியை வீரசக்தி விநாயகர் ஆலய காணியில் பெறுவதற்கு அனுமதி கிடைத்தது.

காணி கிடைத்ததும் இதற்கான வேலைத் திட்டங்களை கௌரவ. *M*. சுப்பையா அவர்களுடன் தொடர்பு கொண்டு கட்டிட நிர்மாணப் பணிகளை பண்டாரவளைக் கல்வித் திணைக்களத்தின் அனுமதியுடன் நிறைவேற்றினோம். கட்டிட நிர்மாணம் 1987ம் ஆண்டு முடிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றாலும் 1988 பெப்ரவரி மாதம் 20ஆந் திகதி பாடசாலைக் கட்டிடம் சம்பிரதாயபூர்வமாக கௌரவ அமைச்சர் S. தொண்டமான் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

கல்வித் திணைக்களத்தின் அனுமதிக்காக தற்காலிகமாக இப்பாடசாலை ரொக்கத்தன்னை த.வி நடைபெற்றது. இக்காலகட்டத்தில் ஆலி-எல தமிழ் வித்தியாலயத்திற்கு அதிபர் ஒருவரை நியமிக்கும் பணியும் எமக்கு ஏற்பட்டது. திரு. P சுப்பையா அவர்களை இப்பாடசாலையின் அதிபராக ஆலி-எல தமிழ்ப் பெற்றார் சங்கத்தின் செயலாளர் என்ற வகையில் முயற்சித்து பண்டாரவளைக் கல்வித் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு அதிபராக நியமித்தோம். மீண்டும் ஆலி-எல தமிழ் வித்தியாலயம் 10.02.1989 அன்று முதல் இயங்கி வருகின்றது.

எமது அயரா முயற்சியால் உருவாக்கப்பட்ட கல்விக் கூடம் இன்று வளர்ந்து வளம் பெற்று, மேலும் விருத்தியடைந்து ஏறக்குறைய 600 மாணவர்கள் கல்வி பயிலும் கல்விக் கூடமாக மிளிர்வதை கண்ணால் காணும் பாக்கியம் எமக்குக் கிடைத்துள்ளமை மன நிறைவைத் தருகின்றது.

இப்பணியில் அயராது உழைத்த சகலருக்கும் வீரசக்தி விநாயகர் அருள் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்திப்பதுடன் "ஆயிரம் அன்ன சத்திரம் அமைப்பதிலும் ஒரு கல்விச் சாலையை" உருவாக்குதல் மேலான பணி என்ற பாரதியின் கோட்பாட்டுடன் மன நிறைவு பெறுகிறேன்.

**P.** வேதாந்தமூர்த்தி
உதவிக் கல்விப் பணிப்பாளர்,
ஆலி எல கோட்டக் கல்விக் காரியாலயம்
ஆலி -எல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளரின் ஆசிச் செய்தி

1989 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலை சுமார் முப்பத்தேழு மாணவர்களுடனும் ஓர் ஆசிரியருடனும் இயங்கி, இன்று அவரே இப் பாடசாலையின் அதிபராகவும், இருபத்தைந்து ஆசிரியர்களுடனும் சுமார் எழுநூறு மாணவர்களுடனும் தரம் ஒன்று முதல் தரம் பதின்மூன்று வரையும் வளர்ச்சி கண்டு வீறுநடை போட்டுக்கொண்டிருக்கின்றது.

அந்தக் காலத்தில் ஒரேயொரு கட்டிடத்துடன் இயங்கி வந்த இப்பாடசாலை இடநெருக்கடியைச் சமாளிக்கும் பொருட்டு தற்காலிகக் கொட்டில்கள் அமைத்து தடையின்றி கல்வி புகட்டிய பெருமை யாராலும் மறுக்கவோ, மறக்கவோ முடியாத உண்மையாகும்.

பாடசாலையின் இன்றைய வளர்ச்சிக்கு ஆரம்பம் முதல் சேவையாற்றி வரும் அதிபர், மற்றும் ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோரின் இடையறாத முயற்சியால் அமைச்சர்கள் பலரை பின்தொடர்ந்து உதவிகளைக் கேட்டுக் கேட்டு பல கல்வி வளங்களைப் பெற்று ஹாலி எல நகரத்தில் ஒரு தமிழ் மகா வித்தியாலயமாக சுடர் வீசிக் கொண்டிருப்பதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். கல்வி, கலை, சலாசாரம், ஒழுக்கம் என்பனவற்றுக்கு முக்கியத்துவம் அளித்து குறுகிய காலத்தில் "கலை விழாவும், மலர் வெளியீடும்" காண்பதையிட்டு பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் என்ற வகையில் பெருமிதமடைகின்றேன். மேலும் இப்பாடசாலை பல வளர்ச்சிப் படிகளைத் தாண்டி ஒரு தேசிய பாடசாலையாக விளங்கவும், பல விழாக்களைக் கண்டு எட்டுத் திக்கும் புகழ் பரப்பி சிறப்புற்றுத் திகழ வேண்டும் என மனதார வாழ்த்துகின்றேன்.

கே. பத்மநாதன்,
(பாடசாலை அபிவிருந்த்திச் சங்கச் செயலாளர்)

சாயிராம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையின் தோற்றமும் மலர்ச்சியும்

அழகிய இலங்கைத் தீவின் ஒன்பது மாகாணங்களில் ஒன்றாகிய ஊவா மாகாணம் உயர்ந்த மலைகளும், அருவிகளும், அலங்காரச் சோலைகளும் நிரம்பிய ஒரு பிரதேசமாகும். இந்த ஊவா மாகாணத்தின் தலைநகரான பதுளை மாநகரத்திலிருந்து ஆறு கிலோமீற்றருக்கு அப்பால் அமைந்துள்ள சிறு நகர்தான் ஆலிஎல என்பதாகும். சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் கலந்து வாழ்கின்ற இந்நகரைச் சுற்றிலும் சிங்களக் கிராமங்களைப் போலவே தமிழ் மக்கள் செறிந்து வாழ்கின்ற தோட்டங்களும் நிறையவே காணப்படுகின்றன. ரொக்கத்தன்னை. உனுகலை, ரொசட், நேப்பியர், உடுவரை, குயின்ஸ்டவுன், என்று பல தோட்டங்கள் இந்த நகரை மிகவும் அண்மித்தனவாக அமைந்துள்ளன.

தோட்டப் பகுதிகளில் ஆங்கிலேயர் காலத்தில் அமைக்கப்பட்ட சிறு பாடசாலைகளில் அப்பகுதிச் சிறுவர்கள் தமது ஆரம்பக் கல்வியை ஓரளவு பெற்று வந்தார். அக்காலத்தில் தோட்டங்களில் உத்தியோகம் பார்த்தவர்களின் பிள்ளைகளும், சற்று வசதியுள்ளவர்களின் பிள்ளைகளும், பதுளை மாநகரின் மிசன் பாடசாலைகளில் சென்று கற்றனர். பொதுவாக அந்நாட்களில் நகர்ப்புறங்களின் பாடசாலைகளில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மாணவர்கள் யாவரும் ஒன்றாகவே பயின்:று வந்தனர். பதுளை நகரில் "சரஸ்வதி வித்தியாலயம்" தமிழ் மாணவ மாணவியர் மாத்திரம் பயிலும் ஒரே பாடசாலையாக விளங்கியது. ஆலிஎல நகரிலும், அண்மித்த கிராமங்களிலும், தோட்டங்களிலும் வாழ்ந்த தமிழ் மக்களின் பிள்ளைகள் ஆலிஎல நகரில் அமைந்திருந்த ஒரு பாடசாலையில் கல்வி கற்றனர். இப்பாடசாலை முற்பகலில் டிக்வெல்ல சிங்கள வித்தியாலயம் என்ற பெயரிலும், பிற்பகலில் டிக்வெல்ல தமிழ் வித்தியாலயம் என்ற பெயரிலும் இயங்கி வந்தது. இப்போது ஆலிஎல என்றழைக்கப்படும் பிரதேசம் அக்காலத்தில் டிக்வெல என்றழைக்கப்பட்டதால் இப்பரதேசத்தின் பெயராலேயே பாடசாலையும் அழைக்கப்பட்டது.

1956ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கத்தின் தேசிய மயமாக்கல் கொள்கைக்கு அமைய 1964ஆம் ஆண்டு கத்தோலிக்க, கிறிஸ்தவ மிசன்களுக்குச் சொந்தமாகவிருந்த பாடசாலைகள் அரசாங்கத்தின் நிர்வாகத்திற்:குக் கீழ்க் கொண்டுவரப்பட்டு அரசாங்கப் பாடசாலைகளாக்கப்பட்டன. அதேவேளை சிங்கள மாணவர்கள் தம் தாய்மொழி மூலம் கல்வி பெற சிங்கள மொழிமூலப் பாடசாலைகள் தனியாகவும், தமிழ் பேசும் மாணவர்கள் கற்பதற்காக தமிழ் மொழிமூலப் பாடசாலைகள் தனியாகவும் இயங்குவதற்கு அரசாங்கம் வழியமைத்து வைத்தது. அதிலும் தமிழ் மொழி மூலப் பாடசாலைகள் தமிழ்ப் பாடசாலைகள் என்றும் முஸ்லிம் பாடசாலைகள் என்றும் இரு வகையாக இயங்குவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. அரசாங்கத்தின் இந்த ஏற்பாடுகளுக்கிணங்க சிங்கள மாணவர்களுக்கான பாடசாலை ஹாலிஎல மகா வித்தியாலயம் என்ற பெயரில் அதே இடத்தில் இயங்க, மொத்த தமிழ்மொழி மூல மாணவர் எண்ணிக்கையில் முஸ்லிம் மாணவர்கள் ஐம்பது சத வீதத்துக்கு மேலாக இருந்தபடியால் டிக்வெல தமிழ் வித்தியாலயம் முஸ்லிம் பாடசாலையாக்கப்பட்டு வேறோர் இடத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டது. இந்நிகழ்வுடன் ஆலிஎல நகரில் தமிழ்ப் பாடசாலையொன்று இல்லாது போய்விட்டது.

நகரிலும் சுற்று வட்டாரத்திலும் வாழ்ந்த தமிழ்ப் பெற்றார்கள் தமது கலை, கலாசாரம், சமயம் போன்றவற்றை கற்பதற்கான ஒரு பாடசாலை தம் பிள்ளைகளுக்கு இல்லாதது பெரும் குறையென உணர்ந்து, அத்தகைய ஒரு பாடசாலையை ஹாலிஎல நகரில் உருவாக்கும் முயற்சியில் ஈடுபடத் தொடங்கினார்கள். இம் முயற்சியின் முதற் கட்டமாக "ஹாலிஎல தமிழ்ப் பெற்றார் சங்கம்" எனும் பெயரில் ஓர் அமைப்பை ஏற்படுத்திக் கொண்டு செயற்படத் தொடங்கினார்கள்.

அக் காலப்பகுதியில் ஹாலிஎல பிரதேசத்தின் முக்கிய பிரமுகரான, சமூக சேவையிலும், சமய வளர்ச்சியிலும் மிகவும் ஈடுபாடு காட்டியவரும், சமாதான நீதவானுமாகத் திகழ்ந்த திருவாளர் *V.K.* மூக்கையா அவர்களது வழிகாட்டலுடன் மற்றும் பல தமிழப் பிரமுகர்கள் ஒன்று கூடி தமிழ்ப் பாடசாலையின் தோற்றத்துக்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள். ஹாலிஎல நகரில் பிரபல வர்த்தகர்களாகக் காணப்பட்ட திரு. கந்தையா, திரு. அருங்குளவன், திரு. பிச்சமுத்து, திரு. விஸ்வநாதன் போன்றோரும், திரு. பாண்டியன் நடராஜா, திரு. வாசுதேவன், திரு. வேதாந்தமூர்த்தி , திரு. நாகமுத்து, திரு. கோவி செல்வராஜா, திரு. சந்திரமோகன் திரு. கமலநாயகம், திரு. மாயழகு ஆகியோரும் இக் கைங்கரியத்துக்காக முக்கிய பங்களிப்பினை வழங்கியவர்களாவர். இவர்கள் பல சிரமங்களுக்கு மத்தியில் வெவ்வேறு இடங்களில் கூடி ஆலோசனைகளை நடாத்தி எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கமைய மேல் மட்ட அரச அலுவலர்களுடனும், அரசியல் தலைவர்களுடனும் கடித மூலமாகவும், நேரடியாகவும் தொடர்பு கொண்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊவா மாகாணக் கல்விப் பணிப்பாளர், கௌரவ ஹாலிஎல தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர், கௌரவ கல்வி அமைச்சர், கௌரவ அமைச்சர் சௌமியமூர்த்தி தொண்டமான் போன்ற பலருடனும் தொடர்பு கொண்டனர். இச் சந்தர்ப்பத்தில் பாடசாலை கட்டுவதற்கு காணி பெறும் முயற்சியிலும் இறங்க வேண்டியதாயிற்று. இவ்வாறாகத் தொடர்ந்த முயற்சிகளின் பயனாக 1978ஆம் ஆண்டு ஹாலிஎல நகரில் ஒரு தமிழ்ப் பாடசாலை அமைப்பதற்கான அனுமதி கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டது. காணி பெற கொள்ள முடியாத காரணத்தினால் பாடசாலை அமைக்கும் காரியம் பின்தள்ளப்பட்டது. இதற்கிடையில் 1983 கறுப்பு ஜூலை வன்செயல் சம்பவங்களால் உடைமைகளையும் உறைவிடங்களையும் இழந்த இப் பிரமுகர்கள் தமது இருப்பிடங்களை மாற்றிக் கொண்டதுடன், பாடசாலை அமைக்கும் முயற்சி நடுவில் தடைப்பட்டது.

1984ஆம் ஆண்டு மீண்டும் "ஹாலிஎல தமிழ்ப் பெற்றார் சங்கம்" புனரமைக்கப்பட்டு தலைவராக திரு. *T.M.P.*வாசுதேவன் அவர்களும், செயலாளராக திரு. வேதாந்த மூர்த்தி அவர்களும் நியமிக்கப்பட்டனர். இவர்கள் மேற்கொண்ட முயற்சியின் பயனாக "ஹாலி எல தமிழ் வித்தியாலயம்" அமைக்கப்படுவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அக்காலகட்டத்தில் பதுளை மாவட்ட அபிவிருத்திச் சபை அங்கத்தவரும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தொழிலுறவு அதிகாரியுமதக பணிபுரிந்த திரு. *M.* சுப்பையா அவர்களது உதவியுடன் கௌரவ அமைச்சர் தொண்டமான் அவர்களது தொழிலாளர் நலன்புரி நிதியிலிருந்து பாடசாலை அமைக்க நிதி ஒதுக்கப்பட்டாலும் காணி இல்லாத காரணத்தால் நிதி வேறு தேவைக்காகப் பயன்படுத்தப்பட்டது.

திரு *M.* சுப்பையா அவர்களின் ஒத்துழைப்புடன் 1986ஆம் ஆண்டும் பாடசாலைக்காக நிதி ஒதுக்கப்பட்டது. இம்முறையும் நிதி பயன்படாமல் போகக்கூடாது என்ற நோக்கில் ஹாலிஎல வீரசக்தி விநாயகர் ஆலய பரிபாலன சபையினருடன் பல பேச்சுவார்த்தைகள் நடாத்தியதன் பின்னர் கோவிலுக்குச் சொந்தமான காணியில் ஒரு பகுதி பாடசாலை கட்டுவதற்குப் பெறப்பட்டு 1987 இறுதிப் பகுதியில் பாடசாலை வீரசக்தி விநாகர் ஆலயத்துக்கு அருகிலேயே கட்டி முடிக்கப்பட்டது. கௌரவ அமைச்சர் சௌ. தொண்டமான் அவர்களால் பாடசாலை 1988 பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி வெகு விமரிசையாகத் திறந்து வைக்கப்பட்டது. இக் கைங்கரியத்தில் பண்டாரவளை கல்வித் திணைக்களத்தில் தமிழ்க் கல்விப் பணிப்பாளராகவிருந்த திரு. *R.* சிவசிதம்பரம் அவர்கள் வழங்கிய ஒத்துழைப்பு பெரிதும் பாராட்டுக்குரியதாகும். அடிப்படை சுகாதார வசதிகள் இன்மை காரணமாகவும். பாடசாலையைக் கொண்டு நடாத்த அதிபர், ஆசிரியர்கள் இன்மை காரணமாகவும் ஒரு வருட காலம் மூடப்பட்டிருந்த பாடசாலை குறைந்தபட்ச வசதிகளுடன் ஆரம்பிப்பதற்கு ஆயத்த நிலையை எய்தியது. பாடசாலையை ஆரமபித்து நடாத்துவதற்கு வேண்டிய ஆயத்தங்களை மேற்கொள்ளும் நோக்கில் ரொக்கத்தன்னை தமிழ் வித்தியாலயத்துடன் இணைக்கப்பட்டு திரு. *P.* சுப்பையா அதிபராக நியமிக்கப்பட்டார். 37 மாணவ மாணவியருடன் 1989. 02. 10 ஆம் திகதி முதல் ஹாலி எல தமிழ் வித்தியாலயம் தனியாக இயங்கத் தொடங்கியது.

ஹாலி எல நகரை அண்மித்துள்ள பத்துப் பதினொரு தமிழ் ஆரம்பப் பாடசாலைகளிலிருந்து மாணவர்கள் இப் பாடசாலைக்கு வந்து சேர்ந்தபடியால் மாணவர் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து இட நெருக்கடியும் ஏற்படலாயிற்று. முற்றத்தில் ஓலையினால் குடிலமைத்து வகுப்புகளை பெரும் சிரமத்துக்கு மத்தியில் நடாத்த வேண்டியதாயிற்று. அதிபரின் அயரா முயற்சியினாலும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினதும் நலன் விரும்பிகளினதும் ஒத்துழைப்பினாலும் 1991 ஆண்டு ரொக்கத்தன்னை தோட்டத்திலிருந்து ஒன்றரை ஏக்கர் காணி பாடசாலைக்காகப் பெறப்பட்டது. இக் காணி பெறும் விடயத்தில் அப்போது ஊவா மாகாண சபையில் கௌரவ தமிழ்ப் பாடசாலைகள், இந்து கலாசார, சுற்றுலாத்துறை, கூட்டுறவு அமைச்சராக இருந்த திரு *M.* சுப்பையா அவர்கள் வழங்கிய ஒத்துழைப்பு அளப்பரியது. பாடசாலைக்கு மின்சாரம், மினி ஆய்வுகூடம், போன்ற வசதிகளையும் அன்னார் மிக விரைவாகவே பெற்றுத் தந்து உதவினார். புதிய காணி கிடைத்ததன் பின்னர் பல கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டு மாணவருக்குத் தேவையான பல்வேறு வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. புதிய கட்டிடங்களுக்கான மின்சார வசதி, மனையியல் கூடத்துக்குத் தேவையான உபகரணங்கள், மற்றும் விளையாட்டுத்துறை விவசாயத்துறை, சங்கீத உபகரணங்களுடன் பாடசாலைக்குத் தொலைபேசி வசதியினையும் ஏற்படுத்தித் தந்த கடந்த காலத்தில் ஊவா மாகாண சபையின் கௌரவ இந்து கலாச்சார, கூட்டுறவு, உல்லாசத்துறை அமைச்சராகவிருந்த திரு. *M.* சச்சிதானந்தன் அவர்களையும் மறக்கவியலாது.

பாடசாலையில் மிக உக்கிரமான இட நெருக்கடி நிலவிய *1995 1996* ஆம் ஆண்டுகளில் *110' x 25'* இரு மாடிக் கட்டிடம், அலுவலக அறை, மனையியற் கூடம், குடிநீர் மற்றும் மலசலகூட வசதிகள் ஆகியவற்றை ஏற்படுத்தித் தந்ததுடன் வாசிகசாலை நூல்கள், கற்றல் உபகரணங்கள் போன்றவற்றையும் பெற்றுத் தந்த சீடா நிறுவனத்தையும் அதன் உத்தியோகத்தர்களையும், பாராட்டவே வேண்டும். தொடர்ந்தும் நிலவுகின்ற இட நெருக்கடியை நீக்குவதற்கென நாம் கேட்டுக் கொண்டதற்கிணங்க கௌரவ அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் அவர்கள் ஒதுக்கித் தந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் நிதியின் மூலம் தற்போது *90' x 25'* அளவினதான இரு மாடிக் கட்டிடத்தின் நிர்மாண வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அன்னாருக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்ள இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்கின்றோம்.

1989இல் ஆரம்பித்து பதின்மூன்றே வருடங்களான குறுகிய காலத்தில் இப்பாடசாலை பல்வேறு பௌதிக வளங்களையும், முப்பது ஆசிரிய ஆசிரியைகளையும் அறுநூறுக்கு மேற்பட்ட மாணவர் எண்ணிக்கையையும் கொண்டு காணப்படுகின்றது. தரம் 01 முதல் க.பொ.த. (உ/த) வரையான வகுப்புகள் நடைபெறுகின்றன. பதுளை கல்வி வலயத்துக்குட்பட்ட பிரசித்தமான பாடசாலைகளில் ஒன்றாக இதுவும் திகழ்கின்றது.

# தாயெனும் தெய்வத்திற்கு

தாயே நீ தரணியிலே
தேயாத வெண்ணிலவு
பத்து மாதம் கருசுமந்து
உயிர்ப்பித்தாய் உன்மகனை

தீராத துன்பம் உன்னை
தீண்டிய வேளையிலும்
அயராமல் அன்பு தந்து
ஆளாக்கி வாழ வைத்தாய்

வயிற்றுக்கு உணவின்றி
வாடிய வேளையிலும்
உதிரத்தைப் பாலாக்கி
ஊட்டினாய் என் தாயே

தேயிலை தோட்டத்தில் நீ
வருந்திய நாள் தனிலும்
வருத்தம் தெரியாமல் ~ என்னை
வளாத்த என்தாயே

புவிதனிலே வழிபடவே
தெய்வம் பல இருந்தாலும்
தாயென்னும் கடவுளுக்கு
மேலேதும் இருந்திடுமா ?

தாய் சொல்லைத் தட்டினாலும்
தறி கெட்டுப் போனாலும்
மகனுக்குத் துன்பமென்றால்
மரணிக்கும் மனமுடையாள்

அகிலத்தில் தாயின்றி
அசையும் சேயுண்டோ ?
என்தாய்க்கு இணையாக
எவருள்ளார் இவ்வுலகில் ?


ஆக்கம் : வேலு ஜீவனேசன்
தரம் : 13
கலைபிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes From :*

# GANGA METALS


*importers, suppliers & General Hardware Merchants*



No : 20D, Quarry Road,
Colombo - 12
Tel : 01-542900 074-720861

*With Best Wishes From :*

# Aradana Hardware



No : 195, Bazaar Street,
Badulla.
Tel : 055- 23273, 074 - 499618

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes From :*


# GANGA METALS

*Importers, suppliers & General Hardware Merchants*


No. 195, Bazaar Street,
Badulla.
Tel : 055- 23273, 074 - 499618

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ப/ஹாலி-எல தமிழ் மகா வித்தியாலயம்.



அன்று -1989




இன்று - 2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியகுழாமும் சிற்றூழியரும்



**அமர்ந்திருப்போர் இடமிருந்து வலமாக :**
திரு. *J.* ஜெய்காந்த், திரு. *S.* சச்சிதானந்தன், திரு. *M.* வரதராஜா, திரு. *S.* ஜெயகாந்தன், திரு. *R.S.* ராஜேந்திரன் (பிரதி அதிபர்) திரு. *P.* சுப்பையா (அதிபர்), திரு. *S.* லோகேஸ்வரநாதன் (பிரதி அதிபர்), திரு. *M.* சேகர், திரு. *S.* செந்தமிழ்செல்வன், திரு. கிருஷ் முரளிதரன், திரு. *C.* சார்ள்ஸ்.

**இரண்டாம் வரிசை இடமிருந்து வலமாக :**
திரு. *S.* சந்தியாகு (நூலக சிற்றூழியர்) திருமதி *S.* சவரி, செல்வி *R.M.* பிரியதர்ஷினி, திருமதி. *S.* சாந்தி, திருமதி. *P.* வசந்தராதேவி, திருமதி *R.* சரோஜா, திருமதி. பிரசங்கா துஷாரி, திருமதி *J.F.B.* மரியதாஸ், திருமதி *N.* பாமினி, செல்வி *M.* மனோன்மணி, திருமதி *A. L.* பாரஜா உம்மா, திருமதி. *K.* செல்வாம்பாள், செல்வி. *A.* யோகேஸ்வரி,

**மூன்றாம் வரிசை இடமிருந்து வலமாக :**
திருமதி *S.* அம்பிகா, செல்வி *S.* சுதர்ஷினி, செல்வி. *P.* ஸ்டெலா, திருமதி. *M.* கோவிந்தராஜா,

**சமுகமளிக்காதோர் :** திருமதி. *N.* பரமேஸ்வரி, திருமதி. *T.* இந்திராணி, திரு. *G.* சசிகரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய விதை நாளைய பயிர்

"அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது அதனிலும் அரிது கூன் குருடு நீங்கிப் பிறப்பதரிது" என ஒளவைப பிராட்டி மனிதர்களின் பிறப்பு நிலை பற்றி ஆராய்ந்து கூறியுள்ளார். உண்மையில் பிறவி இலட்சணங்களும் இடைக்காலத்தில் சந்தர்ப்பச் சூழ்நிலையின் விதியின் விளைவுகளாய் ஏற்படும் உடல், உள ரீதியான மாற்றங்களும் மனிதனின் வாழ்வை பல்வேறு வகைகளில் திசைதிருப்பி விடுகின்றன.

பிள்ளைகளின் பிறப்புநிலைப் இலட்சணங்களோடு கூடிய வளர்ச்சியினைப் பற்றி சற்று நோக்கினால் பிள்ளைகளின் வளர்ச்சிக்கும், விருத்திக்கும் நியமப் பருவங்களுடன் இணைந்து தனித்துவமான வளர்ச்சியும் காணப்படுகின்றது. குழந்தைகளின் நுண்மதி வளர்ச்சி, மனவெழுச்சி வளர்ச்சி, பரம்பரை, சூழல், உடல் நலம் போன்ற பல்வேறுபட்ட தாக்கங்கள் அவர்களின் வாழ்க்கையில் குறிப்பாக கற்றலில் தாக்கங்களை ஏற்படுத்தும் காரணிகளாக அமைகின்றன.

வகுப்பறையில் கற்றல் கற்பித்தல் நடைபெறும் போது மீள்திறனுடைய பிள்ளை. மெல்லக் கற்கும் பிள்ளை என பொதுவாக நாம் இனங்காணும் வகையில் மாணவர்கள் செயற்பாடுகளில் ஈடுபடுவதை அவதானிக்கின்றோம். மேலைத்தேய அறிஞர் "ஜோன் ஸ்ரூவெட் மெல்" என்னும் அறிஞரின் கூற்றுப்படி நுண்மதி ஈவு 130 இற்கு மேல் உள்ள மாணவர்கள் மீள்திறன் கொண்டவர்களாக இருககின்றனர். குறிப்பாக 2% வீதமானோர் இவ்விதம் காணப்படுவர் என்றும் 75 - 85 இற்கும் இடைப்பட்ட நுண்மதி ஈவு கொண்டோர் சாதாரண கற்றலில் ஈடுபடுகின்ற போது விசேட கவனம் செலுத்த வேண்டிய மாணவர்களாக பெற்றோரிடமிருந்து ஆசிரியர்களிடம் ஒப்படைக்கப்படுகின்றார்கள்.

"இன்றைய விதை நாளைய பயிர்" எனும் முதுமொழிக்கிணங்க நாளைய தலைவன் என்ற இலட்சியக் கற்பனையோடு பள்ளி வரும் மாணவர்களின் உடல், உள, வளர்ச்சி பற்றிய ஆய்வு ரீதியான கண்ணோட்டத்தோடு குறிப்பாக மலையகத்துச் சிறார்களின் கல்வி நிலை பற்றிச் சிந்தித்தால், சிறந்த சமுதாய மனவெழுச்சிப் பொருத்தப்பாடு கிடைப்பது அரிது என்பது கண்கூடு.

"எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே" என்ற கவிக் கூற்றானது குடும்பச் சூழலும். சமூகச் சூழலும் பிள்ளையின் வளர்ச்சியில் தாக்கங்களை ஏற்படுத்தும் முக்கிய கூறுகள் என்பதைக் காட்டி நிற்கின்றது. எதிர்காலத்தில் நல்ல பிரஜைகளை உருவாக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புகளோடு பெற்றாரும் ஆசிரியரும் பிள்ளைகளை அரவணைக்கும் போதும், அவர்களின் உடல், உள, தேவைகளை சந்தர்ப்பமறிந்து பூர்த்தி செய்கின்ற போதும் அவை பிள்ளைகளின் ஆர்வத்தைத் தூண்டி, ஆக்க முயற்சிக்கு துணையாக அமைகின்றன. பெற்றோர் தனது பிள்ளைகளின் நலன் கருதி செய்கின்ற காரியங்கள் அன்பு, காப்பு, கணிப்புத் தேவைகளை பூர்த்தி செய்கின்றதாக இருக்க வேண்டுமே தவிர அவர்களின் இயல்பூக்கங்களை மழுங்கடிப்பதாக அமைந்து விடக் கூடாது.

பிள்ளைகளின் மத்தியில் பெற்றோர்கள் வணங்கத்தக்கவர்களாக, அன்புள்ளவர்களாக, பிள்ளைகளை வழிநடாத்தும் ஆசான்களாக, அவர்களின் நலனில் அக்கறை கொண்டவர்களாக. அவர்களின் திறமைகளை பாராட்டி ஊக்குவிப்பவர்களாக சமய விழுமியங்களைக் கடைப்பிடிப்பவர்களாக இருப்பார்களாயின் நிச்சயமாக பிள்ளையின் எதிர்காலம் நல்லதொரு இலக்கை அடையும் என்பது உறுதி. எனினும் சிலவேளை அமைதியற்ற குடும்பச் சூழல், நெறிபிறழ்ந்த நிலை, வறுமை நிலை என பல்வேறு இடைத் தாக்கங்கள் தீய பாதிப்புகளை ஏற்படுத்த முனைந்தாலும் பிள்ளையின் எதிர்காலம் பற்றிய நல்லெண்ணம், மனவுறுதி, சவால்களை சமாளிக்கக்கூடிய பொறுப்புணர்ச்சி பிள்ளைகளின் உணர்வுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் பண்பும் பெற்றாரிடத்தில் வெளிப்படுமாயின் அவை பிள்ளைகளை சிறப்புடன் வழிநடத்தும் கருவிகளாக அமையும்.

பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு பெற்றோர்களின் காத்திரமான ஒத்துழைப்பும் அக்கறையும் அவனது வாழ்க்கையின் இரண்டாவது படியான பாடசாலைக் கல்வி அவனுக்குச் சிறப்பாக அமைவது திண்ணம். அத்துடன் பள்ளியெனும் நந்தவனத்தில் தானும் ஒரு மலராக மணம் வீசி புகழ் படைக்க பிள்ளைக்கு ஆசிரியரானவர் நல்லாசிரியருக்குரிய பண்புகளை போதனையில் மாத்திரமன்றி சாதனையில் காட்டும் ஆசானாக தொழில் சார்ந்த பயிற்சியோடு பொறுப்புணர்ச்சியுடன் கூடிய கடமையாகச் செய்வார்களாயின் "எழுத்தறிவித்தவன் இறைவனாவான்" என்ற புண்ணிய நாமத்துக்கு உரித்துடையவராவர். மாணவர்களுக்கு வெறும் ஏட்டுக் கல்வியை மாத்திரமன்றி தொழில் சார்ந்த தொழிநுட்பம், கலைத்திட்டம் சார்ந்த செயற்பாடுகளைச் செய்வது சாலச்சிறந்தது. அத்துடன் விசேட உதவிகளை நாடி நிற்கின்ற பிள்ளைகளுக்கு ஆசிரியர் அவர்களது உடல், உளக் குறைபாடுகளுக்கு ஏற்ப கற்பித்தல், ஊக்குவித்தல், நடவடிக்கைகளை மேற்கொள்ளல், என்பவை ஏழைச் சிறார்களின் நலமான வாழ்வுக்கு உறுதுணையாக அமையும். வளங்கள் அனைத்தும் எமது எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப முழுமையாக கிடைத்துவிடுவதில்லை. குறைந்த வளங்கள் இருப்பினும் இயலும் வரை செம்மைப்படுத்தி அர்ப்பணிப்புச் சிந்தனையுடன் ஆசிரியர்கள் செயற்படுவார்களாயின் மாணவர்களின் வாழ்வு ஒளிமயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றாரும் ஆசிரியர்களும் பிள்ளைகளின் எதிர்காலத்தை நல்வழிப்படுத்த பாடுபட்டாலும் சுயமாகச் சிந்தித்து செயற்படும் வயதையுடைய மாணவர்கள் நல்லொழுக்கப் பண்புகளை கடைப்பிடிப்பவர்களாக இருத்தல் வேண்டும். பெற்றாரின் அன்பு, காப்பு, கணிப்பினைப் பெற்ற பிள்ளை நல்லாசிரியரின் அறிவுரைகளை பின்பற்றுதல், நல்ல நண்பர்களின் சகவாசம் தெளிவான இலக்கினை அடையும் இலட்சியம், தாய்நாட்டுப் பற்று கொண்டவர்களாக உருவாக வேண்டும்

"ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனை சான்றோன் எனக் கேட்ட தாய்" என்ற வள்ளுவனின் வாக்கிற்கிணங்க தாயானவள் பிள்ளையை ஈன்ற பொழுதை விட சான்றோன் என கற்றோர் முன் முன்னிலைப்படுத்தும் போதே பெருமகிழ்வும் பெருமையும் கொள்கின்றாள். அத்தகைய பெருமையை பெற்றார்க்கு பெற்றுத் தருவதற்கு ஆசிரியர் துணையாகின்றார். பயனும் புகழும் பிள்ளையைச் சென்றடைகின்றது. இத்தகைய சிறப்புகள் அனைத்தும் தாய் நாட்டின் உயர்வுக்கு உரமாய் அமைகின்றன. இவை அனைத்தும் அரும்பும் வியர்வை உதிர்த்து புவி மேல் ஆயிரந் தொழில் செய்யவும், நாட்டிலே அறம் கூட்டவும் தேட்டமின்றி விழியெதிரே கண்கண்ட தெய்வங்களாக நாம் விளங்கவும், துணைபுரியும் அன்று புரட்சிக் கவி பாரதியார் கண்ட கனவு நனவாகும். சிந்திப்போம் செயல்படுவோம்.



ஆசிரியர்:
ஆக்கம். ***S.R.S.*** சச்சிதானந்தன்


*With Best Wishes From :*

# VIJAYA TEXTILES



No : 63, Ragala Bazaar,
Halgran-oya

Phone : 052-65220
Fax : 052-65520


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Plight Of English Education In The Plantation Sector.

In an era when the importance of English education is widely talked of, it is, indeed, pathetic to reveal the unhealthy state of English education in the plantation sector.

Most of the schools in plantation sector are under staffed and only in a few schools you find and English teacher. This issue needs an immediate solution since, according to the newly introduction educational reforms, English is taught grade one onwards and the children are expected to equipped with certain number of vocabulary during their first and second year of schooling ,before switching on to the first course book.

The English text books are designed taking privileged student students into consideration so they demand a lot of simplification and other alternative activities to suit the level of the student making teachers unable to handle them unless they're English teachers. Only the English teachers could handle them as they require ample teaching tactics and strategies.

There is a reason being the non- appointment of English teachers to plantation sector schools. That is when English teachers were recruited, in 1995, in the Badulla district, they were posted to difficult areas a verse in their appointment letter stated that serving in difficult area for two years is compulsory and, also, despite in a very few schools all the other Sinhala medium schools had sufficient English teachers. Even though some of the teachers, who posted to these areas managed to get themselves posted to plantation sector using political influence. This led to a serious problem as more than two teachers appointed to schools where there were only two classes to teach English they could teach none other than English as they had read in the Sinhala medium. When the principal complained of insufficiency of teachers, they were told that teachers could not be appointed since their schools had, already, been over staffed. This made the principals to urge the director of education to transfer the excess English teachers from their schools to were the vacancies excited. Some launched malicious propaganda saying that Tamils were against Sinhalese serving in the plantation sector.

Anyway, this issue should be immediately looked into as teaching English in the primary classes is essential if not the students, no wonder, will find it difficult to pick up English in the secondary classes which would lead to build up a negative attitude towards English. We should not forget that teaching of English has been extended to the G.C.E (A/L) and the teaching the (A/L) curriculum in the English medium has, also, been commenced in some schools. So, the English educated will have better chance than the others in the future. If we do not take steps to solve this issue, the accessibility of white collar jobs to the plantation community will be only a dream.

Mr. Krish Muralidaran
Teacher

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Plight Of English Education In The Plantation Sector.

In an era when the importance of English education is widely talked of, it is, indeed, pathetic to reveal the unhealthy state of English education in the plantation sector.

Most of the schools in plantation sector are under staffed and only in a few schools you find and English teacher. This issue needs an immediate solution since, according to the newly introduction educational reforms, English is taught grade one onwards and the children are expected to equipped with certain number of vocabulary during their first and second year of schooling, before switching on to the first course book.

The English text books are designed taking privileged student students' into consideration so they demand a lot of simplification and alternative activities to suit the level of the student making teachers unable to handle them unless they're English teachers. Only the English teachers could handle them as they require a variety teaching tactics and strategies.

There is a reason being the over appointment of English teachers to plantation sector schools. That is when English teachers were recruited, in 1995, in the Badulla district, they were posted to difficult areas adverse to their appointment letter stated that serving in difficult ears for two years is compulsory and, also, despite in a very few schools all the other Sinhala medium schools had sufficient English teachers. Even though some of the teachers, who posted to these areas managed to get themselves posted to plantation sector using political influence. This led to a serious problem as more than two teachers appointed to schools where there were only two classes to teach English they could teach none other than English as they had read in the Sinhala medium. When the principal complained of insufficiency of teachers, they were told that teachers could not be appointed since their schools had, already, been over staffed. This made the principals to urge the director of education to transfer the excess English teachers from their schools to were the vacancies existed. Some launched malicious propaganda saying that Tamils were against Sinhalese serving in the plantation sector.

Anyway, this issue should be immediately looked into as teaching English in the primary classes is essential if not the students, no wonder, will find it difficult to pick up English in the secondary classes which would lead to build up a negative attitude towards English. We should not forget that teaching of English has been extended to the G.C.E (A/L) and the teaching the (A/L) curriculum in the English medium has, also, been commenced in some schools. So, the English educated will have better chance than the others in the future. If we do not take steps to solve this issue, the accessibility of white collar jobs to the plantation community will be only a dream.


Mr. Krish Muralidaran

Teacher

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Wishes From :

# New Golden Jewellers



No : 4/1, Old Post Office Road,
Welimada.
Tel : 057-45002

With Best Wishes From :

# Jayachithra Jewellers



No : 82, Lower Street,
Badulla.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீகமே உயர்ந்த வாழ்க்கையாகும்

உலகியலில் எல்லோரும் சுகத்தைத் தேடியலைகின்றனர். ஆனால் உண்மையில் சுகம் என்பது என்ன? அது எப்படிக் கிடைக்கும் என்பதைப் புரிந்து கொள்ளாமல் பிரமையில் போகங்களை சுகம் என்று நினைத்து அவற்றைப் பெறுவதற்கு முயல்கின்றார்கள். அதற்குத் தடை ஏற்படும் போது குரோதம் அடைகின்றார்கள். இக்குரோதம் மனதில் தோன்றும் போது பிறருக்குத் தீங்கு விளைவித்து பலவித பாவச் செயலில் ஈடுபடுகின்றார்கள். முடிவில் நோய், நொடி, துயரம், அவமானம், அவப் பெயர், கலக்கம், அச்சம், அமைதியின்மை, கொந்தளிப்பு ஆகிய பலவிதத் தொல்லைகளையும் ஏற்படுத்திக் கொள்கின்றார்கள். இவற்றை உணராத ஜீவன்கள் அடையும் இன்னல்களைப் பார்க்கும் போது பரம்பரை பரம்பரையாக வழிவந்த ஞானிகளாலும், முனிவர்களாலும் காண்பிக்கப்பட்ட, வாழ்ந்து காட்டிய ஆன்மீக வாழ்க்கை எங்கே? என்று கூறத் தோன்றுகின்றது.

நேர்மை, உண்மை, சுதந்திரம், சமத்துவம், உதவும் உள்ளம் உலகையும் அழகையும் ரசிக்கும் ஆனந்த அனுபவம். இவைகளை உணர்ந்திருப்பவர்கள் தான் ஆன்மீக ஈடுபாட்டைக் கொண்டவர்கள் எனலாம்.

இவ்வுலகம் ஒன்றுக்கொன்று சார்ந்தும் ஈர்த்தும் ஒரே நெறியில் இயங்குவதை அவதானிக்கலாம். அதேபோல் ஒன்றுக்கொன்று உதவியாகவும் வாழ்கின்றது என்பதை ஆன்மிக வாதிகள் புரிந்து கொண்டவர்கள்.

புல், பூண்டு, செடி, கொடி, தாவரம், விலங்கினம், கடல், காற்று, , ஒளி, மலை என்று எல்லாமே ஒன்றுக்கொன்று உதவியாக வாழத் தான் படைக்கப்பட்டுள்ளன. இதுதான் பிரபஞ்ச உண்மை. பகை, வெறுப்பு, ஏமாற்றுதல், வஞ்சகம், பொறாமை, பேராசை, கஞ்சத்தனம், ஆணவம் போன்ற தீய குணங்கள் நம்மை வாட்டுகின்றன. இவற்றை அகற்றிட அல்லது கட்டுப்படுத்தி ஒரு சமநிலையுடன் ஏற்றுக்கொள்வதற்கு எதையும் சமத்துவத்துடனும், சிறப்புடனும் ஏற்றுக்கொள்ளும் பக்குவம் பெற்றிருப்பது தான் ஆன்மீக வாழ்க்கையாகும்.

அன்பு, கருணை, நல்லெண்ணம், பொருட் செல்வம், பொது நலம், அமைதி, ஆனந்தம் ஆகியவை எல்லாம் வந்தடைவதைத் தடுக்கும் அரண்களாக தீய குணங்கள் செயற்படுகின்றன. என்பதை ஏற்றுக்கொள்கின்றோம். அத் தீய குணங்களைத் தடுக்கும் வழி எது என்பதை நாம் கண்டுபிடிக்க வேண்டும் இவ்வழியைத் தான் இளம் வயதிலேயே சுயமாக ரமணசுவாமிஜி அவர்கள் கண்டுபிடித்தார். இவ்வுண்மையை உணர்ந்து அதைத் தன் வாழ்க்கையாக்கியவர் மகாத்மா காந்தியடிகள்.

இவ்வாறெல்லாம் மாபெரும் மனிதர்களைப் போல் எல்லோராலும் ஆக முடியுமா? என்று நீங்கள் கேட்கலாம். முடியும். அவ்வாறு உயர்ந்து கொண்டு போவதற்கு நமது கடமைகளில் ஆன்மீக அடிப்படைகளைக் கொண்டு வருவதன் மூலம் வலிமையைப் பெருக்கிக் கொள்ளலாம். வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடையலாம்.

நாம் மகாத்மா காந்தியாக இருக்க வேண்டியதில்லை. அவரின் குணங்கள் எங்களிடத்தில் இருக்கலாம் அல்லவா? சுவாமி விவேகானந்தராக இருக்க வேண்டியதில்லை. அவரின் வைராக்கியங்களும், மனவுறுதியும் எம்மிடத்தில் இருக்கலாமல்லவா?

உலகில் வெற்றிபெற்றவர்களின் வாழ்க்கை வரலாறுகளைப் பற்றிப் படிக்கும் போது தென்படுவது என்ன?. எந்தத் தொழிலைச் செய்து பெருமையடைந்தார்கள் ?. எந்தச் சேவையில் இறங்கி மனம் நிறைவு பெற்றார்கள்? எந்தப் பணி அவர்களுக்கு தன்னம்பிக்கையையும் சுய கௌரவத்தையும் தந்தது? என்று நாம் சிந்திப்போமானால் அங்கு தான் சூட்சுமம் இருக்கின்றது. அச் சூட்சுமம் தான் ஆன்மீக அடிப்படை என்பதை அறிந்து வாழ்க்கையைக் கடைப்பிடித்துள்ளனர் என்பது புலனாகின்றது.

ஆன்மீக வாழ்க்கையை தனது வாழ்க்கைக்குக் கொண்டுவர வேண்டும் என்று திடசங்கற்பம் மனதில் தோன்றுவதன் மூலம் தன்னைத் தானே உயர்த்திக் கொள்ள முடியும். மனிதன் மிகுந்த எச்சரிக்கையுடனும் முயற்சியுடனும் எப்போதும் தம் மேன்மைக்காக மேலும் உயர வேண்டும் எனின் காமக் குரோதங்கள், சினம், கோபம், சுயநலம், பொறாமை, தீய எண்ணங்கள், சோம்பல், பாவச் செயல்களில் ஈடுபடுதல் போன்றவற்றிலிருந்து விடுபட்டு புலனடக்கம், மனவொருமைப்பாடு,சகிப்புத் தன்மை, விவேகம், வைராக்கியம், முதலிய நற் பண்புகளை வளர்த்துக்கொண்டு வாழ்க்கையின் உயர்வுக்கு வழிதேடும் போது அங்கு ஆன்மீகம் பிறக்கின்றது.

ஆன்மீகமே சிறந்த தலைமைத்துவத்தைத் தருகின்றது. ஆன்மீகமே முகாமைத்துவத்தை வழங்குகின்றது. இதுவே சுயமாக நிற்கக் கூடிய தனித் தன்மையை பெற்றுக் கொடுக்கின்றது.

இவ்வாறான மகத்துவத்தை நாம் அறியாது ஆன்மீகம் என்பது சன்னியாசம், பிரம்மச்சரியம், மடம், துறவறம் என்று பிழையான எண்ணங்களை மனதிற் கொண்டு வாழ்வின் உயர்வை அணையிட்டுத் தடுத்து நிறுத்திக் கொள்கின்றோம்.

முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் விஞ்ஞான அறிவு எல்லாரிடமும் இல்லை. ஆனால் மூவாயிரம் ஆண்டுளுக்கு முன்பதாக எல்லோரிடமும் மனம், சிந்தனை என்ற அற்புதக் கருவி இருந்தது. அச்சிந்தனை மூலம் மனிதர்கள் எவ்வளவு தூரம் போக முடியுமோ அவ்வளவு தூரம் சென்றுள்ளார்கள். நமது ஞானிகள் கண்ட ஞான விளக்கம் எல்லாம் இன்று அற்புதமாகப் போற்றப்படுகின்றன. ஞானிகள் அன்று கண்ட அதே முடிவுக்கு இன்றைய விஞ்ஞானிகள் ஆதாரங்களைக் கண்டு ஒப்புக் கொள்கின்றனர். ஆகவே வாழ்க்கை மனிதனை உயர்த்தும் என்பதை விஞ்ஞானிகள் ஏற்றுக் கொள்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய விஞ்ஞான தொழிநுட்பப் புரட்சியும் போட்டியும் தான் மனித சமுதாயத்தின் ஆன்மீக சிந்தனைகளை அகற்றிக் கொண்டிருப்பதை நாம் கண்களால் காண்கின்றோம். மனித சமுதாயத்தின் சிந்தனை மாற்றத்தையே பரிணாம வளர்ச்சியில் கூட ஆன்மீகப் பண்புகள் வளர்வதன் மூலம் மனித தேவைகளிலும் ஆன்மீகக் கருத்துக்கள் பின்னிப் பிணைந்திருக்க வேண்டும்.

பகை, வெறுப்பு, போட்டி முதலிய கெட்ட குணங்கள் எல்லாம் இயற்கை லயத்தின் விரோதிகள் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். இவற்றை வளர்ப்பதன் மூலம் வாழ்க்கை உயர்ந்து விடப் போவதில்லை.

ஆன்மீக வாழ்க்கையின் இரகசியத்தை புரிந்து கொள்ள வேண்டும். ஆன்மீகம் என்ற மந்திரத்தை நாம் பாதுகாக்க வேண்டும். எமக்கு ஏற்படும் சங்கடங்களுக்கு என்ன காரணம் என்பதை நமக்குள் நாமே வினா எழுப்ப வேண்டும். சரியாக வாழ்வதற்கும் உயர்ந்த வாழ்க்கை வாழ்வதற்கும் நம்மை நாமே தயார்படுத்திக் கொள்ள வேண்டும். ஆன்மீகப் பாதையில் நாம் காலெடுத்து வைக்கும் போது எங்களுடைய முரண்பாடுகளும் முடிவுக்கு வருகின்றது. அப்பொழுது உயர்ந்த இலட்சியத்தை நோக்கி நாம் பயணம் செய்கின்றோம் என்ற உள்ளுணர்வு பேசுவதையும் உயர்த்துவதையும் தெரிந்து கொள்ள முடியும்.

ஆன்மீக வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படைகளை முறையான முன்பயிற்சி மூலம் எடுத்துக் கொள்ள வேண்டும். பயிற்சியின்றி ஓட்டப்பந்தயத்தில் வெல்ல முடியாது என்பதை உணர வேண்டும். பயிற்சி என்பது கட்டாயம் அவசியமானதாகும். சோளம் விதைத்தால் சோளம் விளைகின்றது. இதை இந்த உலகில் கண்டு உணரும் மக்கள் இதே விடயம் தான் வாழ்விலும் திகழ்கின்றது என்பதை ஏன் புரிந்து கொள்வதில்லை? எனறு கேட்கின்றார் ஜேம்ஸ் அலன்.

நல்லெண்ணம், நல்ல செயல், நல்ல பயனைக் கொடுக்கும். தீய எண்ணம் தீய செயலாகித் தீமையைக் கொடுக்கும் என்பதை ஏன் புரிந்து கொள்வதில்லை? நல்லதும் கெட்டதும் நமக்குள் தான் இருக்கின்றது.அந்தத் தேர்வில் வெற்றி பெறும் வாய்ப்பையும் வல்லமையையும் தவற விடக்கூடாது.

இவற்றைப் பள்ளியில் போதித்தார்களா அல்லது பெற்றோர்கள் வீட்டிலே நமக்குச் சொல்லிக் கொடுத்தார்களா? வாழ்வில் ஒவ்வொரு சம்பவத்தையும் நாமே அனுபவித்து அனுபவம் மூலம்தான் நாம் அறிவு பெற வேண்டும் எனின் அதற்கு வாழ்நாள் போதாது.

ஆகவே ஆன்மீக வாழ்க்கைக்கு எம்மை இட்டுச் செல்ல வேண்டும் என்றால் நாம் நமது முன்னோரது அனுபவங்களிலிருந்து பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். ஸ்ரீ இராமகிருஷ்ணர் பள்ளிக்குச் சென்றா ஆன்மீகத்தைக் கற்றார்? இல்லை. புலன்களுக்கு அப்பால் சென்று ஆன்மீகத்தைப் பெற்றார் என்பதை நாம் அறிவோம். ஆகவே நமக்கு வழிகாட்டுபவர்கள் தேவை. குருவின் உபதேசம் தேவை. முன்மாதிரியாக இருப்பவர்கள் தேவை. வெற்றிவாகை சூடியவர்களுடன் பேசுங்கள், ஆலோசனையைக் கேளுங்கள்.

வரலாற்றிலே பதஞ்சலி, திருமூலர்,புத்தர், திருவள்ளுவர், ஆதிசங்கரர், இராமகிருஷ்ணர், விவேகானந்தர், ரமணர் என எத்தனையோ மகான்கள் காத்திருக்கின்றார்கள். அவர்கள் இட்டுச் சென்ற ஆன்மீகக் கருத்துக்கள் மனித வாழ்க்கைக்குத் தேவைப்படுகின்றது எனபதை உணருங்கள். அவற்றை வாழ்க்கையில் செயற்படுத்துங்கள்.


தேவைப்படுகின்றது என்பதை உணருங்கள். அவற்றை வாழ்க்கையில் செயற்படுத்துங்கள்.

இவ்வாறே அரசியல் தர்மம் காத்த நெப்போலியன், ஆபிரகாம் இலிங்கன், மகாத்மா காந்தி ஆகியோரைப் போல் தலைமைத்துவ, முகாமைத்துவ நுணுக்கங்களைக் காணுங்கள். அங்கு ஆன்மீகம் எவ்வாறு வழிகாட்டியுள்ளது என்பதை உணர்வீர்கள். அப்பொழுது உங்களுக்கு தன்னம்பிக்கை பிறக்கும். தொல்காப்பியர் தொட்டு பாரதியார் வரை புலவர்கள் பலர் கவிபாடியிருக்கின்றார்கள். அவர்களின் கவிதை நயங்களில் எல்லாம் ஆன்மீகக் கருத்துக்கள் நிறைந்து கிடப்பதை உணருவீர்கள்.

உயர்ந்த ஆன்மீக எண்ணங்களை வெற்றிப் பாதையில் கொண்டு செல்வதற்கு இது ஒரு சிறு துளி. மீண்டும் ஒருமுறை படித்துப் புரிந்து கொள்ளுங்கள். உயர்ந்தவர்களின் வரலாறுகளை திரும்பத் திரும்பப் படித்து ஆன்மீகத்தை வாழ்க்கைக்கு கொண்டு வந்து நீங்களும் உயருங்கள்.

வாழ்க்கையின் வெற்றிக்கு வாழ்த்துக்கள்

ஆக்கம்: திரு. ஜெயராமச்சந்திரன் ஜெயகாந்த்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes From :*

# SARMILA TRADERS

**Dealers in :**

**T.V. Radio, Electronic & Fancy Goods**




NO : 97, RAGALA BAZAAR,
HALGRANOYA.
TEL : 052-65343.

*With Best Wishes From :*

# Ranjanee's

Whole Sale & Retail.

Dealers In Vegetable & Potatoes



No.92, RAGALA BAZZAR,
HALGRANOYA.


☎ 052-65406,
☎ 052-65390,
072-410205

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Wishes From:

# Rahino Steel

**MANUFACTURERS OF STEEL CUPBOARDS, FILING CABINETS, OFFICE CUPBOARDS TABLES, BEDS, DRESSING TABLES, CHINA SHOW CASES ETC.**



**No. 51/27, St. Mary's Lane**
**Mattakkuliya, Colombo-15,**
**Sri Lanka.**
**Tel: 01-521474 Fax: 01-525786**
**E-Mail: rahino.steel@softhome.net**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டையின் சுயசரிதை

என் பெயர் பட்டுச்சட்டை நான் இளமையில் மிகவும் அழகாய் இருந்தேன். என்னில் அழகான பூக்கள் தைக்கப்பட்டிருந்தன. கடையின் முதலாளி கந்தசாமி தனது மகள் காமினியின் பிறந்தநாள் பரிசாக என்னை அவருக்குக் கொடுத்தார். அவருக்கு என்னை மிகவும் பிடித்துவிட்டது. அவளிடம் வண்ண வண்ணச் சட்டைகள் பல இருந்தாலும் அவற்றிலும் அவள் என்னையே விரும்பினாள். செல்லும் இடங்களுக்கு எல்லாம் என்னையே கூடுதலாக அணிந்துச் சென்றாள். அவளது சிநேகிதிகள் என்னைத் தொட்டுத் தொட்டுப் பார்த்துப் பாராட்டினார்கள். எனக்குப் பெருமை பிடிக்கவில்லை. ஆனால் இந்தப் பெருமை எல்லாம் சிலகாலமே நீடித்தது. காலப்போக்கில் எனது உடலில் சிறு வெடிப்பு உண்டாயிற்று. நூல் இழுபடத் தொடங்கியது. அதனோடு எனக்கும் காமினிக்கும் இருந்த தொடர்பு அற்றுப்போனது என்னை காமினியின் தாய் தன்னிடம் வேலை செய்யும் கண்ணம்மாவின் மகள் ஈஸ்வரிக்குக் கொடுத்தாள் ஈஸ்வரிக்கு நான் கிடைத்தது பெரும் ஆனந்தம் என்னைத் தனது சிறிய றங்குப் பெட்டியில் பூட்டிப் பங்குவப்படுத்தினாள் ஈஸ்வரி தான் செல்லும் திருமணம் போன்ற நிகழ்ச்சிகள் பலவற்றிற்கும் என்னையே அணிந்தாள் தன் தோழிக்குக் காட்டி பெருமை அடைந்தாள் அவள் என்மீது கொண்ட ஆசையைக் கண்டு எனக்கு வியப்பாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது ஏழை வீட்டு ராணியாக நான் வாழ்ந்து வந்தேன் ஆனால் எத்தனை நாள் தான் என் இளமை நிலைக்கும் எனக்கு முதுமை வந்துவிட்டது. எனது உடலில் பல இடங்களில் காயங்கள் ஏற்பட்டது. ஈஸ்வரியும் வளர்ந்து விட்டாள் அவளுக்கு நான் அளவில்லாது போய்விட்டேன் சிறிது காலம் என்னை வீட்டில் போட்டுக்கொண்டிருந்தாள் பின் அவளும் என்னை புறக்கணிக்கத் தொடங்கி விட்டாள். இன்று எனது இடம் குப்பைத் தொட்டிதான்.

ஆக்கம் : S. குமுதினி
தரம் : 7B

# கல்விச் செல்வம்

செல்வத்தில் சிறந்ததாக விளங்குவது கல்விச் செல்வாகும். இது பொன், பொருள் முதலிய பொருட் செல்வத்தைப் போல் பங்காளிகளாலும், கள்வராலும், கவரப்படாத செல்வம் ஆகும், மற்றைய செல்வங்களைப் போல் நெருப்பால், வெள்ளத்தால் காற்றால் அழியாதது ஆகும் கொடுத்தால் குறைவுபடாததும், கொடுக்க கொடுக்க பெருகுவதும் கல்விச் செல்வமே பொருட் செல்வம் ஒருவரிடம் தங்கி நில்லாது, ஆனால் கல்விச் செல்வமோ ஒருவர் இறக்கும் போதும் அவருடன் இணைந்து இருப்பதாகும். பொருட் செல்வத்தை சேர்க்கும் போது கஷ்டப்படுவதுடன் உடம்பையும் வருத்த வேண்டியும் இருக்கும். சில வேளை இப் பொருட் செல்வத்தை ஈட்டும் போது பலருடன் பகையும் ஏற்படும் ஆனால் கல்விச் செல்வம் பகைவரையும் நண்பர் ஆக்கும்.

"பிச்சை புகினும் கற்கை நன்றே" என ஒளவையார் கல்வியின் முக்கியத்தை உணர்த்தியிருக்கிறார். இது மட்டுமின்றி எண்ணும் எழுத்தும் கண்கள் பொன்றது என திருவள்ளுவரும் கூறியுள்ளார் கல்விச் செல்வம் கரை இல்லாதது இதை எந்த வயதிலும் எப்போதும் கற்று சென்ற இடம் எல்லாம் புகழ் பெற முடியும். படித்தோர் சபையில் கற்றவருக்கே நல்ல மதிப்பு கிடைக்கும் எனவே செல்வங்களுக்குள் சிறந்த செல்வம் கல்விச் செல்வமே ஆகும்.

K. தர்ஷினி
தரம் 04
ப/ஆலி - எல. த.வி

# பைதகரசின் வரலாறு

பைத்தகரஸ் கி.மு. 582 -507

இவர் கிரேக்க நாட்டைச் சேர்ந்தவர் சமோஸ் என்னும் தீவில் பிறந்தவர் கணிதம், மதம், தத்துவம், பிரபஞ்சவியல் போன்ற பல்வேறு துறைகளிலும் பாண்டித்தியம் பெற்றவர்.

பைத்தகரஸ் 'எண்களே' உலகத்தினை ஆளுகின்றன எனக் குறிப்பிட்டார் பிரபஞ்சவியல் மட்டு மன்றி மனித எண்ணம், செயல் ஆகியவற்றிலும் எண்கள் முக்கியம் பெறுவதை வலியுறுத்தினார். ஒவ்வொரு எண்ணுக்கும் தனிக்குணம் உண்டு எனவும் குறிப்பிட்டார். இவரது கேந்திர கணிதம் பற்றிய ஆய்வுகள் குறிப்பிடத்தக்கவை முதன்மை எண்கள் (Prime Number) முழுமை எண்கள், நட்பு எண்கள் பற்றியும் ஆராய்ந்தார். கேந்திர கணிதத்தினை தர்க்க முறையின் அடிப்படையில் அமைத்தவர் இவரே. இவரது பெயரைக் கொண்ட கேந்திர கணிதம் ஒன்று உள்ளது. அதற்கு பைதகரஸ் தேற்றம் என்றுப் பெயர். மேலும் கேந்திர கணிதத்தில் சான்றுகளைக் கொண்டே முடிவுகள் உருவாக்கப்படவேண்டும். என்னும் விதியை உருவாக்கினார். ஒரு முழுவட்டம் அதன் சிறு வளைவை விடப் பெரிது என்பதை சோதித்துப்பார்க்காமலே ஒப்புக்கொள்ளலாம் என்று பைதகரஸ் கூறினார்.

S. ஜீவகன்
தரம் 9B

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes From :*

# City Traders



*No : 336, Main Street,*
*Passara.*
*Tel : 055-88302*

*With Best Wishes From :*

# GANGADISI

**News Paper Sales Centre**
**Hali -Ela.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சமாதானத்திற்கு விவேகானந்தரின் செய்தி

பாரிலே மிகப் பழமை வாய்ந்ததும் சகல வாழ்க்கைத் தத்துவங்களையும் தன்னகத்தே கொண்டதுமான இந்து சமயத்தின் பெருமையை இன்றுவரை விளங்கிடச் செய்தவர் சுவாமி விவேகானந்தராவர். அமெரிக்க நாட்டின் சிக்காக்கோ நகரில் நடைபெற்ற உலக சமயங்கள் மகாநாட்டிலே தனது தலைசிறந்த சொற்பொழிவின் மூலம் உலகிற்கு உணர்த்திய பெருந்துறவியாக விளங்கும் சுவாமிஜி அவர்களின் போதனைகள் எல்லாம் உலக மக்களின் வாழ்க்கைக்கு சிறந்ததோர் வழிகாட்டியாக விளங்குகின்றன.

இவரது ஒவ்வொரு வார்த்தைகளும் ஓராயிரம் நற்கருத்துரைகளை தருவனவாக விளங்கும். இக்கருத்துரைகள் அமைதியின்றித் தவிக்கும் இன்றைய உலகிற்கு சிறந்த வழிகாட்டிச் செய்தியாகும்.

மொழி, சாதி, குலம் சமயம் போன்ற பேதங்களால் தம்மைத் தாமே வேறுபடுத்திக் கொண்டு மிருகங்களை விட கேவலமான வாழ்க்கை வாழ்ந்து கொண்டு இருக்கும் மனித இனத்தை மாயையில் இருந்து விழித்தெழ வழிகாட்டினார்.

எமது கையில் இருக்கும் ஐந்து விரல்களும் ஒரே மாதிரி அமையவில்லை. ஆனால் இவை ஐந்தும் ஒன்றுசேர்ந்தால் மாத்திரமே பரிபூரணமாக ஒரு வேலையைச் செய்ய முடியும். அவ்வாறானதே மனித இனமும் "எத்தனை வேற்றுமைகள் காணப்படினும் அவ் வேற்றுமையில் ஒற்றுமை காண வேண்டும். அப்போதுதான் அமைதி கிடைக்கும்' இந்த அமைதியே உலக சமாதானத்திற்கு வித்திடும் என சுவாமிஜி கூறுகின்றார்.

"நான் எதனையும் சாதிக்க வல்லவன் என்ற சொல் உறுதியுடன் நீ இருந்தால் பாம்பின் விஷம் கூட சக்தியற்றதாகிவிடும்". என்ற சுவாமிஜியின் போதனை மூலம் நாம் நிறைய விடயங்களை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கன்றது.

சாதி, சமய வேறுபாடு என்ற மனநிலையில் வாழும் போது மக்களிடையே கலவரங்களும், குழப்பங்களும், நிலைத்திருக்கும். இறைவனின் படைப்பில் அனைவரும் சமமே. இச்சமத் தன்மை என்று நிலைபெறுகின்றதோ அன்றே உலகம் சமரசம் ததும்பிய நிலைக்களமாகத் திகழும் என்பதை தனது வாழ்க்கை மூலம் எடுத்துக்காட்டினார்.

செருப்புத் தைக்கும் தொழிலாளியின் வீட்டில் உணவு உண்டார் ஹரிசன சகோதரர்கள் தனது புகைக்கும் ஹூக்காவை பயன்படுத்த கொடுத்தார். தீண்டத் தகாதவர் என மக்களால் ஒதுக்கப்பட்ட மனிதர்களிடம் நீர் வாங்கிப் பருகினார். முஸ்லிம் அன்பர்களிடம் உணவு பகிர்ந்து உண்டார். ஏழைகளுக்கு இல்லை என்று கூறாமல் உதவி செய்தார்.

இவரது இச் செயற்பாடுகள் எமது வாழ்க்கைக்கு சிறந்ததோர் படிப்பினையாக அமைகின்றதை நாம் உணரல் வேண்டும். எமது உள்ளம் எப்போதும் தூய்மையாக இருத்தல் வேண்டும். சாதி, சமயம், என்ற குறுகிய சிந்தனையில் இருந்து விடுபட்டால் சகோதரத்துவ மனப்பான்மை வளரும். இதன் மூலம் அனைவரும் சரிநிகர் சமானம் என்ற கொள்கையும் வளரல் வேண்டும். இவை அனைத்தும் எம்மிடம் எக்காலத்திலும் இருத்தல் வேண்டும் என்பதை உணர்த்தி சென்றிருக்கிறார். இத்தகைய மனப்பாங்கு எம்மிடத்தில் இருந்தால் மாத்திரமே உலக சமதானத்தை மட்டும் உருவாக்க முடியும். எனவே சமதானத்தை வெறும் வார்த்தையால் மாத்திரம் உருவாக்க முடியாது. எமது செயற்பாடுகள் சமாதானப் பாதையின் திறவுகோலாக இருந்தால் சமாதானம் நிரந்தரமானது

"உண்ணவும் உடுக்கவும் இல்லாமல் சொந்த நாட்டு மக்கள் அவதிப்படும் போது ஒரு பிடி உணவை நம் வாயில் போட்டுக்கொள்ள இதயம் எப்படி அனுமதி தரும்" என தன் நண்பர்களைக் கேட்டு நமது நன்னடத்தையாலும், ஆன்மீகச் சக்தியாலும் எளிய வாழ்க்கை முறையாலும் பணம் படைத்த தனவந்தர்களின் கடமையானது" தங்களின் செல்வத்தை ஏழைகளுக்கு பகிர்ந்தளித்தல் என்பதை உணர்த்தல் வேண்டும். என்ற சுவாமிஜியின் போதனையினை நோக்கும் போது மக்களிடையே காணப்படுகின்ற ஏற்றத் தாழ்வு, பொருளாதாரச் சிக்கல் என்பன மக்களுக்கு பெரும் பிரச்சினையாக அமைகின்றது. அதனைத் தீர்த்தால் சமாதானத்தை இலகுவில் அடைய முடியும். இதற்கு வழி சமையுங்கள் என செப்புகின்றார்.

"எந்தவொரு இலக்கையும் அடைவதற்கு இதயத்திலிருந்து உணர்ச்சி பொங்க வேண்டும். வெறும் அறிவும் ஆராய்ச்சியும் பயன் தராது. கடக்க முடியாததையும் சாதிக்க இயலாததையும் அன்பினால் சாதிக்க முடியும். உலகிலுள்ள அனைத்து இரகசியத்தையும் அன்பின் துணையைக் கொண்டு அறிந்திட முடியும்" என்கிறார் விவேகானந்தர்.

நாம் அனைவரும் அன்புள்ளம் கொண்டவராக இருந்தால் சண்டை சச்சரவுகள் ஏது, உலகின் மனித ஜீவன்கள் அனைத்தும் வாழ்க்கையின் நிலையாமை பற்றிய கருத்தை தெளிவாக உணருமானால் உலகமே அமைதியடையும் "அன்பே சிவம்" என திருமூலரும் கூறுகின்றார். அன்புள்ள்ம் கொண்டவர்களுக்கு சமாதானப் பாதை அதிக தூரத்தில் இல்லை.

சர்வமத மகா சபையில் சுவாமிஜி தனது உரையை ஆரம்பிக்கும் போதே "அமெரிக்க நாட்டுச் சகோதரர்களே" என விளித்தமை நாம் அனைவரும் ஒரு குடும்பத்தினர். "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என விளங்கும் இறைவனின் பிள்ளைகள் என்ற உணர்வை ஏற்படுத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல இடங்களிலிருந்து ஊற்றெடுக்கும் நதிகள் இறுதியில் கடலில் ஒன்றாகச் சங்கமிக்கும் பாங்கு போன்று சமயம், மொழி, நிறம், பண்பாடு, கலாசாரம் என மனிதனே தனக்குப் போட்டுக்கொண்ட தடைகளை உடைத்தெறிந்து இந்த உலகம் எனும் ஒரே குடையின் கீழ் வாழும் போது பேதங்கள், வேறுபாடுகள் இன்றி அன்பினால் இணையும் போது அமைதி தோன்றும். இந்த அமைதியே உலக சமாதானத்துக்கு வித்திடும் என்பதை தன் வாழ்க்கையின் நடத்தைகளாலும் உபதேச போதனைகளாலும் தெளிவாக்கியுள்ளார் சுவாமிஜி.

உலக சமாதானத்தை நாம் உருவாக்க வேண்டுமானால் சாதி, சமயம், குலபேதம் இல்லாதிருத்தல் வேண்டும். மக்கள் சரிநிகர் சமமாய் வாழ ஏற்றத் தாழ்வு நிலை ஒதுக்கப்படல் வேண்டும்.

மக்கள் மனம் போட்டி, பொறாமையால் நிரப்பப் படாமல் அன்பு என்னும் அருமருந்தால் நிரப்பப் படல் வேண்டும். இந்த நாடும் மக்களும், சமாதானமாய் வாழ மேலும் எம்மால் முடிந்த பங்கினை வழங்கி சமாதானம் பெறும் பாதைக்கு திடமான வழியமைப்பேன் என்ற மனநிலை எல்லோருக்கும் இருத்தல் வேண்டும்.

அத்தகைய பண்புகளை நாம் எல்லோரும் வளர்த்துக் கொள்வோமானால் எம் ஒவ்வொருவரிடையேயும் அமைதி ஏற்படும். இதன் மூலம் சமூகமும் , நாடும், உலகும் சமாதான இலக்கினை வெற்றிகரமாக அடைய முடியும் என்பதை சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கை உபதேசங்கள் காட்டுகின்றன.

ஆக்கம்:- திருமதி. மகேஸ்வரி கோவிந்தராஜா
(ஆசிரியை)

# PROVERBS

01. There are two good men ; one dead the other unborn.

02. A lame man is a hero before a cripple.

03. He who plants thorns shall not gather roses.

04. Great talkers are like broken pitchers, everything runs out of them.

05. Knowledge is not gained on a bed of roses.

06. Good words cost nothing but are worth much.

07. Bad news has wings.

08. Honey was not made for the mouth of an ass.

09. A small loan makes a debter a large one an enemy.

10. Never trust a man who speaks good of every body.

11. Empty vessels make the most sounds.

12. Rome was not built in a day.

13. Beauty is but skin deep.

14. Familiarity breeds contempt.

15. He laughs best who laughs last.

K. Puvaneswary
11B

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes From :*

# ASIAN TRADERS


Dealers Brass were Items



NO : 48, YATTINUWARA PATTUMAWATHA
KANDY.

*With Best Wishes From :*

# NIYAS LEARNERS



Bandarawela.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes From :*

# Maruthy Steel furniture

**No : 24, Bandarawela Road,**
**Hali-Ela.**
**Tel : 055- 94610**



# Maruthy Industries

Manufacture of Steel Items..

**No : 37C, Post Office Road,**
**Hali - Ela.**

*With Best Wishes From :*

# Hotel Green Mount



C/o. Uva Gem Combine
No. 39, Mahiyangana Road,
Badulla.
Tel : 055-22309
Fax : 055-22309

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமண சம்பிரதாயங்களின் உள்ளார்ந்த உண்மைகள்

இன்றைய கணணியுகத்திலே மனிதனது சடங்குகள், சம்பிரதாயங்கள் என்பன அவற்றின் அர்த்தங்கள் புரியாமல் ஏனாதானோ என்று அனுசரிக்கப்பட்டு வருவதுடன் சில சமயங்களில் அவை ஒரேயடியாகப் புறக்கணிக்கப்படுவதும், நடைமுறையதார்த்தமாகி விட்டது திருமணம் என்ற புனித சடங்கு இதற்கு விதிவிலக்கல்ல.

திருமணத்தில் கடைப்பிடிக்கப்படும் சம்பிரதாயங்கள் சடங்குகளுக்கான விளக்கங்களை அறிந்து கொண்டல், அவை ஒவ்வொனறும் நம் முன்னோர்களால் காரண காரியத்துடனயே விதிக்கப்பட்டுள்ளன என்பது புரியும்.

## விளங்கங்கள் வருமாறு :

நிறைகுடம் வைத்தல் :- வாழ்க்கை நிறைவுடன் நிகழ வேண்டும் என்பதை குறிக்கும்.

கைவிளக்கு ஏற்றல் :- இல்லறம் ஒளிமயமாகத் திகழவேண்டும் என்பதை குறிக்கும்.

காப்புக் கட்டலும் களைத்தலும் :- திருமண நிகழ்ச்சி நல்லபடி நடைபெற தெய்வங்கள் காவல் புரிய வேண்டும் என்பதற்காகக் காப்பு கட்டப்படுகின்றது. திருமணம் நிறை வடைந்த பின்னர் காப்பு களைத்தல் இடம் பெறும்.

பிதிரர் ஆசீர்வாதம் :- குடும்ப வாழ்வு சிறப்பு முன்னோர்களான இறந்தவர்களின் ஆசீவாதம் அவசியம் என்பதால்

ஓமம் வளர்த்தல் :- அக்கினியால் உலகமும் உயிர்களும் வாழ்கின்றன ஓமத்திலிருந்து எழும் புகை உயரமாக பரவ வேண்டும் ஓமம்புகை உடலுக்கு நன்மை செய்து ஆயுளை அதிகரிக்க நெய்விடும் பொழுது தீ ஓங்கிப் பரவும் அதுபோல் தான் உள்ளத்தில் உறைந்திருக்கும் அன்பும் ஓங்கிப் பரவினால் தான் இல்லற வாழ்வு சிறக்கும் என்பதை இது உணர்த்துகிறது

தாலி கட்டுதல் :- பெண் கற்பு என்னும் வேலியைத் தாண்டாது, கற்பு நெறி வழுவாதவளாக இருக்க வேண்டும் என்பதை குறிக்கின்றது.

அட்சதை போடுதல் :- மஞ்சள் கலந்த அரிசியே அட்சதை எனப்படும். முளைக்கும் திறனுடைய பச்சை அரிசியை மஞ்சள் கலந்து மலர்களுடன் சொரிந்து வாழ்த்துவதே அட்சதை போடுதல் எனப்படும்.

மாலை மாற்றல் :- உள்ளம் காத்தலைக் குறிக்கிறது.

ஏழடி வைத்தல் :- கிரகதோஷம் நீங்குவதற்காக நவக்கிரக தானம் செய்த பின்பு மணமகன், மணமகளுடைய கையைப் பிடிதது ஏழு அடி நடப்பான் அந்த ஏழு அடியும் உணவுப்பொருள், சரீர பலம், கடவுள் வழிபாடு, மன அமைவு, அறிவு, காலத்திற்கு காலம் வரும் பொருட்களும் அவற்றினால் வரும் சுகங்களும், யாகத்துக்கு வேண்டிய திணைகள் ஆகிய ஏழு விதமான தெய்வங்களை மணமக்கள் இருவரும் மனமொப்பி முயற்சி செய்வதற்கு வேண்டிய அருளைக் கடவுளிடம் பெறுவதைக் குறிக்கும் இதன் போது சொல்லப்படும் மந்திரம் மற்றும் கிரியைகளால் மணமகள் மண மகனுடைய கோத்திரத்தைச் சேர்ந்து ஐக்கியமடைவதாக கூறப்படுகிறது

அம்மி மிதித்தல் :- பெண்ணானவள் அந்தக் கல்லைப் போலத் தன்னுடைய கற்பு நிலையில் நின்றும் பிரியாமலும், இளகாமலுமிருந்து, தனது கணவனிலேயுள்ள பற்று நீங்காமலும் கற்பு நெறியினின்று விலகாமலுமிருப்பதை நிலைப்படுத்துவதைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறி அமர்தல் :- மணமகனின் இதயத்தில் இடம்பெறும் வரைக்கும், மணமக்கள் வலப்பக்கமாகவே அமர்த்தல் வேண்டும் வழிபாடு செய்தல், ஓமம் வளர்த்தல் போன்ற தெய்வ வழிப்பாட்டுச் செயற்பாடுகளின் போது இன்ப உணர்வு தோன்றக் கூடாது என்பதற்காக வலப் பக்கம் அமர்வார், திருமணம் மூலம் உரிமை கிடைக்கப் பெற்றதைக் குறிக்க மணமகனின் இருதயம் இருக்கும் இடப்பக்கத்தில் மணப் பெண் அமர வைக்கப்படுகிறாள்.

பாலும் பழம் அருந்துதல் :- பால் நிறையுணவு, பழமும் போசனையுடையது இவற்றை அருந்துவதால் மணமக்கள் களைப்பு நீக்கிப் புத்துணர்ச்சி பெறுவர்

(இவனுக்கு இவள் என்று இறைவன் செய்த உறுதியின் அரங்கேற்றமே திருமணம்)

ஆசிரியை :
திருமதி S. அம்பிகா

# உழவின் சிறப்பு

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல்பவர்"

என்பது பொய்யா மொழிப் புலவரின் வாக்கு. இதன் மூலம் உயிர்களின் வளர்ச்சிக்கு உழவர் ஆற்றும் சேவை புலப்படுத்தப்படுகின்றது. உழவர்களை நம்பியே ஏனையவர்ககள் வாழ்கின்றார்கள் என்பது இதன் உட்கருத்து.

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்
வீணே உண்டு களிப்போரை நிந்தனை செய்வோம்"

என்று உழவின் மகத்துவம் சொல்லப்படுகின்றது. விஞ்ஞான யுகமாக மாறிக் கொண்டு வரும் இச்சமுதாயப் பின்னனியில் உழவுத் தொழில் இகழ்வாக கொள்ளப்படினும் உயிருக்கு உத்தரவாதம் அளிக்கும் உன்னதமான தொழில் என்பதை எவராலும் மறுக்க முடியாது.

நகரங்களை விட கிராமங்களிலேயே உழவுத் தொழில் மேன்மையடைந்துள்ளதால் "கிராமமே நாட்டின் முதுகெலும்பு" என்றார் கவிஞர் இரவீந்திரனாத் தாகூர் அவர்கள். செல்வச் செழிப்பில் சிறப்பவரும் உழவின் துணையின்றி இயங்க முடியாது. ஆகவே உழவரே உயிருக்கு சோறு போடுபவர்களாவர். "சொல்விற் கடல் காது நீரும் நீரின்றி அமையாது உலகு" என்று சொல்லப்படுவது போல் உழவின்றியும் அமையாது உலகு. மனிதன் விண்ணையும் தாண்டி பல புதுமைகளை படைக்க உயிர்நாதமாய் விளங்குவது உழவே. எனவேதான் அக்காலத்தில் பெரியவர்கள் இவ்வாறு கூறினார்கள்

"உழவர்கள் சேற்றில் கால் வைக்காவிட்டால் நாம் சோற்றில் கை வைக்க முடியாது." பசி என்று வந்தால் பத்தும் பறக்குமன்றோ! இப்படிப்பட்ட ஒரு கொடிய பசியைத் தீர்ப்பவர்கள் எம் உழவர்கள் என்றால் அது மிகையாகாது. உலகம் இயங்க முதற் காரணம் சூரியன். அப்படிப்பட்ட சூரியனை எம் உழவர்கள் உழவர் திருனாளாம் தைப்பொங்கல் அன்று பொங்கலிட்டுப் பூசை செய்து போற்றி வணங்குகின்றார்கள். இதில் அவர்களின் உயரிய சேவை புலப்படுகின்றது.

உழவரின் மகிமையை உணர்த்தவே அவதார புருஷரான பலராமர் கையில் உழவு ஆயுதமான கலப்பை காணப்படுகின்றது. இன்று எம் மத்தியில் உழவுத் தொழில் இழிவாகக் கொள்ளப்படினும் அன்று எம் முன்னோரான மிதிலைச் சக்கரவர்த்தி ஜனகர் பொற் கலப்பையால் தானே உழுது உழவின் தெய்வீகத்தை உயர்த்தியுள்ளார்.

உழவின்றேல் வாழ்வில்லை. வளர்ச்சியில்லை. கலைகளும் இல்லை. பொழிவில்லை. பொங்கும் மணமும் இல்லை. உயிருமில்லை, உடலுமில்லை. என இக்கால கவிஞர்கள் தம் சொற்களால் வடித்துள்ள விதம் அருமையிலும் அருமை. பூமியின் அவதார சக்தியாக விளங்குவது உழவே இதனை உனர்ந்து உழவின் பயன்களை எடுத்துரைத்து இப்புனித பணியினை நாமும் செய்து பிறரையும் வாழவைக்க வேண்டும்.


ஆக்கம் :- பாரதிராஜா
தரம் 10[A]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes From :*

MJ

# Multi Jewellery




No: 09, New Town,
Mahiyangana,
Tel : 055-57365

Branch : No. 68 Front of Pradesiya Saba
Badulla Road,
Bibble
Tel : 055-65464-65998

*With Best Wishes From :*

# K.N.M.S
## Jewelry Work Shop

We Undertake and offer Quality Gold Jewelry Work
to the New Generation




157B, Lower street,
Badulla.
Tel : 072-604227

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes From :*

# Lanka Hardware Stores

Dealers in Hard wares, Electrical Goods,
Govt & Estate Suppliers



*No: 19, Bazaar Street,*

*Badulla.*

*Tel : 055-22344, 31158.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதியின் இலட்சியப் பெண்

"பெண்கள் என்றாலே அடுபங்கரைதான்" என்று நினைக்கும் காலம் போய் விட்டது. இன்று சரித்திரம் படைக்கும் புதுமைப் பெண்ணாக சுடர்விட்டுக் கொண்டிருக்கும் பெண்ணின் இம்மாற்றங்களுக்கு பாரதியும் ஒரு முக்கிய காரணம் என்பதனை நாம் ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும் அல்லவா ?

ஆதிகாலத்தில் ஏனைய சமூகங்களை போல பெண்களின் உரிமை மறுக்கப்பட்டது சிறுவயதிலேயே திருமண பந்தத்தில் நுழையும் பழக்கம், விதவைகளின் விவாகம் தடுக்கப்பட்டமை என்பன காணப்பட்டன, படிப்பு பதவி என்பன மறுக்கப்பட்டன மாத்தத்தில் பெண்கள் இச் சமூகத்தில் அடிமைகளாகவே கருதப்பட்டார்கள், கணவன், குழந்தை, குடும்பம் இதுவே இவர்களின் உலகமாக இருந்தது துயரப்பட்டு துடித்து நின்ற பெண்களின் துன்பத்தை பாட்டினாலேயே துடைத்த பாரதி நிச்சயாமாக துதிப்பதற்குறியவர்தான் என்று கூறவேண்டும்.

" மாதர் தன்னை இழிவு செய்யும் மடமையை கொழுத்துவோம் " என்ற பாரதியின் வாய் சொல் இன்று வானுயர்ந்து அவரை வாழ்த்தி நிற்கின்றது.

" பெண்ணுக்குள் ஞானத்தை....." என்று தொடங்கும் பாடல் அடியின் மூலம் ஆண்களை விட பெண்கள் எந்த வகையிலும் தாழ்த்தப்பட்டவர்கள் இல்லை என்று பாரதி பாடினார். இன்று அவ்வழியில் நின்று பெண்கள் அவரை போற்றுகின்றார்கள்.

பெண்கள் படிக்க வேண்டும், பட்டங்கள் பெற வேண்டும், நாட்டை ஆள வேண்டும், ஆண்களுக்கு சமமாக வாழப்பழக வேண்டும் என்று பாரதியார் விரும்பினார்.

" அச்சமில்லை அச்சமில்லை" என்ற பாடலின் ஊடாக பெண்களின் அச்சத்தை நீக்கிய பாரதி இன்று அகிலத்து பெண்கள் அனைவரிடையேயும் நாயகனாக மதிக்கப்படுவது நாம் அறிந்தது தானே.

பாரதியின் கற்பனையில் தோன்றிய பெண் இன்று நாட்டை ஏன்...... உலகத்தையே ஆண்டு கொண்டிருக்கின்றாள். பாரதியின் கனவு இன்று நனவாகிவிட்டது குடும்பத்தில் மட்டுமல்லாது கல்வி, நிர்வாகம், பாதுகாப்பு, தலைமைத்துவம் என்ற துறைகளிலும் பிரகாசித்து கொண்டிருக்கும் பெண்ணினத்தை இன்று பாரதி பார்ப்பாரேயானால் நிச்சயம் பெருமைப்படுவார். பாரதி இன்று இவ்வுலகத்தை விட்டு மறைந்து விட்டாலும் புகழளவில் என்றும் மறையாதிருப்பார் அவர் புகழ் என்றும் மாறாதிருக்கும் என்பதை யாராலும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.

" வளர்க பெண்ணினத்தின் பெருமை
போற்றுவோம் பாரதியின் மகிமை"

D. புஸ்பலதா
தரம் : 11A

# பொது அறிவு

ஒளி நுணுக்குக் காட்டியை முதல் முதலாக ஆக்கியவர்
ஜென்சன்

நுணுக்கு காட்டியினூடாக முதன் முதலாக தக்கைக் கலங்களை அவதானித்தவர்
றொபட் குக்

தாம் அமைத்த முதலாவது தொலைக்காட்டியைப் பயன்படுத்தி 1609 இல் வானை அவதானித்தவர்
கலிலியோ கலிலி

கணித்த அளவீடகளைப் பயன்படுத்தி கோள்களின் நீள்வட்ட ஒழுக்குகள் பற்றிய கணித்தல்களைச் செய்தவர்
ஜொஹன்னஸ் கெப்வர்


கி.பி. 1820 இல் மின் சுருளினுள் உருக்கு ஊசிகளை வைத்து நிலை பேறான காந்த ஊசிகளை உற்பத்தி செய்தவர்
அன்ட்ரெ மாரி அம்பியர்

தொகுப்பு : P. உதயகலா
தரம் : 9A
ப/ஆலி - எல த.வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes From :*

# R. V. SIVAGURU STORES



Kurunduoya
Kandapola

# RAVI PRODUCTS

***Dealers In Chile Powder, Curry Powder, Turmeric Powder & Biscuit Powder***




High Forest
No : 03,
Kandapola

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக மக்களும் கல்வி வளர்ச்சியும் ஓர் கண்ணோட்டம்

மலையக கல்வியை எடுத்து நோக்கினால் அதற்கு ஒரு வரலாறு உண்டு அதுபோல் மலையக மக்களுக்கு ஒரு வரலாறு உண்டு இலங்கையில் குடியேற்ற ஆட்சி ஏற்பட்டதன் பின்னர், அதுவும் ஆங்கிலேயர்களால் கூலி வேலை செய்வதற்காக இலங்கைக்கு அழைத்து வரப் பட்டவர்களே இந்த மலையத் தமழ் மக்கள் தென்னிந்தியாவில் இருந்து இங்கு வந்து உழைத்து சம்பாதித்துச் சென்று தாம் வளம் பெறலாம் என்ற பல்லாயிரக்கணக்கான கனவுகளோடு இங்கு குடியேறியவர்கள் தான் இந்த மக்கள் அந்த அடிப்படையில் இங்கு வந்து மலைநாட்டு பிரதேசக் காடுகளை வளம் கொழிக்கும் தேயிலை மலையாக்கி இன்று இலங்கையின் அந்நிய செலாவணி வருமானத்தின் முதுகெழும்பாய் திகழச் செய்த பெருந்தகைகள் தான் இவர்கள் என்றாலும் இவர்கள் வாழ்கை நிலைதான் இன்னும் உயரவில்லை 50 வருடங்களுக்கு மேல் தகரம் மாற்றாத துளைகள் கொண்ட குடியிருப்பாக காட்சியளிக்கின்றது எத்தனை அரசியல் தலைமைத்துவங்கள் மாறினாலும் இவர்கள் ஏழ்மையும் சோகமும் மாறவில்லை.

இப்படியான இந்த மக்களின் கல்வி நிலையை எடுத்து நோக்கினால் ஆரம்பத்தில் ஆங்கிலேயர்களால் தோட்டங்களில் பிள்ளைக் காம்பராவாக ஆரம்பிக்கப்பட்டு பின் ஒரு குறிப்பிட்ட வயதுவரை, அதாவது தோட்டத்தில் வேலை செய்யக்கூடிய வயது வரும்வரை அடைத்து வைத்து பார்க்கும் ஒரு இடமாக அமைந்ததுவே தோட்டபாடசாலைகள்.

தோட்ட நிர்வாகத்தின் கீழ் இயங்கி வந்த தோட்டப்பாடசாலைகள் ஒரு ஒழுங்கான கல்வியோ, கட்டுக்கோப்புகளோ இன்றி ஏதோ பள்ளிகூடம் என்ற அமைப்பில் நடந்து வந்தது.

1972ம் ஆண்டின் பின்னர்தான் இலங்கையின் ஆட்சியாளர்கள் தோட்டப்பாடசாலைகள் என்ற ஒரு நிலமை மாறவேண்டும் என்ற முனைப்பில் அனைத்து தோட்டப் பாடசாலைகளையும் அரசமயமாக்கம் செய்தது இது மலையக கல்வி வளர்ச்சியில் ஒரு மறுமலர்ச்சி என்றே கூறவேண்டும்.

அதன் பின்னர் தான் அரசாங்கத்தின் பாட விதானத்திற்கு அமைய கல்வியைத் தொடர மலையகத்தின் மைந்தர்களுக்கும் ஒரு வாய்பு ஏற்பட்டதென்றால் அது மிகையாகாது 1972ம் ஆண்டுக்கு முன் காணப்பட்ட இந்த நிலமையின் காரணமாகவே மலையகத்தில் கல்விமான்கள் குறைவாக காணப்பட்டனர். எனவேதான் மலையக பாடசாலைகள் ஆசிரியத் தேவைக்காக முழுக்க முழுக்க வடக்கு, கிழக்கையே நம்பியிருக்க வேண்டிய ஒரு நிலமையே காணப்பட்டது.

இதன் பின்னர் மலையக கல்வியில் ஒரு மறுமலர்ச்சி என்றால் 1983ம் ஆண்டு மலையகத்தில் உள்ள 402 பேருக்கு ஆசிரிய நியமனம் வழங்கியதை குறிப்பிடலாம் இது எமது மலையக அரசியல் தலைவர்களில் அமரர் தொண்டமான் அவர்களின் அயராத முயற்சிக்கு ஒரு மைல் கல்லாக அமைந்த விடயமாகும். இந்த இடத்தில் ஒரு விடயத்தைக் குறிப்பிட்ட வேண்டும். வடக்கு, கிழக்கு ஆசிரிய பெருந்தகைகளின் தன்னலமற்ற சேவையின் காரணமாகவே இந்த 402 ஆசிரியர்களும் கூட உருவாகியதை யாரும் மறுக்க முடியாது.

இதன் பின்னர் 1986, 88, 91 காலப்பகுதியில் மலையக பாடசாலைகளுக்கென விஷேடமாக 1000 பேர் கொண்ட மூன்று ஆசிரியத் தொகுதிகள் உருவாக்கப்பட்டு எமது கல்வி வளர்ச்சிக்கு மெருகூட்டப்பட்டது, என்றுதான் சொல்ல வேண்டும். இது மாத்திரமின்றி ஜனாதிபதி கௌரவ பிரேமதாச அவர்களால் வழங்கப்பட்ட பயிலுனர் ஆசிரிய நியமனங்கள் மூலமும் பலர் ஆசிரிய நியமனம் பெற்றனர் இன்று எமது மலையத்தைப் பொருத்தமட்டில் 80% பாடசாலைகளில் அதிபர் ஆசிரியர் என 80% மலையகத்தவர்களே, கடமையாற்றுவதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

இது மட்டுமன்றி இன்று மலையத்தில் கல்வியியற் கல்லூரியும் கூட ஒன்று நிறுவப்பட்டு அதிலும்கூட எமது ஆசிரிய மாணவர்கள் மூன்று வருட டிப்ளோமா பயிற்சி நெறியை முடித்து வெளியேறி எமது மலையக பாடசாலைகளில் கடமையாற்றுவதை நாம் மறந்துவிடவோ, மறுத்துவிடவோ முடியாத உண்மை.

இப்படியாக எமது மலையகத்தைச் சேர்ந்த அங்கேயே பிறந்து வளர்ந்தவர்கள் ஆசிரியர்களாகவும், அதிபர்களாகவும் இருந்தும் கூட எமது கல்வி நிலை எந்தளவிற்கு உயர்ந்துள்ளது என்பதையும், பல்கலைக்கழக பிரவேசத்தையும் உற்று நோக்கினால் பெரிய மாற்றம் நிகழ்ந்திருப்பாதக கூற முடியாது ஓர் துர்ப்பாக்கிய நிலையே காணப்டுகிறது இதற்கு என்ன காரணம்?.

இப்படியான இந்த நிலமைக்கு யார் காரணம்? பெற்றோர், ஆசிரியர், அதிபர்கள் எல்லோருமே பொறுப்பேற்க வேண்டியவர்களாக காணப்படுகின்றார்கள்.

பெற்றோர்களை பொறுத்தமட்டில் தமது பிள்ளைகள் பள்ளிகூடம் போகிறார்கள், வருகிறார்கள் என்று இல்லாமல் அடிக்கடி அவர்களின் கல்வி நிலமை பற்றியும் அவர்களின் வரவு ஒழுக்கம் பற்றியும் கூடிய அக்கறை செலுத்த வேண்டும் அத்துடன் பாடாசலையுடன் தொடர்புடையவராக காணப்பட வேண்டும் ஆசிரியர்களை பொறுத்தவரை ஒரு சேவை மனப்பான்மையுடன் தனது சமூகம் முன்னேற வேண்டும், அதை நாம் எப்படியாவது சிறப்பாக செயற்படுத்த வேண்டுமென்ற தியாக உணர்வோடு செயற்பட வேண்டும் அப்படி இல்லாமல் ஏதோ சம்பளத்திற்காக செய்யும் ஒரு தொழிலாக இல்லாமல் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும் இன்று சில ஆசிரியர்கள் தான் அண்ணன் போன்றும் மாணவர்கள் தங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிமைகள் போன்றும் நினைத்து செயற்படுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது எல்லோரும் அல்ல ஒரு சிலர் இவர்கள் இவ்வாறு நடப்பதால் சில சமயம் முழு ஆசிரிய குழாமும் தலை குனிய வேண்டிய நிலமை ஏற்படுகின்றது எனவே அதிபராக ஆசிரியர்களாக கடமை புரியும் மலையக மைந்தர்கள் நமது சமூகத்தை முன்னேற்ற வேண்டியது கட்டாயமானதாகும் எதிர்கால சந்ததியினர் ஒரு நல்ல நிலமைக்கு வரவேண்டும் என்ற திடசங்கற்பத்துடனும் சேவை நோக்குடனும் சமுதாய முன்னோடிகளாக செயற்பட வேண்டிய ஒரு முக்கியமான காலகட்டத்தில்தான் இன்று நமது மலையக சமூகம் இருக்கின்றது.

அத்துடன் மாணவ சமுதாயமும் நாம் சிறப்பாக கல்வி கற்று முன்னேறவேண்டும் என்ற முழுமூச்சான ஒரு முனைப்புடன் கல்வியில் கண்ணாய் இருந்து செயற்பட வேண்டியது இன்றைய காலத்தின் கடடாயமாகும்.

கல்விக்கான வசதிகளை பொறுத்தமட்டில் இன்று எவ்வளவோ வசதிகளை எமது மலையகம் பெற்றுள்ளது என்பதை நாம் மறுக்க முடியாது பல்வேறு வெளிநாட்டு நிறுவனங்கள் இங்கு வந்து கோடிக்கணக்கான ரூபாய் பணத்தை செலவிட்டு, நவீன கடடிடங்கள், தளபாடங்கள், கணணிகள் போன்ற நவீன வசதிகளுடன் பாடசாலைகளை நமக்கென அமைத்து தந்துள்ளன என்பது தெளிவான உண்மை.

எனவே மலையக கல்வி இன்னும் விரைவாகவும் தெளிவாகவும் முன்னேற வேண்டுமானால், மலையகத் தலைவர்கள் ஆசிரியர்கள், அதிபர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் சமூக சேவகர்கள் அனைவரும் ஒற்றுமையுடன் சமுதாய சிந்தனையுடனும் செயற்பட்டால் நிச்சயாமக எம்மத்தியிலிருந்து ஆசிரியர்கள் மாத்திரமின்றி வைத்தியர்கள், பொறியியலாளர்கள் என்றும், இன்னும் பல்வேறு உயர் மட்டங்களிலும் நம்மவர்களின் உயர்வு நிச்சயமான உண்மையாகும்.

முடியாது என்றும் எதுவும் இல்லை<br>
முயற்சி செய்யாததே காரணம்

என்ற வாசகத்திற்கேப முயற்சி செய்வோம், முன்னேற்றம் காண்போம்.

ஆசிரியர்<br>
ஆக்கம் : திரு. M. வரதராஜா<br>
*(Special Trained Agri)*

## கல்வி

கல்வி எனும் மூன்றெழுத்தை<br>
கற்றிடடா தம்பி அது<br>
காலமெல்லாம் கைக்கொடுக்கும்<br>
கடவுளடா தம்பி

தீயோரை நல்லவராய் மாற்றிடவே<br>
கல்வி பாரினிலே. புகட்டுகின்ற<br>
பாடங்களோ ஆயிரங் கோடி<br>
கல்வியை கைவிடாமல் கற்றிடடா

எத்தனை தன்பங்கள் தான்<br>
எதிர் நின்ற போதிலும் நீ<br>
கல்வி தனை முயற்சியுடன்<br>
கற்றிடடா தம்பி

கருங்கடலில் செல்வங்கள்<br>
கரைந்தாலும்<br>
கல்வி எனும் மூன்றெழுத்து<br>
கரைந்திடாதடா தம்பி

கள்வர்களால் சூறை போகும் செல்வம்<br>
கல்விதனை சூறையாட இயலாதடா தம்பி<br>
உற்றவிடத்து உயிர் காக்கும் கல்வி<br>
இதை உயிர் உள்ளவரை கற்று வையடா தம்பி.

ஆக்கம் : A. திரேஷா<br>
தரம் :10B

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes From :*

# Mr. Pathmanathan




Tel : 055-30725


*With Best Wishes From :*

# New Raj Traders

அலுமினிய, சில்வர் பாத்திரங்கள், பாடசாலை புத்தக உபகரணங்கள்,

மற்றும் திறப்பு விழா, கல்யாண சடங்கு காட்கள் அச்சிட்டு கொடுக்கப்படும்.





**Van & Lorry for Hire**

No : 101-A, Ragala bazaar,

Halgranoya.

Tel : 052-65392 & 072 - 658257

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes From :*

# N/ Silverkandy T.V

Halgranoya





Principal, Teacher's

&

Students

*With Best Wishes From :*

# PIYAL TRANSPORT SERVICE




**No. 260, Main Street,**

**Passara.**

**Tel : 055 -88153**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பார் போற்ற வாழாயோ ?

நீல வானில் ஒரு வெள்ளைப் புறா
மலை கடல் தாண்டிப் பறக்குதம்மா !
ஞாலத்தில் சாந்தி சமாதானம் வேண்டி
பல காத தூரம் தூது கொண்டு செல்வதம்மா!

என் இனமொழிக்கு நானே தான் காவலென்று
உன் இனத்தை நீயே தான் வதைக்கின்றாய்!
ஈன்றெடுத்த பெற்றவரின் விழிவடிக்கும் கண்ணீரில்
இரத்தமும் கசியுதடா நீ காலனா ? இல்லை காவலனா ?

கொந்தளிக்கும் கடலலையும் குமுறும் எரிமலையும்
மனதிற்குத் தருவது நிலையான நிம்மதியா ?
கலகமும் கலவரமும் நெறியற்ற வன்முறையும்
உலகிற்குத் தருவதெல்லாம் பெருமையா பேரழிவா ?

பாரினிலே பகுத்தறிவைக் கொண்டவன் மனிதனடா
பக்குவமாய் அவ்வறிவைக் காப்பாற்றி வாழாயோ ?
போராளி நானெனவே பறைசாற்றி நீ நடந்த
பாதையினைத் திரும்பிப்பார் பாவத்தை எண்ணிப்பார் !

வடக்கு கிழக்கென்றும் தெற்கு மேற்கென்றும்
விஞ்ஞானி பிரித்ததெல்லாம் மக்கள் திசையறிய !
எத்திசையில் வாழ்ந்தாலும் இந்நாட்டு மக்கள் நாம்
என்றுணர்ந்து ஒன்றிணைந்து பார் போற்ற வாழாயோ !

ஆக்கம் : திருமதி சாந்தி சுரேஸ்குமார்
ஆசிரியை.

# நதிகள்

| ஆறுகள் | பிரதேசங்கள் | நீளம் |
|---|---|---|
| நைல் | கென்யா, சூடான், எகிப்து | 6670 KM |
| அமேசன் | பெரு, பிரேசில் | 6440 KM |
| சாங்கியாங் | சீனா | 6380 KM |
| குவாங்கோ | சீனா | 4380 KM |
| அமூர் | சேர்பியா | 4570 KM |
| மக்கன்சி | கனடா | 4240KM |
| நைகர் | கயானா, மாலி, நைஜீரியா | 4184 KM |
| மறேடாலிங் | அவுஸ்திரேலியா | 3750KM |
| சாம்பகி | சாம்பியா, மொசாம்பிக் | 3540KM |
| சென்லோரன்ஸ் | கனடா, ஐக்கிய அமெரிக்கா | 3310KM |
| கங்கை | இந்தியா, பங்களாதேஷ் | 2510KM |

தொகுப்பு : ஜீ . பிரேமானந்தன்
தரம் : 10B
ப/ ஆலி.எல. த.வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


*With Best Wishes From :*

# அம்பிகா ஜுவலர்ஸ்



இல. 169, லோவர் வீதி, பதுளை. தொ.பே. 055-22940

# தாரகா ட்ரேட் சென்டர்



இல. 95, கண்டி வீதி
நுவரெலியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளிரூட்டியின் தொழிற்பாடு

மோட்டாரிலிருந்து மின்னோட்டம் வழங்கப்பட்டதும் கொம்பசரின் உள்ளே திரவ நிலையில் அமோனியா அல்லது பிரியோன் ஆவியாக மாற்றம் பெற்ற சுருள் வடிவில் உள்ள குழாய் தொகுதியினூடே மேலே தள்ளப்படும். இச்சுருளினூடாக பயணம் செய்யும் போது வாயுவானது திரவமாக மாறும். இத் தொகுதியில் வலது புறத்தே உள்ள வால்வினூடாக வாயு மாற்றம் சுருள் வரை அழுக்கத்துடன் பயணம் செய்வதால் மீண்டும் அத் திரவம் வாயுவாக மாற்றம் பெறும். இதைப் போல் விரைவாக குளிர்ச்சியடையும்.

குளிர் நிலை அடைந்த அமோனியா பியோன் குளிரூட்டியினுள் வைக்கப்பட்டிருக்கும். உணவின் வெப்பத்தை உறிஞ்சி மீண்டும் திரவ நிலையை அடையும். இதன் காரணமாக உணவுப்பொருள் குளிர்ச்சியடையும்.

## குளிர் சாதனப் பெட்டியைப் பாவிக்கும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள்

- ☐ கதவை அடிக்கடி திறந்து மூடுவதோ அடித்து மூடுவதோ கூடாது
- ☐ சூடான உணவுகளை வைத்தல் கூடாது
- ☐ உணவுப்பொருட்களை மூடியே வைக்க வேண்டும் ஏனெனில் ஒன்றின் தன்மையால் மற்றையது பழுதாகும்.
- ☐ உணவுப் பொருட்களுக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் அவற்றை வைத்தல் வேண்டும்.
- ☐ உணவு குவித்து வைத்தலைத் தவிர்க்கவும்.
- ☐ உபகரணங்களைப் பாவித்து குளிர் சாதனப் பெட்டியிலுள்ள ஐஸ் கட்டிகளை வைக்க வேண்டும்.
- ☐ அடிக்கடி சுத்தம் செய்யத் தேவையில்லை.

## குளிர் சாதனப் பெட்டியைச் சுத்தம் செய்தல்

- ☐ முதலில் மின் இணைப்பை நீக்கவும்
- ☐ உள்ளே உள்ள உணவுப் பொருட்களை எடுக்கவும்
- ☐ ஐஸ் கட்டிகளைக் கரைத்து வெளியே எடுக்கவும்
- ☐ தட்டுகளை வெளியே எடுக்கவும்
- ☐ சவர்க்காரம் அல்லது சலவைப் பவுடரை நீரிற் கரைத்து அதில் துணியை அல்லது 'ஸ்பஞ்சு' நனைத்து உள்ளே துடைக்கவும்.
- ☐ நீரை ஊற்றிக் கழுவ வேண்டாம்.
- ☐ கதவுகளை நன்கு துடைத்து உலர விட்டு பின் மூடவும்
- ☐ தட்டுகளையும் கழுவி காய வைத்து இருந்த இடத்தில் வைக்கவும்
- ☐ பின் மின் இணைப்பை பொருத்துங்கள்.

- ☐ ஐஸ் கட்டிகளைக் கரைத்து வெளியே எடுக்கவும்
- ☐ தட்டுகளை வெளியே எடுக்கவும்
- ☐ சவர்க்காரம் அல்லது சலவைப் பவுடரை நீரிற் கரைத்து அதில் துணியை அல்லது 'ஸ்பஞ்சு' நனைத்து உள்ளே துடைக்கவும்.
- ☐ நீரை ஊற்றிக் கழுவ வேண்டாம்.
- ☐ கதவுகளை நன்கு துடைத்து உலர விட்டு பின் மூடவும்
- ☐ தட்டுகளையும் கழுவி காய வைத்து இருந்த இடத்தில் வைக்கவும்
- ☐ பின் மின் இணைப்பை பொருத்துங்கள்.


தொகுப்பு:- *N.* நவரஞ்சனி
தரம் 10*B*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து தர்மம் பற்றிய ஓர் அறிமுகம்

இந்து தர்மம் என்பது ஆசாரம் அல்லது நாளந்த வாழ்க்கையின் சீரமைப்புப்படி அது தவத்திற்கோ, நீதியுடன் வாழ்வதற்கோ அத்திவாரமானது அது செல்வத்திற்கும், அழகிற்கும், நீண்ட ஆயுளுக்கும் தொடர்ச்சியான வம்ச பரம்பரைக்கும் வழிக்காட்டுகிறது இந்து தர்மத்தின் ஆணிவேர் மனித ஒழுக்கமாகும்.

**இந்து தர்மத்தின் இலட்சணங்கள்**

| | |
|---|---|
| மனசாட்சியின் உறுதி | தூய்மையான சிந்தனை |
| மன்னிக்கும் குணம் | திறமையான கல்வி |
| ஐம்புலனடக்கம் | சத்தியம் |
| மன, வாக்கு, காய தூய்மை | அமைதி |

**அறச் செயல்கள்.**

அறவச் சோறு : பசி என்று வந்தவர்களுக்கு மன சந்தோஷத்துடன் உணவு கொடுத்தல் இதுவே இக்காலத்தில் அன்னதானம் எனப்படுகின்றது.

அறவைச் சரியம் : ஆதரவற்றோருக்கும், வறியோருக்கும் உடைகள் கொடுத்தல்.

அறவைப்பிணம் சுடுதல் : ஆதறவற்றோரின் இறந்த பிணத்தை எடுத்துச் சுடுதல், அல்லது எரித்தல் அல்லது புதைத்தல்

அறுசமயத்தோருக்கு உண்டி : அறுவகை சமய துறவிகளுக்கும் வேறுபாடின்றி உணவளித்தல்.

அறுவர் சாலை : ஆதரவற்றோர் வாழ்வதற்கு மடங்கள் அமைத்தல்.

ஐயம் : இரப்போருக்கு பிச்சையிடல்

ஓதுவார்க்கு உணவு : வறிய மாணவர்களுக்கு உணவளித்து அவர்களின் கல்விக்கு உதவுதல்.

தடாகம் : பொதுமக்களின் பயன்பாட்டுக்கு குளங்கள் அமைத்தல்.

தண்ணீர் பந்தல் : வழிப்போக்கர் தமது களைப்பைத் தீர்த்துச் செல்வர்.

பசுவுக்கு வாயுறை : பசுமாட்டுக்குக்கு பசும் புல்லை உணவாகக் கொடுத்தல்

மதம் வளர்த்தல் : அநாதை குழந்தைகளை எடுத்து வளர்த்தல்.

தொகுப்பு : L. விக்னேஸ்வரி
தரம் : 13

# முயலும் ஆமையும்

ஒரு நாள் முயல் ஆமையை ஒட்டப் போட்டிக்கு வருமாறு அழைத்தது. ஆமையும் சம்மதித்தது போட்டி நடைபெறும் தினமும் வந்தது காட்டிவுள்ள அத்தனை மிருகங்களும் ஒட்டப்போட்டியைக் காண வந்திருந்தன யானை, எலி, மான், மரை, என அனைத்து மிருகங்களும் வெற்றிக் கம்பத்துக்கருகில் ஆவலோடு நின்றன போட்டி ஆரம்பமானது முயல் வேகமாக ஓடியது சிறிது நேரம் சென்று திரும்பிப் பார்த்தது ஆமையைக் காணவில்லை எனவே முயல் அருகில் இருந்த மரத்தடியில்சாய்ந்து ஓய்வெடுத்தது. அப்படியே நித்திரை கொண்டது ஆமை மெல்லமெல்ல வந்து வெற்றிக் கம்பத்தைக் கடந்தது. முயல் திடுக்கிட்டு விழித்து வெற்றிக் கம்பத்தை நோக்கி ஓடிவரும்போது ஆமை அங்கு சிரித்தபடி நின்றது.

ஆக்கம் : T. லக்ஷன்
தரம் : 03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes From :*

# S.M. Gold House.

For Gold jewellery Durable 22ct, Jewellers
& Silver Items.



No: 58A, Bandarawela Road,
Hali - Ela.
Tel : 055- 94449

*With Best Wishes From :*

# New Venus Studio

***Specialist In Still Photo & Video Filming***



No : 25B, Udayaraja Mawatha,
Badulla.
Tel : 055-23224


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes From :*

# *Mauri Jewellers*

**Dealers in Jewellers, gem & Pawn Brokers**

**Authorised Money Changer**



**No. 240, Main Street,**

**Negombo**

**Tel : 031 - 22343, 39389**

**Fax : 074-870114**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்பம் தரும் இனிய வார்த்தைகள்

"இனியவுளவாக வின்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந்தற்று""

வாழ்வில் மேன்மையடைய பிறப்புமுதல் இறப்பு வரை ஒவ்வொரு மனிதனும் பெரும்பாடு படுகின்றான். சமூகத்தில் பாவச் செயல்களைப் புரிந்து பொன், பொருள் தேடி பணத்தில் புரண்டெழுவதையே மேன்மையாகக் கருதுகின்றான் ஆனால் மேன்மை என்பது நல்லவற்றை எண்ணி. இனிய வார்த்தைகளை மற்றவருடன் பகிரும் போது ஏற்படும் ஆத்மார்த்த திருப்தி என்பதை எவரும் உணருவதில்லை இறைவனின் படைப்பில் எண்ணங்களையும் தேவைகளையும் வார்த்தைகளில் வெளிப்படுத்தும் உயிரினம் மனித இனமே. ஆகவே நாம் பேசும் நல்ல வார்த்தைகளின் பிரதி பலிப்புக்கள் தான் எமது மேன்மையை பிறருக்கு பறைசாற்றும் ஆயுதமாக கொள்ளப்படுகின்றது.

இன்றைய சமூகத்தை நோக்குகையில் நல்ல வார்த்தைகளை கேட்பது அருமருந்தாகவே இருக்கின்றது தீய எண்ணங்களுடன் அடுத்தவர் பற்றி புறங் கூறல், அவர்களின் வளர்ச்சியை தடுப்பது போன்ற அற்ப குணங்கள் மனதில் நிழலாடும் போது உதட்டிற்குள் உண்மை வார்த்தைகளை புகுத்துவது மொட்டைத் தலைக்கும், முழங்காலுக்கும் முடிச்சு போடுவது போன்ற செயல் ஆகும். உருக்கப்பட்ட தங்கத்தை எந்த வித ஆபரணமாகவும் மாற்ற முடியும் எந்தப் பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றினாலும் அதே வடிவத்தைப் பெறும். இதே போன்று எண்ணம் எந்தப் பொருளில் ஒன்று பட்டு விடுகின்றதோ அதே வார்த்தை தான் திரும்பி வரும் ~ வார்த்தை என்பது உள்ளத்திலிருந்து உண்டாகும் எண்ணத்தின் வெளிப்பாடு எண்ணமும் வார்த்தையும் ஒன்றுபடும் போது ஆற்றல் அதிகமாகும் நல்ல வார்த்தை இதயத்தில் குடி கொண்டு, நாவில் நல்ல சொல் நடனமாடுவது வரப்பிரசாதமாகும்.

"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து""

என்பதற்கிணங்க சிறு பராயம் கொண்டே நல்ல எண்ணங்களுடன் இனிய சொற்களை பேசக் கற்றுக் கொள்ள வேண்டும் ஒருவருக்குப் பரிசுப் பொருள் ஒன்றைக் கொடுத்து மகிழ்விப்பதைக் காட்டிலும் பண்பும், இனிமையும் கொண்ட கனிவான வார்த்தைகளால் அவரை மகிழ்விக்க முடியும் ஆம்! மலர்ந்த முகத்துடன் வரவேற்று கனிந்த வார்த்தைகளால் உபசரித்து இதயம் நிறைந்த இனிய மொழிகளை அள்ளி வழங்குவது தர்மம் செய்வதற்கு நிகராகும்.

பயனற்ற செயல்களை விட பயனில்லாமல் பேசிக் கொண்டிருப்பது ஆபத்தை விளைக்கும். சொல்கின்ற சொற்கள் நயமில்லாமல் நாகரீகமற்று வன் சொற்களாக இருத்தல் கூடாது உதட்டுக்குள் ஓடி விளையாடுகின்ற நாக்கை நன்றாக அடக்கியாள வேண்டும் நாட்டியமாடும் நாக்கை அதன் போக்கிலேயே விட்டு விட்டால் நம் வாழ்வும் பிறர் வாழ்வும் நரகமாகி விடும் ~ ஆகவே நாவில் இருந்து வெளிப்படும் ஒவவொரு வார்த்தையும் நன்றாக யோசித்து பேசப்பட வேண்டும்.

நல்ல வார்த்தைகள் எமக்கு உற்சாகத்தையும், உடல் வலுவையும் ஊக்கத்தையும் தெம்பையும், துணிவையும் ஆரோக்கியத்தையும் தர வல்லன ஆகவே நாமும் நல்லவற்றை எண்ணி நல்ல வார்த்தைகளைப் பேசி மேன்மையான எண்ணங்களுடன் இப் பாரினில் பிறந்த பயனை அடைவோமாக

"இன்பம் தரும் பேச்சு சக்தி தரும்
பானம் போன்ற வலிமை தரும்"

ஆசிரியை
செல்வி : R.M. பிரியதர்ஷினி

## பொது அறிவு

நவீன விண்வெளியுகத்தின் தந்தை யார் ?
சியோல் கோவஸ்கி

லீனா என்ற விண்கலம் எந்த நாட்டினரால் நிலவுக்கு அனுப்பப்பட்டது ?
ரஷ்யா

சி. ஒஃப் நொக்டா என்பது என்ன ?
நிலவில் உள்ள ஒர் இடம்

சந்திரனுக்கும் பூமிக்கும் இடையே உள்ள தூரம் எது ?
240 000 மையில் 384 000 km


செவ்வாய் கிரகத்தின் விட்டம் எவ்வளவு ?
6790 km

தொகுப்பு
K. கலைராணி
9A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


*With Best Wishes From :*

# Mahindas Book Centre



No : 50,52, Bazaar Street, Badulla. Tel : 055-30109, Fax : 30110

# Mahindas



No: 27, South Lane,
Badulla.
Tel : 055-22890

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் பாடசாலை

வளம் நிறைந்த குறிஞ்சியிலே
வற்றாத சிற்றருவி பூசையுடன்
வந்திடுவோர் வணங்கி ஏதும்
வேலன் அண்ணன் கோவிலுடன்

ஆலி எல நகரருகே
அமைந்த எங்கள் கூடமிது
அருவி போல் திகழ்ந்திடவே
ஆனந்தம் வாங்கித் ததும்பிடவே

மகுடம் சூடும் மன்னனாக
மக்கள் போற்றும் அதிபரும்
பண்பாலும் பணிவாலும் பறந்திடும்
பல்கலை ஆசிரிய குழாமும்

தலை வணங்கும் தன்மையுள்ள
தமிழ் அன்னை ஈந்திட்ட
தயவான சிந்தை கொண்ட
தலைசிறந்த மாணவ மணிகளும்

தங்கமாக வாய்த்த எங்கள்
தெய்வீகக் கூடம் அது
பார் புகழும் பள்ளியாக
பவனி வர வேண்டிடுவோம்

அரும்புகள் பட்டம் பெற
அத்தனையும் செய்திடுவோம் இனிதே
இல்லை இங்கே குறையே
என்ற ஓசை கேட்டிடுவோம்.

ஆசிரியை
ஆக்கம் : திருமதி T இந்ராணி.

# கல்வி

கல்வியே எமக்கு கண்ணாகும்
கடவுளைக் காட்டும் வழியாகும்
வாழ்வில் மேன்மை அடைந்திடவே
வெற்றிகள் அமைப்பதும் அதுவாகும்.

கல்வியைக் கற்றால் உயர்ந்திடலாம்
காவியங்கள் பல அமைத்திடலாம்
அறிவுமிக்க ஆசானாக மாறிடலாம்
ஆண்டவனடியைச் சேர்ந்திடலாம்.

தொகுப்பு : P. உதயரஞ்சனி
தரம் : 10A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes From :*

# கோவில் கடை


ஹாவா எலிய நுவரெலியா

# K.K. Video & Communication
# (Kovil Kadai)

No : 21B, Kovil Road,
Hawa Eliya,
Nuwara-Eliya
Tel: 052-34254

*With Best Wishes From :*

# Deva's



No : 239/A, Lower Street,
Badulla.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியுலகில் தேர்ச்சிமையக் கல்வி

கல்வியானது மனிதனின் உயிரோட்டமுள்ள வாழ்க்கையோடு தொடர்புடைய தொடர்ச்சியாகும். ஒருவன் பெறும் பல்வகைப்பட்ட அனுபவங்களே கல்வியாகும். அனுபவங்கள் ஊடாகவே ஒருவன் அறிவைப் பெறுகின்றான். அனுபவங்கள் பாடசாலையில் மட்டும் கிடைப்பதன்று அவை தொட்டிலிலிருந்து சுடுகாடு வரை அதாவது பிறப்பிருந்து இறப்பு வரை கிடைக்கின்றன. ஆரம்பக் காலத்திலிருந்து கல்வி பற்றிய நிலவிய கருத்து என்னவெனில் " வெறுமையில் உள்ள தலைக்குள் அறிவை நுழைக்கும் செயல் என்பதாகும்." எனவே இந்த அடிப்படையில் தான் ஆசிரியர் மையக் கல்வி எனும் கல்விச் சிந்தனை ஊடுருவியது இங்கு ஆசிரியர், கல்வியை வழங்குபவராகவும் மாணவர் பெறுபவராகவும் இருந்தனர். ஆசிரியர் மையக்கல்வியிலிருந்த குறைப்பாடு புலப்பட மாணவர் மையக்கல்வி, பாடமையக் கல்வி போன்ற பல்வேறு கல்விச் சிந்தனைகள் இலங்கை பாடசாலை கல்வியில் ஊடுறுவிச் சென்றாலும் சமூகத்தில் பாரியமாற்றத்தை ஏற்படுத்தவில்லை. அதற்கு மாறாக தேசிய மட்டத்தில் குறைவான வெளிப்பாடுகள், சமூகப் போராட்டம், வன்செயல்களின் உயர் வீதம், தற்கொலை வீத உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம், சிறந்த பெறுபேறுகள் குறைந்த வீதமாக இருத்தல், பாடசாலைக் கல்வியை புறக்கணித்தல் என்பன இலங்கை கல்வி வரலாற்றில் கல்வியில் தோல்வியுற்ற நிலையை வெளிப்படுத்தும் அறிகுறிகளாக சமூகத்தில் இடம் பிடித்தன.

ஆகவே பாடசாலைகளில் தரமான கல்வி வழங்கப்படவில்லை இங்கு பாடசாலையில் கற்பித்தல் கோலமானது அறிவுத் தொகுதியினை பெற்றுக் கொள்ளல் அல்லது பல்கலை கழகத்துக்கு பிரவேசிப்பதற்கான நுழைவுச் சீட்டைப் பெறல் என்ற இலக்கினை கொண்டதாகவே இருந்தது. இதற்கான கலைத்திட்டம் பாடமையமானதாக அல்லது பரீட்சை மையமானதாக நீண்ட காலம் இருந்து வந்துள்ளது. பரீட்சைகளில் சித்தி பெறும் கூட்டமொன்றை உற்பத்தி செய்யும் தொழிலகமாகவே பாடசாலைகளும் பல்கலைக் கழங்களும் இருந்ததைக் காணக் கூடியதாக உள்ளது. மேற்கூறிய விடங்களை 1992ம் ஆண்டு தேசிய கல்வி ஆணைக் குழு அறிக்கை தெட்டத் தெளிவாகக் கூறியது. இதற்குரிய காரணங்களையும் எடுத்து இயம்பியுள்ளது. பல்கலை கழகத்தில் அல்லது பாடசாலையின் சித்தி பெற்ற கூட்டத்தினரில் கூட சிறந்த வாழ்க்கையை நடாத்துவதற்கு வேண்டிய அடிப்படைத் தேர்ச்சிகள் இல்லாத நிலையில் இருந்ததை எடுத்துக் காட்டியது. அத்தோடு இலவசக் கல்வியின் மூலம் எல்லோருக்கும் கல்வி, கல்வியில் சமவாய்ப்பு எனும் சிந்தனைகள் தோன்றினாலும் தரமான கல்வியை வழங்க முடியாமல் போய்விட்டது. இதனால் தேசியக் கல்வி ஆணைக்குழு அறிக்கையின் விதப்புரைக்கு அமைய தேர்ச்சிமையக் கல்வி எனும் கல்விச் சிந்தனை இலங்கை கல்வி உலகினுள் பிரவேசித்தது. இவ் அறிக்கையின் படி கற்றல், கற்பித்தல் செயன்முறையின் ஈற்றில் அடைந்து கொள்ள எதிர்ப்பார்க்கப்படும் இலக்குகள் தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கவேண்டும் என குறிப்பிட்டுள்ளது. இதன்படி நாடு முழுவதும் தரம் 1-13 வரையிலான கலைத்திட்டம் தேர்ச்சிமையக் கலைத்திட்ட அமைப்பில் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

இந்த தேர்ச்சிமையக் கலைத்திட்டத்தின் நோக்கம் மையச்சிந்தனையில் சற்று விலகிச் செல்வது ஆகும். அதாவது அறிவைப் பெற்றுக் கொடுத்தல் அல்லது பரீட்சை ஒன்றில் சிறந்த பெறுபேற்றை பெறல், அல்லது பல்கலைக்கழகத்துக்கு நுழைவுச் சீட்டைப்பெறல், என்ற மையக் கருவில் இருந்த கலைத்திட்டத்தின் அடித்தளத்தை தேர்ச்சிமையக் கல்வி அமைப்புக் கேற்ப மாற்றுவதே தேர்ச்சிமையக் கல்விக் கலைத் திட்டமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு மாணவனும் சிறந்த வாழக்கையை நடாத்துவதற்கு வேண்டிய அறிவு விளக்கம் செயற்திறன் அத்தோடு ஆக்கத்திறன், சுயதூண்டல், ஒழுக்கம், சகிப்புத் தன்மை மதிப்பளித்தல் மற்றும் ஏனைய பண்பாட்டு விழுமியங்களையும் கொண்ட முழுமையான ஆளுமை விருத்தி உடையவராக உருவாக்க பாடசாலைக் காலம் ஒன்றில் ஒரு பிள்ளை பெற்றுக் கொள்ளக்கூடிய அடிப்படைத் தேர்ச்சிகள் இனங்காணப்பட்டு ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு.

1. தொடர் பாடல் பற்றிய தேர்ச்சிகள் - இது எழுத்தறிவு, சித்திர அறிவு, எண்ணறிவு, கொண்டதாகும்.
2. சூழல் தொடர்பான தேர்ச்சிகள் - சமூகச்சூழல்,உயிரியியற்சூழல், பௌதீகச்சூழல் கொண்டதாகும்.
3. ஒழுகலாறு,சமயம் என்பன தொடர்பான தேர்ச்சிகள்.
4. ஓய்வு,விளையாட்டு சார்பான தேர்ச்சிகள்
5.கற்கக் கற்றல் தொடர்பான தேர்ச்சிகள்.

இவ் ஐந்து வகையான தேர்ச்சிகளைப் பெற்ற பிள்ளை பாடசாலைச் சூழலிருந்து பொருத்தமான சமூகமயமாக்கல் உடைய பிரஜையாகவும், இலகுவாக இப்பிள்ளை இணைந்து கொள்ள முடியும். ஐந்தாம் வகைத் தேர்ச்சியான கற்கக் கற்றல் எனும் தேர்ச்சியில் விரைவாக, மாறுகின்ற, சிக்கலான, நெருக்கடியான உலகு ஒன்றின் இயல்பிலிருந்து நேரடியாகவே உருவாகின்றன. ஒருவர் எதனைக் கற்றாலும் அக்கல்வி காலத்துக்கு ஏற்ப புதுப்பிக்கப்படலும்,மீளாயப்படலும் அவசியமாகும். இதற்கு ஒருவர் தம் அவதானத்தைப் பேணுவதில்,விழிப்புணர்வு, நுண்ணுணர்வும், திறமையும் உடையவராய் இருப்பதோடு ஒரு குறித்த நிலையில் அவசியமாகின்ற விபரங்களை விடாமுயற்சியோடு கவனிப்பதற்கு விருப்பமுடையவராகவும் இருத்தல் வேண்டும் என்பதை உணர்த்துவதே ஐந்தாம் வகைத் தேர்ச்சியாகும்.

தரம் 1 தொடக்கம் 13 வரை பாடசாலையை விட்டு வெளியேறும் பிள்ளைகளுக்கு மேற்கூறிய அடிப்படைத் தேர்ச்சிகள் பெறக்கூடிய வகையில் கற்றல் - கற்பித்தல் மதிப்பீடு, செயற்பாடுகள் அமையவேண்டும். ஆசிரியர் தனது கற்றல், கற்பித்தல் மதிப்பீடு, செயற்பாடுகளின் போது தேர்ச்சிகள் எய்தப்படல் வேண்டும் என்ற நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டே திட்டமிட வேண்டும்.அல்லாமல் பழைய முறையில் பாடப் புத்தகத்தின் அடிப்படையில் வைத்துக்கொண்டும், வகுப்பறைச் செயற்பாடுகளை வைத்துக்கொண்டும், மாணவர்கள் அடைந்துள்ள தேர்ச்சி மட்டத்தை அளவிட முடியாது. ஆகவே தான் தேர்ச்சிமையக் கல்வியில் தேர்ச்சிகளை அளவிடக் கூடிய மரபுரீதியற்ற மதிப்பீட்டு கலாச்சாரத்துக்கு ஆசிரியர்கள் செல்ல வேண்டியுள்ளது.இவ்விடயத்தை சற்று நோக்குமிடத்து மதிப்பீட்டு கலாச்சாரத்தில் மிகப் பிரதான பங்கை வகித்த எழுத்துப் பரீட்சை தேர்ச்சிமையக் கல்வியில் பலம் குன்றியதாக காணப்படுகிறது.ஒரு பிள்ளையிடம் விருத்தியாகியுள்ள தேர்ச்சிகளை எழுத்துப்பரீட்சை மூலம்அளவிடமுடியாது. உதாரணமாக நல்லொழுக்கம்,சமயம் சார்ந்த தேர்ச்சிகளை எழுத்துப்பரீட்சை ஒன்றில் அளவிட முடியாது. எனவே பாடசாலைகளில் தேர்ச்சிகளை மதிப்பிட பல்வேறு முறைகள் அவசியப்படுகின்றன் இதற்கு அமைய தேர்ச்சிகளை அளவிடக்கூடிய பல்வேறு கருவிகளின் தேவை ஏற்படுகின்றது. இதற்கேற்ப ஒப்படை, செயற்றிட்டம், பாட மேம்பாட்டுக் களப்பிரயாணம்,ஆய்வு, செய்முறை , வாய்மொழிப் பரீட்சை, அவதானிப்பு போன்ற கணிப்பீட்டுக் கருவிகளைக் கற்றல் கற்பித்தல் உத்திகளாகவும் அதே வேளை இவ்வாறான சந்தர்ப்பங்களில் மாணவர்களை மதிப்பீட்டுக்கு உட்படுத்துவதும் தேர்ச்சிமையக்கல்வி அடிப்படையிலே ஆகும்.

ஆனால் பாடசாலையில் தேர்ச்சிமையக்கல்வி பூரணமற்ற விளக்கமும்,தெளிவற்ற போக்கும் தேர்ச்சிகள் என்றால் என்ன என்பதை புரிந்து கொள்ள முடியாத நிலையில் இன்று ஆசிரியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்றனர். இதற்குக் காரணம் என்னவெனில் தேர்ச்சிகளுக்கேற்ப இலக்குகளை தீர்மானிக்காமையும் அத்தோடு கணப்பீட்டுக் கருவிகளை கற்றல் கற்பித்தல் செயல் ஒழுங்காகவும் ,மதிப்பீட்டு ஒழுங்காகவும் தொடர்புப்படுத்தி செயல் படுத்தாமையே காரணமாகும். அத்தோடு பழக்கப்பட்ட மரபுரீதியான புத்தகம் எழுத்து பரீட்சை தேர்ச்சிகளை அளவிடமுனைவதும் இவ்வாறான தெளிவற்ற சிந்தனைக்குக் காரணமாகும்.

எனினும் மாறிவரும் உலகத்துக்கு ஏற்ப சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய பிள்ளைகளை உருவாக்கவும்,தொழில்களுக்கு பொருத்தப்பாடுடைய பிள்ளைகளை உருவாக்கவும் அத்தோடு முழுமையான ஆளுமை விருத்தியுடைய பிள்ளைகளை உருவாக்கவும் குறைந்த பட்சம் இவ்வைந்து அடிப்படை தேர்ச்சிகளையுமாவது ஒரு பிள்ளை அடைந்திருக்க வேண்டும்.எனவே நவீன யுகத்தில் தேர்ச்சிமையக்கல்வி அவசியம் என்பது கண்கூடு.

ஆசிரியர் :- S.ஜெயகாந்தன்

உசாதுணை :- தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை 1992
கல்விக்கான துரித ஜனாதிபதி செயலணிக் குழு அறிக்கை 1997
தி.வி. ஜோர்ஜ் அவர்களின் குருபீட கட்டுரையில் இருந்து.


With Best Wishes From :

SUWARNA JEWELLERY




No : 6D, Central Super Market
New Complex,
Badulla.
Tel : 055- 22720
Mobil - 072 - 556099


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes From :*

# Thaarsanaa



No : 100 (132) Lower Street, Badulla.

*With Best Wishes From :*

# NEW UVA SALOON



No : 237, Lower Street,
Badulla.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்ந்து பார்

நீ வாழ்வென்னும்
அற்புதத்தின்
வழிநடைப் பயணி ~ அதனால்
வாழ்க்கையை வாழ்ந்துபார்

நீ வாழும் போது
செத்துச் செத்து வாழ்ந்தாயானால்
சாகும் போது உன்னை
வாழ்த்தி வழியனுப்பி வைக்கும் ~ இவ்வையகம்

வயதில் தடுக்கி விழுவதுண்டு
நிமிர்ந்து நடப்பவர் தூக்கிவிடுவதுண்டு
வெற்றிக்குள் தோல்வி
தோல்விக்குள் வெற்றி ~ அதனால்
வாழ்வை வாழ்ந்து பார்

வளரத்துடிக்கும் அரும்பு நீ
உரமூட்டி போஷிப்பது ~ அனுபவமே
அரும்பு நாளை கிளைத்தரலாம்
கிளை நிழல் தரலாம் ~ அதற்காக
வாழ்வை வாழ்ந்துபார்

சளைக்காமல் முயன்று
சரித்திரம் படைத்துவிடு
நாளைய சந்ததியின்
இன்றைய சக்தி நீ ~ அதற்காக
வாழ்வை வாழ்ந்து பார்

ஆக்கம் : சு. மணிமேகலா
தரம் : 13 (கலைபிரிவு)

# பொது அறிவு

புராதன உலகப் படத்தை வரைந்தவர்
க்ளோடியஸ் தொலமி

அமெரிக்காவின் முதல் ஜனாதிபதி
ஜோர்ஜ் வாஷிங்டன்

முதல் முதலில் ஹெலிக்கப்டரை விண்ணில் பறக்க விட்டவர்
பிரிக்கெட் என்ற விஞ்ஞானி

இந்தியாவின் முதலாவது விண்வெளி வீரர் யார் ?
ராகேஸ் சர்மா

பூமிக்கு அருகில் உள்ள நட்சத்திரக் கூட்டம் எது ?
அந்து மீரேண்டா

உலகில் மிகப் பெரிய கோள் மண்டலம் எங்கு உள்ளது ?
ரஷ்யாவில் மோஸ்கோ நகரில்

ஒரு நாளில் ஒரு நத்தையின் வேகம்
16 மீற்றர்

இலங்கையில் முதன் முதலாக ஒலிம்பிக் பதக்கம் பெற்றவர்
டங்கன் வைட்

முதன் முதலில் இமய மலைச் சிகரத்தை வெற்றி கொண்டவர்கள்
எட்மன்ட், ஹாலரி. ரென்சிங்

கோள்களின் எதிர்ப்பக்கம் சுழலும் கோள் எது ?
யுரேன்ஸ்

வியாழனின் உபகோளில் மிகவும் பெரியது எது ?
கனிமிட்

வானில் எத்தனை உடுத்தொகுதிகள் மொத்தமாக காணப்படுகிறது ?
நாற்பத் தெட்டு


தொகுப்பு
V. டயானி, & M. செல்லமலர்
9A




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes From :*

# Pram Brothers




No : 19/1, Badulupitiya Road,
Badulla.
Tel : 055-22774

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக ஜோதி

பிறந்தகம் தாண்டி மலையகம் புகுந்த
தொழிலாளர் வர்க்கத்தின் உயர்வுக்கு
அரசியல் சுதந்திரம் அவசியம் என்ற
உரிமைக் குரல் கொடுத்த உத்தமன்

தொழிலாளி எனும் தோழர்களின் இரத்த வியர்வை
பிழியப்பட்ட வேளை பேசும் பிரதிநிதியாம்
காலம் அறிந்து போராட்டம் நடாத்தி
உரிமைக் கரம் தந்து உயர்ந்தவன்

அரசியலில் காந்தியும் ஆன்மீகத்தில் கண்ணனும்
ஆசான் என்றுரைத்த வார்த்தையை
செயலில் காட்டிய செம்மலாய் நின்று
சத்தியாக்கிரகம் நடாத்திய சாத்வீகன்

காங்கிரஸ் கோட்டையை காலத்தின் தேவையாய்
கட்டிக்காத்து மலையகத்து மன்னன் ஆனதால்
பாரி வள்ளலாய் வாரி வழங்கிய எங்கள்
பார்புகழ் தேடிய மாந்தருள் மாணிக்கம்

எட்டடி வீடு எல்லையென ஏங்கியிருந்த வேளை
சட்ட சபையினிலே சொற் தீரம் பேசி
பிரஜா உரிமைதனை பெறுபேறாய் வென்றெடுத்து
புகழாரம் சூடிய பூமகன்

மாண்புயர் சௌமியத்து நாயகரின்
மிளிர்கின்ற தொண்டனைத்தும்
மனிதத்துவம் வாழும் வரை
மலையகத்து ஜோதியாய் ஒளிவீசும்

ஆக்கம்:- சின்னையா கனகேஸ்வரன்
தரம் 13 (கலைப்பிரிவு)

# சூழல் மாசடைதலும் அதனைத் தடுப்பதற்கான வழிவகைகளும்

மனிதனால் நீர், நிலம், வளியின்றி உயிர் வாழ முடியாது. ஆனால் தற்போது மனிதர்களின் உயிர் போல விளங்குகின்ற இவ் வளங்கள் மாசடைந்து வருதல் மிக வேகமாக அதிகரித்துக் கொண்டு செல்கின்றது. இன்றைய காலத்தில் நீர், நிலம், வளி மாசடைவதில் நாமும் காரணமாகிவிட்டோம்.

மனிதன் அன்றாடம் பல்வேறு கருமங்களுக்காக பயன்படுத்தும் வளம் நீர். கிருமிநாசினி பாவனையின் பின்னர் போத்தல்களை நீர் நிலைகளில் எறிவதன் மூலமும், தொழிற்சாலைகளிலிருந்து வரும் கழிவுகள் மூலமும், எண்ணெய்க் கப்பல்கள் கசிவதன் மூலமும் மாசடைகின்றது. இவ்வாறு மாசடைந்த நீரை உபயோகிப்பதால் நாம் பல நோய்களுக்குள்ளாக நேரிடுகின்றது. எனவே மேலே கூறப்பட்டுள்ளவாறு நீர் மாசடைவதற்கு ஏதுவான காரணிகளை அறிந்து அதனைத் தடுப்பதற்கான வழிகளை மேற்கொண்டு நீரைக் காக்க வேண்டும்.

அடுத்ததாக நிலம், பொலித்தீன் பைகளை எறிவதன் மூலமும், பல்வேறு கிருமி நாசினிகளைத் தெளிப்பதன் மூலமும் நிலம் வளமற்ற மண்ணாக மாற்றப்படுகின்றது. இதனால் விவசாயம் செய்வோர் பெரும் இன்னல்களுக்கு உள்ளாகின்றனர். ஆகவே பொலித்தீன் பைகளை நிலத்தில் எறியாமல் மீள் சக்கர செய்முறைகளுக்கு உட்படுத்தி மீண்டும் பயன்படுத்த வேண்டும். இரசாயனப் பசளைகளையும் கிருமி நாசினிகளையும் பயன்படுத்தாமல் இயற்கையானவற்றை பயன்படுத்த வேண்டும். ஆங்காங்கே காணப்படும் குப்பை கூளங்களை பெருக்கி தீ மூட்ட வேண்டும்.


மனிதன் உயிர் வாழ்க்கைக்கு தேவைப்படும் வளி தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் புகைகள் மூலமும், வாகனங்கள் மூலம் வெளியேறும் புகைகள் மூலமும், துர்நாற்றங்கள் மூலமும் மாசடைகின்றது. எனவே தொழிற்சாலைகளிலிருந்து புகையை வெளியேற்றுவதற்காக குழாய்களை உயரமாக அமைக்க வேண்டும். இவ்வாறாக பல நடவடிக்கைகளை மேற்கொண்டு நீர், நிலம், வளி ஆகிய வளங்களை நாம் காப்போமாக.

*T. அருண்*
*தரம் 9B*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes From :*

# Quick Link Communication



No : 05, Nuwaraeliya Road,
Hali-Ela.
Tel /Fax : 055-94975

*With Best Wishes From :*

# Ravi Jewellers



No : 163, Lower Street,
Badulla.
Tel : 074-499591


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் மொழிகள்

திறமையையும் மிஞ்சக் கூடிய ஆற்றல் நிலையான பயிற்சிக்கு உண்டு.

சுவர்க்கம் அழகானது, அதைக் கட்டியவன் இன்னும் அழகானவன்.

சிப்பிக்கு அதன் முத்தால் அழிவு, சந்தன மரத்துக்கு அதன் மணத்தால் அழிவு.

ஊழியம் செய்பவன் அடிமையுமில்லை, ஊதியம் கொடுப்பவன் ஆண்டவனுமில்லை.

அன்புக்கு உற்பத்தி ஸ்தானம் அன்னை, அறிவுக்கும் உற்பத்தி ஸ்தானம் தந்தை.

கட்டுப்பாடும், ஒற்றுமையுமே நமது தேசத்தின் முதல் சேவை.

பிறரிடம் சந்தோஷத்தை பகிர்ந்து கொண்டால் அது இரட்டிப்பாகும்.

எந்த வேலை உனக்கு பழக்கமானதோ அதில் புதுமைகளை காண மறவாதே.

அடக்கமே அறிவுடைமையின் சிறந்த அடையாளம்.

சிரித்தால் உங்களோடு சிரிக்க பலர், அழுதால் யாரும் வரமாட்டார்கள்

துன்பத்தை சகித்துக் கொள்ளும் மனிதனே, இன்பத்தை அனுபவக்க தகுதியானவன்.

கடவுள் இல்லை என்று ஒருவன் நினைப்பானானால் அதுவும் கடவுள் செயலே.

தவறான வழியில் சேர்த்த பணம் விரைவில் அழிந்து விடும்.

தனக்கு உரிமையில்லாத பொருளை எடுத்தால் அதன் விளைவு ஆபத்து.

உன்னால் தீபங்கள் எரியும் என்றால் நீ தீக்குச்சியாய் இருப்பதில் ஆனந்தப்படு.

சமாதானம் செல்வத்தை உண்டாக்கும், செல்வம் சண்டையை உருவாக்கும்.

அன்பு குறைந்த இடத்தில் குற்றங்கள் பெரிதாக தோன்றும்.

எந்த வேலையும் தன் விருப்பத்திற்கேற்ப மாற்றுபவனே புத்திசாலி.

அன்பே சிறந்த தர்மம், மனசாட்சி சிறந்த வழிக்காட்டி.

கடமையை செய்யுங்கள், புகழ் மாலை உங்கள் காலடியில்

அதிகாலையில் எழுந்தவனும், இளவயதில் மணந்தவனும் வருந்தியதில்லை.

வாழ்க்கையில் உறுதியாக உள்ளவனுக்கு, இவ்வுலகில் அசாத்தியமானது எதுவுமில்லை.

ஒரு மனிதனின் தலைசிறந்த நண்பர்கள், அவனது பத்து விரல்களே.

அழகு என்பது ஆண்டவனின் புன்சிரிப்பு, இசை என்பது அவனது குரல்.

உண்பது மனிதனின் செயல், ஜீரணிப்பது இறைவனின் செயல்.

மற்றவர்களுடைய துன்பத்தை உணரமுடியாதவன் மனிததோற்றமுள்ள மிருகம்.

பிரச்சனைகளைத் தீர்க்க அதை நல்ல முறையில் அலசி ஆராய வேண்டும்.

பஞ்சில் படியும் தீப்பொறியைவிட மனதில் படியும் துவேஷம் விரைந்து பரவும்

மோசமான சமாதானத்தைவிட சண்டை மேலானது.

ஆசிரியர்


ஆக்கம் : திரு. S. செந்தமிழ்செல்வன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes From :*

# ST, ANTHONY'S HARDWARES

General Estate & Govt. Suppliers



No : 121, Church Road,
Ragala.
Tel : 052-65327,052-65428

*With Best Wishes From :*

# CHANDRA STORES & CHANDRA BANKERS



No : 276, Main Street,
Passara.
Tel : 055-88301

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாங்கள்

பார் எங்கும் ஒளிபரப்பும் பகலவனுக்கு முன்
புதித் தூக்கத்தில் கண் விழித்து
பாதையோரம் நடைபோட்டோம் பாடசாலைக்காய்
நாங்கள்.................

இப்பாரினிலே பாட்டாளியாய் இருந்தாலும்
படுப்பதற்கு பாய் இல்லாவிட்டாலும்
படிப்பதற்காய் பணத்தை ஒதுக்கினோம்.
நாங்கள்.................

பனிப் போர்வையும் பாராது பத்து நிமிடம்
இருக்கவே பறந்து வந்தோம் பஸ்வண்டிக்காய்
நேரத்துடன் பாடசாலைக்கு செல்ல
நாங்கள்.................

பட்ட வெயிலிலும் கொட்டும் மழையிலும்
பாடாய் பட்டு படித்து வேலை இல்லாமல்
இப்பாரினில் அல்லஹுறுகின்றோம்
நாங்கள்.................

டியூட்டரிகளில் பணம் கட்டிப்படித்து
பல்கலைக்கழக வெளிவாரிப்பட்டதாரியானோம்
வேலை வேட்டையில் தீவிரமானோம்
நாங்கள்.................

வேண்டாத கடவுளையும் வேலைக்காய்
நேர்த்திக்கடன் பல வைத்து வேண்டினோம் நாங்கள்
இச்சமுதாயத்தில் வேலையில்லா பிரஜைகள்
நாங்கள்.................

தொகுப்பு: ச. மகேஸ்வரன்
தரம் : 10B

## மகளிர் தினமே வருக !

சமத்துவம் இல்லாத உலகிலே
சாந்தமாக வந்து பிறந்தவளே !
சர்வோதயமாக இப்பார் புகழ
சங்கமித்த பெண்மையே !
உன்னைப் போற்றுகிறேன்.

பாரினையே படைத்து
பார் போற்ற வாழ்ந்திடும் !
பெண்மையே உன்னை
உலக தாயாக போற்றி !
உன்னை வாழ்த்த ஒரு நாள்

பாசத்திற்கு தாயாகவும்
பண்பிற்கு தூய்மையானவளாகவும் !
அழகுக்கு அதிபதியாகவும்
பொறுமைக்கு பூமாதேவியாகவும் !
விளங்கும் பெண்மையே

மாசி மாத எட்டாம் நாளிலே
உன்னை புகழவதற்கு கென்றே!
படைக்கப்பட்ட இந்நாளே வருக
மனோரம்யமான பெண்மையே !
மண்ணகம் உள்ளவரை நீ வாழ்க

ஆக்கம் : பா. சுபாஷினி
தரம் : 11B

## சூரியன்

கண்ணை மயக்கும் சூரியனே
காலையில் எழுந்தே வந்திடுவாய்
உன்னைக் காண கோடிக் கண்கள்
சின்ன சிட்டுகளாய் பறந்தனவே

நெஞ்சம் மகிழ வைத்தவனே
இரவில் ஏன் மறைகின்றாய்
விடியல் வந்ததும் மனம் துள்ளுதே
உன்னைக் கண்டு மகிழ்வதற்கு

உன்னை கண்டு மகிழ்வதற்கு
உலக உயிர்கள் துள்ளிடுமே
உலக உயிர்கள் உயிர் வாழ
உன் சேவை எத்தனையோ

தொழில் நுட்ப உலகிற்கு
உன் சேவை எத்தனையோ
என்றும் ஒளிதர வேண்டுமே
எங்கள் சூரிய நாயகனே.

G. ஜனலக்
தரம் : 7A

## படிக்க வாரீர் கவிதை

பள்ளி வயது ஐந்தாச்சு
படிக்க வாரீர் பாலர்களே
பள்ளி சேரும் காலமிது
பண்பை வளர்க்கும் நேரமிது

எண்ணும் எழுத்தும் கற்றிடுவீர்
ஏற்றம் வாழ்வில் பெற்றிடுவீர்
கண்ணும் கருத்தாய் அறிந்திடுவீர்
கல்வி கற்க விரைந்திடுவீர்

படிக்க முன்னால் பயமாகும்
படித்த பின்னால் துரும்பாகும்
படிக்கப் படிக்கக் கரும்பாகும்
படித்த பின்பு புகழாகும்


பெற்றோர் நெஞ்சம் மகிழ்ந்திட
பெரிய மனிதன் ஆகிட
கற்றோர் உன்னை புகழ்ந்திட
கற்போம் வாரீர் பாலர்களே.

தொகுப்பு : வீ. நிரஞ்சனி
தரம் : 10A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes From :*

# NEW CHANDRA STUDIO & VIDEO




Pioneers in Video Filming & Still Photographing
Specialist in Wedding album designing

*New Bazaar Ragala*
*Halgranoya.*

*With Best Wishes From :*

# Royal Traders

DEALERS IN QUALITY SPICES



**No : 235, Lower Street,**
**Badulla.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடுகளின் தேசிய விளையாட்டுகள்

01. அவுஸ்திரேலியா : கிரிக்கட்
02. இலங்கை : எல்லே/ கரப்பந்தாட்டம்
03. பாகிஸ்தான் : ஹொக்கி
04. துருக்கி : மல்யுத்தம்
05. ஜப்பான் : கராத்தே/ ஜூடோ
06. ஸ்கொட்லாண்ட் : கால்பந்து
07. கனடா : பனிஹொக்கி
08. இந்தியா : ஹொக்கி/ கபடி
09. ஸ்பெயின் : ஜல்லிக்கட்டு

# நாடுகளின் தேசிய சின்னங்கள்

01. அமெரிக்கா : தங்கத்தடி
02. அவுஸ்திரேலியா : கங்காரு
03. அயர்லாந்து : ஹெப்பரக் மலர்
04. இந்தியா : சிங்கத்தின் தலை
05. இலங்கை : வாளுடன் சிங்கம்
06. ஈரான் : ரோஜா மலர்
07. ஈராக் : சிவப்பு ரோஜா
08. எகிப்து : தாமரைப் பூ
09. கனடா : வெள்ளை மலர் (அல்லி)
10. சீனா : திராட்சை மலர்
11. சுவிஸ்லாந்து : இடல்விஸ் மலர்
12. பாகிஸ்தான் : பிறை
13. பெல்ஜியம் : அசலியா மலர்
14. போலந்து : சோலி மலர்
15. பிரான்ஸ் : அல்லி மலர்
16. பிரித்தானியா : ரோஜா மலர்
17. யப்பான் : கூட்டுப்புழுக்கூடு
18. ருமேனியா : பூவரசம் பூ
19. ஜேர்மனி : கான் பூ
20. ஸ்பெயின் : கருடன்
21. டென்மார்க் : கடற்கரைச் செடி

தொகுப்பு : M. வினோதினி
தரம் : 10B

# TRY THESE TINGUE TWISTERS

Moses Supposes his toeses ar posies of roses moses supposes erroneously ;
for nobody's toeses are posies of roses,
As Moses supposes his toeses to be.

Betty Botter bought some butter,
but the butter Betty Botter bought was bitter,
so betty Batter bought some new butter
To make the bitter butter better.

Swan swims over the sea
swim, swan swim.
swan, swan back again
well swim swan.

T. Sudarshini
Grade - 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Wishes From :

# P. A. Sundaraesan

*Sales Executive*

**UNITED BREWERIES LANKA LTD,**

Residence :

01, Prabothagama,

Bogameditha

Hali-Ela.

Tel : 055-94596,

Hotline : 077-812380

Office :

055-23588

055-30088

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்க காலம்

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சிறந்த கவிவளம் உடையதாக உயர்நிலை பெற்று விளங்கிய தமிழ் மொழியின் சிறப்பினை சங்க காலத்திலிருந்து அறிந்து கொள்ளலாம். சங்கங்களைக் கொண்டு தமிழ் வளர்த்த காலம் சங்ககாலம் என அழைக்கப்படுகின்றது. இக்காலம் கி.பி. 1 தொடக்கம் 3 நூற்றாண்டுகளை உள்ளடக்கிய காலமாகும்.

## சங்க கால நூல்கள் (பதினென் மேற் கணக்கு நூல்கள்)

| எட்டுத்தொகை | பத்துப்பாட்டு |
|---|---|
| அகநாநூறு | திருமுருகாற்றுப்படை |
| புறநானூறு | பொருநறாற்றுப்படை |
| நற்றினை நானூறு | பெரும்பானாற்றுப்படை |
| குறுந்தொகை நானூறு | சிறுபானாற்றுப்படை |
| பதிற்றுப் பத்து | பட்டினப்பாலை |
| ஐங்குறு நூறு | முல்லைப்பாட்டு |
| பரிபாடல் | மதுரைக் காஞ்சி |
| கலித்தொகை | நெடுநல்வாடை |
| | குறிஞ்சிப்பாட்டு |
| | மலைபடுகடாம் |

## சங்க கால அகத்திணைப் பண்புகள்

அகத்திணை என்பது தூய காதல் ஒழுக்கமாகும். காதலனுக்கும், காதலிக்கும் இடையேயுள்ள காதல் ஒழுக்கத்தை புலவன் கூறும் பொழுது ஒருவர் பெயரை சுட்டாது கூறும் பாக்கள் அகத்திணை எனப்படுகின்றது.

## சங்க கால புறத்திணைப் பண்புகள்

புறத்திணைப் பண்பு என்பது பெயர் சுட்டிக் கூறும் காதல் பாக்களையும், போர், வீரம், கொடை போன்ற ஏனைய ஒழுக்கங்களையும் கூறும் பாக்கள் புறத்திணை எனக் கூறப்படுகின்றது.

## சங்ககாலத்தில் உள்ளடக்கிய முக்கிய அம்சங்கள்

| நிலம் | இடம் | தொழில் | போர்முறை | ஒழுக்கம் |
|---|---|---|---|---|
| குறிஞ்சி | மலையும் மலை சார்ந்த இடமும் | திணைவிதைத்தல் வேட்டையாடுதல் | வெட்சி | புணர்தல் |
| முல்லை | காடும் காடு சார்ந்த இடமும் | மந்தை மேய்தல் | வஞ்சி | இருந்தல் |
| மருதம் | வயலும் வயல் சார்ந்த இடமும் | உழவு செய்தல் | உழநை | ஊடல் |
| நெய்தல் | கடலும் கடல் சார்ந்த இடமும் | மீன்பிடி, உப்பரித்தல் | தும்பை | இரங்கல் |
| பாலை | மணலும் மணல் சார்ந்த இடமும் | கொள்ளையடித்தல் சூறையாடுதல் | வாகை | பிரிதல் |

தொகுப்பு : *T.* செல்வரட்ணம்


தரம் : 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes From :*

# T.M.P. Textiles

Dealers in Textiles Items, School Items, Gift Items,
& Silver Items Whole Sale & Retails






*No : 2,4, Bandarawela Road,*

*Hali-Ela.*

*Tel : 055-94555*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அயடின் குறைப்பாட்டினால் ஏற்படும் தொண்டைக் கழலையை தடுத்துக் கொள்வோம்.

தொண்டைக் கழலை நோயானாது எமது நாட்டை பொருத்தமட்டில் ஒரு பாரிய பிரச்சினையாக காணப்படுகின்றது. இந் நோயானது சிறியவர், பெரியவர் என்று இல்லாது சகலரையும் பாதிக்கும் ஒரு நோயாக உள்ளது இந் நோயை தடுப்பதற்கு அரசு பல வழிகளிலும் நடவடிக்கை மேற் கொண்டு வருகின்றது. இருப்பினும் இன்னும் இந்நோயை பற்றிய அறிவு தோட்டப்புற, கிராமப்புற மக்களிடையே பூரணமாகச் சென்று அடையவில்லை என்றே கூற வேண்டும்.

இந்த நோயானது எம் நாட்டில் அதிகாமாக காலி, களுத்துறை, கம்பஹா, சிலாபம், கண்டி, நுவரெலியா, கேகாலை, இரத்தினபுரி போன்ற இடங்களில் அதிகமாகவுள்ளதாக புள்ளி விபரங்கள் கூறுகின்றன. இப்பிரதேசங்களில் அயடீன் குறைபாட்டு நோய் காணப்படுவதற்கு முக்கிய காரணம் நிலத்தில் இயற்கையாக கிடைக்கும் அயடின் நீரால் கழுவிச் செல்லப்படுவதால் இயற்கையாக கிடைக்கும் அயடீன் இப்பிரதேச மக்களுக்கு கிடைப்பது இல்லை.

இந்த நோய் ஏற்படுவதற்கு காரணம், எமது உடலில் தொண்டையின் இருபக்கத்திலும் தைரொயிட் என்னும் சுரப்பிகள் காணப்படுகின்றது. இச்சுரப்பிகளால் சுரக்கப்படும் தைரொக்சீன் என்னும் ஓமோன் தயாரிப்பதற்கு அயடீன் அவசியம் தேவைப்படுகிறது இச்சந்தர்ப்பத்தில் நாம் உண்ணும் உணவுகளில் உள்ள அயடீன் குறைந்து போகும் போது தைரொக்சீன் தயாரிப்பது குறைந்து விடுகிறது இவ்வேளையில் இக்குறையை நிவர்த்தி செய்வதற்கு இரத்தத்தில் இருக்கும் சிறிய அளவு அயடினையும் பெறுவதற்கு தைரொயிட் சுரப்பி முயற்சி செய்வதால் இந்த சுரப்பி பெரிதாகின்றது இவ்வாறு தைரொயிட் சுரப்பி பெரிதாகும் போது தொண்டையின் வெளிபுறமாக கட்டி தோல் தோன்றுவதால் இது தொண்டை கழலை என அழைக்கப்படுகிறது.

அயடின் குறைபாட்டினால் பயங்கர விளைவுகள் ஏற்படும். ஒரு கர்ப்பிணி கர்ப்ப காலத்தில் அயடின் குறைபாட்டினால் பாதிக்கப்பட்டிருந்தால் பிறக்கும் குழந்தையின் மன நிலை பாதிக்கப்படலாம் அதாவது மந்தபுத்தி, அங்கவீனமாக இருத்தல். நிறை குறைவாகப் பிறத்தல், வளர்ச்சிகுன்றி பிறத்தல், கருச்சிதைவு என்பன ஏற்படலாம்.

இந்த நோயைத் தடுப்பதற்கான சில வழி முறைகள் உள்ளன. எப்போதும் அயடீன் கலந்த உப்பை பாவித்தல் (உணவுடன் சோத்தல்) உணவு சமைத்து சூடு ஆறிய பிறகு உப்பைப் போடுவதற்கு பழகுதல், உப்பை எப்பொதும் சூடான இடத்தில் வைக்காமல் பாதுகாத்தல், உப்பில் எப்பொதும் அயடின் சேர்க்கப்பட்டுள்ளதா ? என ஒவ்வொருவரும் அறிந்திருந்தல்.

அயடின் உள்ள உணவுப் பொருட்களை கூடுதலாக சாப்பிடுதல், அதாவது நெய்த்தோலி, இறால், நண்டு, மீன் போன்ற கடல் உணவுகளைச் சாப்பிடுவதனதல் அயடின் குறைபாட்டை நீக்கலாம். அத்துடன் அயடின் குறைபாட்டை ஒழிக்க வேண்டுமாயின் இந்நோய் சம்பந்தமான விடயங்களை பாடசாலை மட்டத்திலிருந்து சமுதாயத்திற்கு செய்திகளைக் கொண்டு செல்ல வேண்டும் அது மட்டும். இன்றி போஸ்டர், துண்டு பிரசுரம், பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, சஞ்சிகை மூலம் எடுத்துக் கூறியும் தடுக்கலாம்.

N. செல்வி
தரம் : 11A
ப/ ஆலி–எல. த.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


*With Best Wishes From :*

# Delma Hotel

## Delma Communication



*I.D.D
*N.W.D } Calls
*Local




No : 57,
Bandarawela Road,
Hali-Ela.

*With Best Wishes From :*

# Lucky Video

Tamil, Hindi, English, Sinhala,
Audio & Video Recoding
V.C.D. Renting
VHS Cassette Renting
Audio C.D. Renting
VHS to V.C.D. Recording





No : 20B,
Super Market,
Badulla.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களைகள்

**களை என்றால் என்ன?**

நிலத்தில் நாம் விரும்பி நடும் பயிர் தவிர்ந்த ஏனைய அனைத்தும் களைகள் எனப்படும்.

இடத்தை அடிப்படையாகக் கொண்டு களையைப் பாகுபடுத்தலாம்.

01. மேட்டு நில களை
02. தாழ் நில களை

மேட்டுநிலக் களைகள் சில.

| | |
|---|---|
| 01. கோரசீப்புல் | நெருஞ்சி |
| 02. செங்களனி | வட்டத்துத்தி |

தாழ் நிலக் களைகள் சில

| | |
|---|---|
| 01. கோரை சீப்புல் | நெற்சப்பி |
| 02. நீர்த்தாமரை | மொண்டி |

களைகளின் இனப்பெருக்க முறைகள்

01. வித்துமூலம்  02. நிலபடரி மூலம்  03. தரை கீழ் ஓடிமூலம்

களையைக் கட்டுப்படுத்தும் முறைகள்

| | |
|---|---|
| 01. பொறிமுறை | 03. பாரம்பரிய முறை |
| 02. உயிரியல் முறை | 04. இரசாயன முறை |

சில களைகளும் அவற்றின் தாவரவியல் பெயர்களும்

| | | |
|---|---|---|
| 01. சந்தனக்கோரை | ~ | சைபிரஸ் கிரியா |
| 02. கோழிச்சூடான் | ~ | எக்கை னோக் கோலா கொல்னம் |
| 03. குதிரைவாற்புல் | ~ | எக்கை னோக் கோலா குறஸ் காலி |
| 04. சிறு கோரை | ~ | பிம் பிறஸ் ஸிஸ் மிலியேசிஸ் |

தொகுப்பு : K. ஸ்ரீதேவி
தரம் : 11B

## பொது அறிவு

வரி விதிப்பு இல்லாத நாடு எது ?
வட கொரியா

காக்கைகள் இல்லாத நாடு எது ?
சிங்க பூர்

ஆறுகள் இல்லாத நாடு எது ?
சவூதி அரேபியா

பாம்புகள் இல்லாத நாடு எது ?
அயர்லாந்து

வருமானவரி இல்லாத நாடு எது ?
குவைத்

பிரதம மந்திரி இல்லாத நாடு எது ?
ஹோலண்ட்ரிக்

இராணுவமே இல்லாத நாடு எது ?
சுவிற்ஸர்லாந்து

கரடிகள் இல்லாத நாடு எது ?
அவுஸ்திரேலியா, ஆபிரிக்கா

பித்தப்பை இல்லாத முலையூட்டி எது ?
எலி

V. விக்னேஸ்வரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes From :*

# LAND MARK
## Expert Tailors

No : 15D, New Supermarket Complex
Badulla.

Tel : 074-499606, Res : 055- 30315

## LAND MARK ELECTRONICS TRADING

**Dealers in Electronics & Electrical,**

**Spare Parts, Sales & Service**

**# 24D, New Super Market, Complex, Badulla.**

**Tel :074 - 499606 E-mail. landmarktrading@hotmail.com**

*With Best Wishes From :*

# Badulla Stores



No. 41, South Lane,
Badulla.

Tel : 055- 23154

Mobil :077-642057

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதியும் ஷெல்லியும் : ஓர் ஒப்பு நோக்கு

இருபதாம் நூற்றாண்டு இலக்கிய வானில் ஒரு இளஞ்சூரியனாக எம்மத்தியில் உதித்தவர் மகாகவி பாரதியார் வாழையடி வாழையென வரும் தமிழ்ப்புலவர் திருக்கூட்டத்தில் தனக்கென ஒரு தனியிடத்தினை உரிமையாக்கிக் கொண்டவர் இளங்கோ, கம்பன், வள்ளுவன், நாயன்மார், ஆழ்வார் முதலிய தமிழ்க் கவிஞர்களையும், வேதமுனிவர்கள் காளிதாசர் போன்ற வடமொழி காவிய கர்த்தாக்களையும், இரவீந்தரநாத் தாகூர் போன்ற சம கால இந்திய கவிஞர்களையும் ஆர்வத்தோடு கற்றுச் சுவைத்த பெருமை எம் பாரதிக்கு உண்டு புலமை எங்கு காணப்பட்டாலும் அவற்றுக்குத் தயங்காமல் தலைவணங்கியவர் பாரதியார் தன் காலத்துக்கு முற்பட்ட கவிச் செல்வங்களை தேடிக் கற்று அவற்றை தமதாக்க இவர் தவறவில்லை அந்தவகையில் பாரதி "பிறநாட்டு நல்லறிஞர் சாஸ்த்திரங்களைக்" கற்று அவற்றில் புலமைக்கு முக்கியத்துவம் கொடுத்து தமதாக்கத் தவறவில்லை அந்தவகையில் பாரதியை கவர்ந்த மேனாட்டுக் கவிஞன் ஷெல்லி அவரது கவிதைக்குத் தூபமிட்டார், என்றால் அது மிகையாகாது பாரதியார் எட்டயபுரத்தில் இருந்த காலத்திலேயே ஷெல்லியை ஈடுபாட்டுடன் கற்றார் என்பதற்கு உள்ள சான்றுகளுள் ஒன்றாக 'ஷெல்லி தாசன்' என்ற அவரது இளமைக்கால புனைபெயரைக் குறிப்பிடலாம்.

தனது காலத்து இளைஞர்கள் ஆங்கிலக் கல்வி என்ற பெயரில் பேடிக் கல்வியை கற்கின்றனர் என்று உள்ளம் எரிந்து பாடிய கவிஞர் ஆங்கிலக் கவிதையை ஆர்வத்துடன் படித்தார்

செலவு தந்தைக் கோராயிரம் சென்றது
தீதெனக்கு பல்லாயிரஞ் சேர்ந்தன
நலமோ எட்டுணையுங் கண்டிலேனிதை
நாற்பதினாயிரம் கோயிலிற் சொல்லுவேன்.

என்று ஆவேசத்துடன் தனது சுயசரிதையில் பாடினார் எனினும் இவர் அன்று காணப்பட்ட பாடாத்திட்டத்தையே குறைகூறினார். ஆங்கிலக் கல்வியை அன்று

சென்றிடுவீர் எட்டுத்திக்கும் ~ கலைச்
செல்வங்கள் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்.

எனக் கூறிய பாரதி எத்தனையோ மொழிகளில் இருந்து தனக்கு தேவையான ஊக்கத்தைப் பெற்றுக் கொண்டார் ஷெல்லியின் கவிதைகளிலிருந்து ஆக்கத்தினையும் ஊக்கத்தினையும் தன் கவிதைகளுக்குத் தேடிக்கொண்டார். 'ஷெல்லி கிளப்' ஒன்றும் பாரதியாரால் நடத்தப்பட்டது. ஆங்கிலேயர்களது கலாசார செல்வாக்கு பரவிய பல பிரதேசங்களில் ஷெல்லி நவயுகத்தை கூவியழைத்த விடிவெள்ளிக் கவிஞனாக பாரதியாரால் போற்றப்பட்டார். அடிமை மிடிமை, மடமை, வறுமை முதலிய அரக்கர்கள் சமூகத்தில் எங்கிருந்தாலும் அவற்றைத் தகர்தறிய துடித்த கவிஞன் ஷெல்லி பெண்கள் சுதந்திரம், மனிதப் பிறவியின் மேன்மை என்பன ஷெல்லியின் கனவுகளாக காணப்பட்டன இதனாலேயே முடியரசை நிராகரித்த குடியரசுக் கவிஞன் என ஷெல்லி சிறப்பிக்கப்படுகின்றார் இத்தகைய பண்புகள் கொண்ட ஒரு மேனாட்டுக் கவிஞன் எம் பாரதியை கவர்ந்தார் என்பதில் வியப்பொன்றுமில்லையே? பாரதி பல இடங்களில் ஷெல்லியின் கவிதைகளை, வாக்கியங்களை உள்வாங்கி தனதாக்கிப் பாடியுள்ளார் ஷெல்லி தனது Sky Lark என்ற பாடலில் கவிதா வெறி (Harmonious Maolness) என்றார் பாரதியார், "முள்ளிக் கவிதை வெறி முண்டே நனவழிய" எனப்பாடுகின்றார் அத்துடன்

"பூ மண்டலத்தில் அன்பும் பொறையும் விளங்குக
துன்பமும் மிடிமையும் நோவும் சாவும் நீங்கி
சார்ந்த பல்லுயிரெல்லாம் இன்புற்று வாழ்க."

என்ற பாரதியின் பாடலும் ஷெல்லியின் உணர்வுகளைத் தொட்டுச் செல்கின்றன.

சுதந்திரம் என்பது ஷெல்லியின் இலட்சியங்கில் ஒன்றாக விளங்கியது அடிமைப்பட்டு கிடந்த மனித உயிர்கள் தங்கள் நிலையினில் ஓங்க சுதந்திரமுடன் செயற்பட வேண்டும் என்பதும், பெண்கள் பூரண சுதந்திரமுடையவர்களாக இருக்க வேண்டும் என்ற ஷெல்லியின் கருத்தும் பாரதியாரின் சுதந்திர தாகத்திற்கு வித்திட்டது குறிப்பாக பெண்கள் பற்றிய அவரது பார்வையில்

நிமிர்ந்த நன்னடையும் நேர் கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்

என பாரதியின் குரல் ஓங்கி ஒலித்தது மேலும் ஷெல்லியின் கவிதைகளில் அவர் வாழ்க்கையில் அனுபவித்த பல இன்னல்கள் துன்பங்கள் பல வெளிப்படுத்தப்படுகின்றன இதனை ஷெல்லி இயற்கையுடன் தொடர்புபடுத்தி அவற்றின் நிகழ்வுகளினூடாக தன் வாழ்வின் அவல நிலையினை பிரதிபலிக்கின்றார் அதற்கு உதாராணமாக Ode to the west wind என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது (மேல்காற்று) கவிதையில் "என்னை ஒரு அலைபோல், ஒரு மேகம் போல் சுமந்து செல், இன்று நான் வாழ்க்கையின் முட்களால் குத்திக் குதறப்படுகின்றேன்" என்று தன் வாழ்வினை எடுத்துக்காட்டுகின்றார் அதுமட்டுமன்றி, "சுவாசிக்க சுகமான காற்றே, ஆக்குபவனும் நீ, அழிப்பவனும் நீ போன்ற கருத்துக்கள் ஏடுத்துகட்டப்புடுகின்றன.

இதே தன்மையினை நாம் பாரதியிலும் காணக்கூடியதாக உள்ளது சிதறிப்போன மனித உயிர்களின் எண்ணங்கள் எதிர்பார்ப்புக்கள் மட்டுமன்றி சமூகத்தின் தேவையான கருத்துக்கள் போன்றவற்றை இயற்கையினூடாக பாரதி வெளிக்கொணர்கின்றார் வெண்ணிலா, நிலாவும் வான்மீனும், காற்றும், வசன கவிதை காற்று போன்றவற்றில் நாம் இவற்றை அவதானிக்கலாம்.

" மண்ணுல கத்துநல் லோசைகள் காற்றெனும்
வானவன் கொண்டுவந்தான்
பண்ணி லிசைத்தவ் வொலிய னைத்தையும்
பாடி மகிழ்ந்திடுவோம் "

என பாரதி காற்றினை போற்றி காற்றோடு உரையாடுகின்றார் இது ஷெல்லியின் கவிதையில் ஒரு தாக்கமாகக் கூட கருதலாம் இவ்வாறக பாரதியைக் கவர்ந்த ஷெல்லி என்ற மேனாட்டு கவிஞன் " தன்னுணர்ச்சிக் கவிதா நெறியின் " தலைமகனாகவும் விளங்குகிறார் எவ்விதமான கட்டுப்பாடுகளையும் ஏற்காமல் தன் சுய சிந்தனைகளை கவிதையில் பாடுபொருளாகக் கொண்டு பாடினார் இத்தன்மை பாரதியிலும் பிரதிபலிக்கின்றது .

"சுவை புதிது, பொருள்புதிது, வளம்புதிது
சொற்புதிது, சோதிமிக்க
நவகிதை எந்நாளு மழியாத
மகாகவிதை"

என்ற தன்னுணர்வைக் காண முடிகிறது மனிதனில் கட்டுண்டு கிடந்த மூடநம்பிக்கை, அறிவீனங்கள் போன்ற கட்டுகளைக்களைய வேண்டும் என்ற துடிப்புடன் பாடியவர் பாரதி

மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமை தன்னை கொழுத்திடுவோம்

என்று உயிரோட்டமான கவிதைகளைப் பாடினார் இவ்வாறு 'ஷெல்லிதாசன்' என்று தன்னைக் கூறிக் கொண்ட பாரதி தன் கருத்துக்களையும், பிறமொழிக் காவியங்களையும் தத்துவார்த்த கருத்துக்களையும்

நமது தொழில் கவிதை, நாட்டிற்குழைத்தல்
இமைப்பொழுதும் சோராதிருத்தல்

எனக் கூறி தமிழ்க் கவிதையின் நவயுக நாயகனாக உயர வருவதற்கு ஷெல்லியின் கவிதைகளும், கொள்கைகளும் துணைபுரிந்தன இவ்வாறு ஷெல்லி போன்ற மேனாட்டுக் கவிஞர்களுடன் ஒப்பு நோக்கிப் பார்க்கும் போது பாரதியின் தனித்துவமும், கால உணர்வும், கவிதைச் சிறப்பின் அடிப்படைகளும் புலனாகின்றன.

ஆசிரியை
செல்வி . S. சுதர்ஷினி B.A

<u>உசாத்துதுணை நூல்கள்</u>


* ஒப்பியல் இலக்கியம் ~ க. கைலாசபதி

* ஷெல்லி, பைரன், கீட்ஸ் கவிதைகள் ~ மணிமேகலை பிரசுரம்

* பாரதியார் கவிதைகள்

* தமிழ் இலக்கியம் வரலாறு ~ தமிழண்ணல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes From :*

# M. MURUGESU

Accountant & Tax Consultant



Modern Complex
No : 226/4/1/17 First Floor
Lower Street,
Badulla.

Tel : 055 -22032/22435
Mobil : 077 -383454

*With Best Wishes From :*

# Negombo Gold House



No: 173, Lower Street,
Badulla.
Tel : 055 -29895

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes From :*

ATC

# Allwin Trading Co. (pvt) Ltd.

Manufacturers of the Finest Steel Furniture

· Manufacturers of steel & MDF Wardrobes,
Filing Cabinets, Office Table, Chairs, Steel Beds,
Dressing Tables, China Show Cases, Piono Cabinets etc...



Factory and Office
Ridipane Estate
Ridipane
Badulla.
Tel: 055 - 23513

Show Room
No. 235 A,
Lower Street,
Badulla.
Tel: 055 - 22876

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முழு ஆவியையும் கல்விக்காய் அர்ப்பணிக்கின்றேன்

மெல்ல மெல்ல முன்னேறி
மேடு பள்ளம் அவை தாண்டி
முகட்டினை நாம் தொடும் போது
ஒரு முரசொலி !
படைப்பொன்று மீண்டும் இங்கே
மறுபிறவி எடுக்கின்றது. அதில்
எனது கருத்துக்களை
எழுதுகின்றேன்.

கல்வியின் கலைச்சிறப்பு இவைதான்
எம் கலையகத்தின் தனிச்சிறப்பு
உள்ளத்தில் எனக்கோர் நினைப்பு அது
உயர்ந்து நிற்கும் கலையகத்தின் வனப்பு
கல்லிலே கதிரை, மேசை அது
கடந்து வந்த பாதை
நிமிர்ந்து நிற்கும் கட்டிடங்கள் ~ அவை
நிகழ்கால நிதர்சனங்கள்
உயரிய இலட்சியங்கள் ~ அவை
எதிர்கால நினைப்புக்கள்.

ஆலி எலயில் சாதனைகள்
சரித்திரத்தில் நாயகர்கள்
சலிக்கவில்லை கல்வியிலே
சரியவில்லை கலையிலே
அகில இலங்கையிலும்
அங்கு பல இடமெமக்கு.

புரட்சிகள் கூடி நிற்கும் புனிதத் தாயே..........
உன்னுள்ளும் சில புல்லுருவிகள்
புரியவில்லை புதிர் எனக்கு
புனிதத்தில் ஏன் கலக்கமென்று

உன்னிலே கருவாகி
வந்த இவள்
வார்த்தைகளால் எல்லையிட்டு உன்னை
வாழ்த்த நான் விரும்பவில்லை
உள்ளத்தால் உரைக்கின்றேன்
உயர வேண்டும் பெறுபேறுகள்
உதிக்க வேண்டும் உயரிய எண்ணங்கள்
உலக அரங்கினிலே உனக்கோர் இடம் வேண்டும்
நிறைவினிலே......

ஆக்கம்: R. யாழினி
தரம் 11B

# ஆசிரியர் பெற்றோர் நல்லுறவுக்கான சில ஆலோசனைகள்

பெற்றோரை தெரிந்து கொள்ளுங்கள் இதற்கு செலவிடும் நேரம் வீண்விரயமாகாது மாறாக பரஸ்பர நன்மை கிட்டும். நாம் அவர்களுடன் நன்றாக பழகி ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளும்போது அவர்கள் நம்முடன் மிக நன்றாக ஒத்துழைப்பார்கள்.

பெற்றோரின் நிலையில் இருந்து நாம் பேசுவோம் எமக்கே சகல விடயங்களும் தெரிந்தது போல் நடந்துகொள்ள கூடாது. ஆசிரியருக்கே உரிய பண்புடன் நடந்துகொள்ள வேண்டும் பிள்ளைகளை பற்றி பேசும்போது நல்ல அம்சங்களை வலியுறுத்தி கூறவேண்டும். கண்டனத்தை விட பாராட்டு, மாணவர்களுக்கு நல்ல பலனளிக்கும் என்பதையும், பிள்ளை வெற்றிபெற பெற்றோர் எப்படி உதவலாம் என்பதையும் விளக்கிச் சொல்ல வேண்டும்.

பெற்றோரை பேசவிட்டு அவர்கள் கூறும் விடயங்களை நன்றாக செவிமடுக்க வேண்டும். பிள்ளையின் வீட்டுச் சூழலை கட்டாயமாக புரிந்து கொள்ளுவதோடு முடிந்தால் பிள்ளையின் வீட்டுக்குச் சென்று பார்த்து வருவது சிறந்தது. பெற்றோரை அடுத்து சந்திக்க இருக்கும் திகதியை குறிப்பிடுங்கள் இவ்வாறு தொடர்ந்து செய்வதே முக்கியம் அது ஆசிரியருக்கு உண்மையிலேயே மாணவர் மீது அக்கறை இருக்கின்றது என்பதை எடுத்துக் காட்டும்.


தொகுப்பு : M. சேகர்
ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes From :*

# R. Mayavan & M.K.P. Selvarajah

## Dealers for Vegetable



Mathurata,
Kandapola

---

*With Best Wishes From :*

உங்களுக்குத் தேவையான மிளகாய், அரிசி, பயறு மற்றும்
அனைத்து தானிய வகைகளையும் திறமையாகவும்,
உடனுக்குடனும் அரைத்துக் கொடுக்கப்படும் அத்துடன்
மிளகாய்த் தூள், மசாலாத் தூள் போன்றவற்றை
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
சிறந்த ஒரே ஸ்தாபனம்

# AL -AMAAN Grinding Mills

No : 07, Udapussellawa Road,
Ragala Halgranoya
052-35330

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ADDRESSING

## A MODE OF ACCOSTING PERSONS

| What word to use?. | When to use? |
| --- | --- |
| i. Sir | When accosting a gentleman.<br>Whose name you do not know |
| ii. Madam | When accosting a lady<br>whose name you do not know |
| iii. Mr | When accosting a gentleman<br>Whose name you know<br>'Mr.' must be followed by the gentleman's name |
| iv. Miss | When accosting a lady<br>Whose name you know<br>'Miss' must be followed by the her name |
| v. Mrs | When addressing a married lady.<br>Her name must follow the word |

## B) ABOUT WRITING OUT THE ADDRESS

| | |
| --- | --- |
| i. Esq (Esquire) | Following a name of a gentleman |
| ii. Messrs. | As a prefix while refering to the name of a firm wherein a personal name occurs |
| iii. The | As a prefix to the name of a firm where in no surname occurs. |

## C) SPECIAL USES OF MR

| | |
| --- | --- |
| Mr. Chairman<br>Mr. President<br>Mr. Principal<br>Mr. Speaker | Respect feel form of addressing the.. |

## D) OTHERS

i. Archbishops.

Begin : My lord Archbishop or your Grace
Address : His Grace the Lord Archbishop of.
Speak to as : Your Grace

ii. Bisop

Begin : My Lord Bisop
Address : The Right Rev. The Lord Bisop of
Speak to as : Your Lordship

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii. Judges

| | |
|---|---|
| Begin | : Sir |
| Address | : The Hon. Mr. Justice |
| Speak to as | : Your Lordship Coddressed on the bench as my Lord |


iv. Maydrs

| | |
|---|---|
| Begin | : Sir |
| Address | : His Workship the Mayor of of. |
| Speak to as | : Your Workship |

M. Sharmila
Grade - 10B

## சந்திரனில் காலடி வைத்த 12 விண்வெளி வீரர்களும், விண்கலங்களும்

| விண்வெளி வீரர் | விண்கலம் |
|---|---|
| ஆம்ஸ்ட்ரோங் | அப்பலோ - 11 |
| அல்ட்ரின் | அப்பலோ - 11 |
| கொண்ட்ராட் | அப்பலோ - 12 |
| பீன் | அப்பலோ - 12 |
| ஷெப்பர்ட் | அப்பலோ - 14 |
| மிச்சேல் | அப்பலோ - 14 |
| ஸ்கொட் | அப்பலோ - 15 |
| இர்வின் | அப்பலோ - 15 |
| யங் | அப்பலோ - 16 |
| டியூக் | அப்பலோ - 16 |
| செரினென் | அப்பலோ - 17 |
| ஸ்கிமிட் | அப்பலோ - 17 |




தொகுப்பு : பிரேம்குமார்
தரம் 10B

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

අපේ සුභ පැතුම් . . .

# හොටෙල් ඩී පීසා



ප්‍රනීත ආහාරපාන පහසු මිලට
ස්වීට් වර්ග (කේක්, බිස්කට්)
කෑම පාර්සල් (බුරියානි)
කොත්තුරොටී
ශීත කළ බීම
යනාදී සියළු දෑ එකම වහලක් යටදී
ලබා ගැනීමට
ඔබට ආරාධනා

අංක 26,
බණ්ඩාරවෙල පාර,
හාලිඇල.

අපේ සුභ පැතුම් . . .

# අනුර හාඩ්වෙයාර්



සියළුම වර්ගයේ ගොඩනැඟිලි ද්‍රව්‍ය සහ උපකරණ
ඇළුමිනියම්, ප්ලාස්ටික් භාණ්ඩ,
උසස් තත්වයේ තැගි භාණ්ඩ සඳහා,

අංක 50,
බණ්ඩාරවෙල පාර,
හාලිඇල.
දු.ක. 055-94274

# අනුර ට්‍රේඩිසෙන්ටර්

කුළු බඩු වර්ග
පාසල් පොත් සහ උපකරණ
තොග සහ සිල්ලරට



අංක 41
බණ්ඩාරවෙල පාර,
හාලිඇල.
දු.ක. 055-94392

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes From :*

# நாதஸ்வர சகோதரர்கள்

## S. ரவி & S. அருள்

தங்களின் திருமண விழா, பூப்புனித நீராட்டு விழா

&

கோவில் திருவிழா


அணைத்துக்கும் நாட வேண்டிய இடம்



ரவி நாதஸ்வரம்
குயின்ஸ்டவுன் மேல் பிரிவு
ஹாலி – எல.

*With Best Wishes From :*

# REGAL SALON



No : 7/B Bandarawela Road,
Hali-Ela.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு

எரிமலை அதிகம் உள்ள நாடு எது?
இந்தோனேசியா

கப்பலைக் கண்டுபிடித்தவர் யார்?
புல்ரன் என்ற விஞ்ஞானி

முதல் முதல் கம்பியூட்டரின் பெயர் யாது?
ஈனியா

ஒரே உயர்க்கலத்தாலான பிராணி எது?
அமீபா

முதன் முதலில் விண்வெளிப் பிரயாணத்தை மேற்கொண்ட நாடு எது?
சோவியத் நாடு

உலகிலே மீன் வளம் நிறைந்த நாடு எது?
பாவுகன்

1915ம் ஆண்டு அ. கிரகம் பெல் தொலைபேசியைக் கண்டுபிடித்தபோது முதன் முதலில் பேசிய வார்த்தை எது?
வாஸ்டன் தயவு செய்து இங்கே வரவும்.

பாய்மரப் படகுகளை அறிமுகப் படுத்தியவர்கள் யார்?
எகிப்தியர்கள்

நெடுஞ்சாலைகளை அமைத்தவர் யார்?
பாரசீகர்கள்

கலங்கரை விளக்கத்தைப் பயன்படுத்தியவர்கள் யாவர்?
இந்தியர்கள்

அந்தீஸ் மலைத்தொடர் எங்குள்ளது?
தென் அமெரிக்காவின் வடக்கு கடற்கரையோரம் அமைந்துள்ளது.

மனிதனின் சராசரி மூளையின் நிறை எவ்வளவு?
**1½ Kg**

விண்வெளிக்கு முதன்முதலில் சென்ற நாயின் பெயர் என்ன?
லைக்கா

உலகிலேயே அதிக இரத்ததானம் செய்பவர்கள் யார்?
சீனர்கள்

உலகிலேயே எந்தவொரு நாட்டுடனும் போரிடாத நாடு எது?
சுவிற்சலாந்து

தொகுப்பு:- மு. ஜெயப்பிரியா
தரம் 10யு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறை தோறும் தமிழ்

கல் தோன்றி மண் தோன்றா காலத்துக்கு முன்தோன்றிய மூத்த தமிழ் என தமிழ் மொழியின் சிறப்பும் பெருமையும் எம் முன்னோர்களால் கூறப்பட்டு வந்துள்ளது இனிமையும் நீர்மையும் தமிழெனலாம், என பிங்கலந்தை நிகண்டு தமிழுக்கு அர்த்தம் கற்பிக்கின்றது இவ்வாறான தமிழ் இன்று பல்வேறு துறைகளாக கிளைவிட்டு வளர்ந்து வருகின்றது அந்த வகையில் நுண்கலை, மொழியில், திறனாய்வியல், ஆய்வியல் மொழிபெயர்ப்பியல், சித்தமருத்துவம், இதழியல் என்ற பல்வேறுபட்ட கிளைகளைக் கொண்டு இன்று தமிழ் பெருமை பேசிக்கொண்டிருப்பதைக் காணக்கூடியதாயுள்ளது.

இன்று நூற்றுக்கணக்கான அறிவியலறிஞர்கள் தமிழ் அறிவியல் கருத்துக்களை நூலாக எழுத முனைந்துள்ளனர் நா. சுப்புரெட்டியார் பெ. ந. அப்புசாமி தொடங்கி இன்று சுஜாதா வரை இத்தொண்டினை ஆற்றிக்கொண்டு வந்துள்ளனர் கலைத்துறையை பொறுத்த வரையில் இசை, நடனம் போன்ற கலைகள் இன்றுதமிழ் நூல்களினூடாகவும் வளர்ந்து வருகின்றது. விபுலானந்தரின் யாழ் நூல் தொடக்கம் இன்று பத்மா சுப்ரமணியத்தின் நூல்வரை தமிழில் கலைகள் வளர்வதைக் காணக்கூடியதாகவுள்ளது.

மரபுவழி இலக்கணம் இருக்கவும் மொழியியல் கண்ணோட்டத்துடன் அதை அணுகும் முறை பெருகி வருகின்றது இலக்கியத்திலும் ஏனைய சார்புத் துறைகளிலும் மொழியியல் தமிழினூடாக வளர்ந்து வருகின்றது நாட்டுப்புறவியலை எடுத்து நோக்கும் போது பாட்டுத்தொகுப்பும், ஓர் ஆய்வுமாக இத்துறை நல்ல வளர்ச்சி கண்டுள்ளது

திறனாய்வியலும், ஒப்பியலும் தமிழில் பெரும் வளர்ச்சி கண்டு வருகின்றன க. கைலாசபதி, தமிழண்ணல் போன்றோரால் திறனாய்வு நூல்கள் பல தமிழ் மொழியில் எழுதப்பட்டுள்ளது தமிழில் பி. எச். டி. செய்வோர் தொகை இன்று அதிகரித்துள்ளது இது ஆய்வியலில் தமிழ்மொழி வளர்வதை எடுத்துக்காட்டுகின்றது.

மொழிபெயர்ப்புத் துறையை எடுத்து நோக்கும் போது சிறப்புமிக்க பிறமொழி இலக்கியங்கள் இன்தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றது மொழிபெயர்பபியல் இன்று ஒரு கலையாகவே வளர்க்கப்பட்டு வருகின்றது.

மேலும் சித்தமருத்துவம் தொடர்பாகவும், பழையநூல்கள், புதிய நூல்கள் ஆய்வுநூல்கள் போன்றனவும் தமிழ்மொழியில் எழுதப்பட்டு வருகின்றது, இன்றைய தமிழ் பெற்று வரும் பெருவளர்ச்சிக்கு திரைப்படம், வானொலி, பத்திரிகை, மேடைப் பேச்சு, சஞ்சிகை, இதழ்கள் போன்றவை உறுதுணை புரிந்து வருகின்றன.

"என்றுமுள தென்திழை இயம்பிசை கொண்டதாக" எனப் பாடியவர் கம்பர் இதற்கிணங்க என்றும் நிலைத்திருக்கும் இனிய தமிழ் மொழியின் பெருமை இன்று பலதுறைகளினூடாக வளர்ந்து வருவது கண்கூடு.


உசாத்துணை நூல்கள்

தமழ் இலக்கிய வரலாறு :- தமிழண்ணல்.


திருமதி K. செல்வாம்பாள்

# நூல்களும் அதன் ஆசிரியர்களும்

| | |
|---|---|
| சிலப்பதிகாரம் | இளங்கோ அடிகள் |
| இராமாயணம் (மூலம்) | வான்மீகி |
| இராமாயணம் (தமிழ்) | கம்பர் |
| பெரிய புராணம் | சேக்கிழார் |
| சீறாப் புராணம் | உமறுப்புலவர் |
| மகா பாரதம் (தமிழ்) | வில்லி புத்தூரர் |
| திருவாசகம் | மாணிக்கவாசகர் |
| தேம்பாவணி | வீரமாமுனிவர் |
| மகாவம்சம் | மகாநாமதேரர் |
| சத்தியசோதனை | காந்தி |
| பாஞ்சாலி சபதம் | சு. பாரதியார் |
| நற்சிந்தனைகள் | யோகர் சுவாமிகள் |
| நன்னூல் | பவநந்தி முனிவர் |
| யாழ் நூல் | சுவாமி விபுலானந்தர் |

S. ஜீவப்ரியா


தரம் : 10B


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes From :*

# Gift Corner

Purchased From : Aluminium, Silver, Plastic, Cosmetic
Toys Gift Items, School Items Children Sewing Items



No : 01, Nuwara Eliya Road, Hali-Ela.

*With Best Wishes From :*

# A.B.C. Battery




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes From :*

WT

# Welcome Textile

Dealers in textiles & Ready made Garments

Specialists in Wedding Sarees



NO : 114, LOWER STREET,
BADULLA.

TEL : 055 -23687/29160

HOTLINE : 072-662182

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரையைக் கடந்த அலைகள்

**நடிகர்கள்** லெட்சுமி
ராமையா
சந்திரன்
காவேரி
சுப்ரமணியம்
ராஜீவ்

(ராஜீவும் சந்திரனும் நண்பர்கள், அன்று பாடசாலையில்...)

***ஆசிரியர்:*** வணக்கம்

***மாணவர்கள்:*** வணக்கம்

***ஆசிரியர்:*** அமருங்கள் பிள்ளைகளே. எமது பாடசாலையில் அடுத்த வாரம் இரண்டு நாள் சுற்றுலா ஒன்று ஏற்பாடாகியுள்ளது. இதற்காக ஒவவொருவரும் 500 ரூபா கொண்டு வாருங்கள்

***இடைவேளையின் போது***

***ராஜீவ்:*** சந்திரன், என்ன கவலையா இருக்கே?

***சந்திரன்:*** ஒன்னுமில்லேடா சுற்றுலா போவதற்கு பணம் தேடுவது பற்றி யோசித்தேன்.

***ராஜீவ்:*** நானும் அப்படித் தான்டா எங்க வீட்டிலும் எப்படித்தான் கொடுப்பாங்களோ தெரியாது.

(இடைவேளை முடிய மணி ஒலித்தது இருவரும் வகுப்பறையை நோக்கி நடந்தனர்.அன்று பாடசாலை முடிந்து வீடு சென்று அம்மாவிடம் சந்திரன்)

***சந்திரன்:*** அம்மா ஸ்கூல்ல சுற்றுலா போறாங்களாம். அதற்கு 500 ரூபா கேட்கிறாங்க.

***காவேரி:*** என்னப்பா? நமது வீட்டுக் கஷ்டம் உனக்குத் தெரியும் தானே ? எப்படி 500 ரூபா தேடுவது ?

***சுப்பிரமணியம்:*** இதபாரு சந்திரன், எனக்கும் உன்னை சுற்றுலாவுக்கு அனுப்ப ஆசைதான். என்ன பண்ண நம்ம வறுமைதான் எல்லாத்துக்கும் தடையா இருக்கே!

***சந்திரன்:*** பரவாயில்லை அப்பா நான் போகாமல் இருக்கிறேன்.

( ராஜீவின் பிடிவாதத்தால் வீட்டிலுள்ள நகையை ஈடு வைத்து பணத்தைப் பெற்றுக்கொண்டு சுற்றுலா சென்றான்)

(பரீட்சை நெருங்கியது. பரீட்சை நாளில் பெற்றோரின் ஆசியுடன் சந்திரன் பரீட்சை எழுதச் செல்கின்றான். ஒருநாள் சந்திரனின் தந்தை சுப்பிரமணியம் திடீரென இறந்துவிடுகிறார்)

***சந்திரன்:*** அப்பா ~...! என்னை இனி யாரப்ப படிக்க வைப்பது, எங்க குடும்பத்தை இனி யாரப்பா காப்பாற்றுவது ஐயோ அப்பா நீங்க இல்லாம நாங்க எப்படிப்பா வாழ்றது? அப்பா...!

( கல்லும் கரையும் படி சந்திரன் அழுதது சுற்றியிருந்தவர்களையும் கலங்க வைத்தது.)

***சந்திரனின் மனசாட்சி:*** நீ இன்னும் படிக்க நினைத்தால் உன் அம்மாவையும் இழக்க வேண்டி வரும் எனவே உடனடியாக ஒரு வேலையைத் தேடிக் கொள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சிரமப்பட்டு தாயிடம் அனுமதி பெற்று பரீட்சைக்குத் தோற்றியவுடனேயே ஒரு வேலைக்குச் சேர்ந்தான். ராஜீவும் பரீட்சையில் சித்திபெற்றன்.

**ராஜீவ்:** ராஜீவ் நான் வேலைக்குப் போகிறேன் நீ கெம்பஸ் போய்ப் படி.

(ராஜீவ் உயர்கல்வியைத் தொடர்ந்தான். பணம் பனிக்கட்டியாகக் கரைந்தது. ஒருநாள் இலட்சுமி தன் கணவனிடம்)

**லெட்சுமி:** என்னங்க நம்ப பையனை படிக்க வைக்கிறதுக்கு எல்லாம் விற்றுத் தீர்த்தாச்சுது. இப்போ இந்த வீடு மட்டும்தான் பாக்கியாயிருக்கு. இப்போ இதையும் விற்று மகனுக்கு பணம் அனுப்ப வேண்டியதுதான்

**ராமையா:** என்னடி செய்வது மகன் படிச்சு கரைசேர்ந்துட்டா நமக்கும் விடிவு தானே. அவன் படித்து பெரியாளாகி இன்னொரு வீடு வாங்கமாட்டானா!. பரவாயில்லை இந்த வீட்டையும் விற்போம்.

(ராஜீவ் படித்துப் பட்டம் பெற்று வந்தான். சந்திரன் அவனை வரவேற்றான்)

**ராஜீவ்:** சந்திரன் எப்படி சுகமாக இருக்கிறாயா எப்படி எங்க அம்மா அப்பா எங்கே?

**சந்திரன்:** சொல்றேன்னு கவலைப்படாதே உன்னை படிக்க வைப்பதற்காக உங்க வீட்டையும் விற்று பணம் அனுப்பி விட்டு இப்போது கோயில் ஆச்சிரமத்தில் தங்கியிருக்கிறார்கள். நான் எவ்வளவோ கூப்பிட்டும் வரவில்லை. உன்னிடம் சொல்ல வேண்டாம் என்று சொன்னார்கள். ஆனால் அவர்கள் உன்னைப்பற்றி பெருமையுடனும் மகிழ்ச்சியுடனும் இருக்கிறார்கள்.

ராஜீவ்: இல்ல சந்திரன், நான் என் தாய் தந்தையருக்கு பெரிய பாவம் ஒன்றைச் செய்துவிட்டேன். ச்சீ.. படித்துப் பட்டம் பெற்றும் பயனில்லை. என்னை பத்து மாதம் சுமந்து பெற்ற தெய்வங்களைக் கவனிக்க மறந்து விட்டேனே!

( அன்று மாலையே ஆச்சிரமம் சென்று தாய் தந்தையரை வணங்கி அழைத்துக்கொண்டு சந்திரன் வீட்டுக்கு வந்து சேர்ந்தனர். அன்று சந்திரனின் வீடு மகிழ்ச்சியால் களைகட்டியது. சந்திரன் தனக்கு இன்னும் தாய் தந்தை இருப்பது போன்று உணர்ந்தான். மறுநாள்..)

**ராஜீவ்:** சந்திரன் வா இருவரும் வயலுக்குப் போகலாம்.

**சந்திரன்:** என்னடா? நீ போயி.. நீ எவ்வளவு படிச்சிருக்கே! உனக்கு இதெல்லாம் சரிப்பட்டு வராது.

**ராஜீவ்:** இல்லடா படிச்சி என்ன? வேலை தேடி எங்கேயும் கிடைக்கேல்ல. வா வயலுக்குப் போவோம்.

**சந்திரன்:** இல்ல வேணாம்டா..

ராஜீவ்: இல்லடா எனக்கு பட்டத்தை விட இந்த மண்வெட்டி பாரமா தெரியல்லடா.

( இருவரும் ஒருவரை ஒருவர் தேற்றிக் கொண்டு கலப்பை மண்வெட்டிகளை தோளில் சுமந்து கொண்டு எதிர்காலத்தை நோக்கி நடந்து செல்கிறார்கள்)

ஆக்கம்: கே. இரவீந்திரன்,
தரம் 13 (கலைப்பிரிவு)

# பாடசாலை

## SCHOOL என்ற சொல்லின் உட்கருத்து

| | | |
|---|---|---|
| *S* | *Sincererity* | உண்மை |
| *C* | *Chaaracter* | நடத்தை |
| *H* | *Health* | ஆரோக்கியம் |
| *O* | *Order* | ஒழுங்கு |
| *O* | *Obedience* | கீழ்ப்படிவு |
| *L* | *Learning* | கற்றல் |


இவை அனைத்தும் பாடசாலையில் கற்கும் மாணவ மாணவியரிடம் இருத்தல் வேண்டும்

தொகுப்பு:- *M* டோனியா
தரம் *11A*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes From :*


# Dr. D.R.M. Yasathilaka Bandara



Medical Centre,
Badulla Road,
Hali - Ela.
Tel : 055- 94349

*With Best Wishes From :*

# JAYANTHI RICE MILE



Badulla Road,
Hali - Ela.
Tel: 055-94694

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes From :*

# Leela Stores



223/B-8, Lower Street,
Badulla.
Tel : 055-23843

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# අඩ පැයක සිතුවිලි

උපන් දා සිට මෙලොව
සොබා දහම අපේ පිහිට ට විය
හුස්ම ටික වාතයෙන්
ජලය ඇල දොළ ද ළිංන් වලින්
පොලොව දුන් අහර රස
ඉහට සෙවනක් මෙන්ම
ගතට සිසිලස දුන්න
තුරුලතා මල් පළඳනා
පිහිට විය හැම සතට,

අප උපන් ලෝකයට
අපේන් පිහිටක් වී ද
මන උසස් මුදුය
.මිනිස්" යයි පෙර කිවද
මනස හිස් වූ අයට
.මිනිස්" යයි කියති අප
ලැජ්ජාව යයි කියා
දෙයක් ඉතිරිව නැති ද?

අප නිසා උපන් අය
ගැන සිතන්නේ ද මි අපි
සෙවන දුන් ගස් කපති
කන්න දුන් අත සපති
ගඟෙන් බී පිපාසෙට
සයුර වෙත ආවඩති,

සපිරි බර ලෝකයක්
අසිරිමත් ලෙස මවා
තරු පහේ හෝටලේ
අයෙක් කති බොති නටති
නොමසුරුව වැය කරති
දහස් ගණනින් බැඳි පියලි
ඒ තියෙන වුන්,

නැති ඒකා දුක් විදන්
ගන්න දවසේ පඩිය
හොර පොලේ කානු කොන
මත් පැනට කුඩු ටිකට
ගංජ මිටියේ සැපට
වැය කරත්,
දරුවන්ගෙ බඩගින්න
ලෙඩ දුක ද ඉගෙනීම
දැන ගන්න වෙර දරන
දෙමාපියන් ද සිටිති
අතලොස්සක්,

අපි අපට හොරු නොවී
අපි අපට බොරු නොකොට
අප නිසා උපන් උන්
මුදාගෙන හරි මගට
හුරු කලොත් ඉත සිතින්
අපේ හිස් හිස් වුවත්
ඔවුන් හිස් පිරෙනු ඇත
එවිට මේ ලොකයෙන්
හිස් බව ද හිස්ව ගොස්
පිරුනු මිනිසත් බවත්
අඳුරු දුරු ලොකයත් බිහිව
සතුට සොමිනස සමග
උදාවෙනු ඇත
- පහන් බව -

ප්‍රංසගා තුෂාරි මුණසිංහ-
ගුරුතුමිය

*With Best Wishes From :*

# Priyankara Motors


Dealers in all type of motor cycle repairs

Painting Welding & Water Pumps repairing




---

*With Best Wishes From :*




கோணகல பசார்

கோணகல

கந்தப்பலை

தொ.பே. 055-68009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலையாத கனவு

அந்தி வானத்தில் சூரியன் மெல்ல மெல்ல மறைந்தான். தொலைத்த எதனையோ தேடுவதைப் போல கடலலை வேகமாகச் சென்றுகொண்டிருந்தது. அவ்வழகிய காட்சியை யன்னல் கம்பிகளுக்கிடையே கலா வெறித்து நோக்கலானாள். கடலலை போலவே இவளது மனதிலும் ஆயிரம் எண்ணங்கள் அலைமோதின. இரண்டு மாதங்களுக்கு முன்புதான் தன் உயர்தரப் பரீட்சையை வெற்றிகரமாக எழுதி முடித்தாள். வறுமையின் பிடியிலிருந்தும் விடா முயற்சியுடன் படித்து பரீட்சையை சிறப்பாக எழுதினாள். பரீட்சை முடியபல விணணப்பங்கள் அனுப்பி வந்தாள். அதற்காக பல அனுமதிகள் வந்தன. ஆனால் பணம் என்னும் அரக்கன்மட்டும் அவளுக்கு எதிராய் அமைந்திருந்தான். காரணம் ஒவ்வான்றுக்கும் அவளால் சிறிதும் எட்டிப் பிடிக்க முடியாத பெரிய தொகையைக் கேட்டிருந்தார்கள். இவ்வேதனையின் வெளிப்பாடாக தினமும் தனது தலையணையை நனைத்து வந்தாள். தன் எண்ணங்க்ளை அலைபாய விட்ட கலாவை அம்மாவின் அழைப்பு இயல்புக்குக் கொண்டு வந்தது.

" என்ன கலா பரீட்சை முடிய நல்லா தூங்கனும்னு சொல்லுவியே.. கெதியா வா சாப்பிடலாம்" என்றாள்

" இல்லம்மா எனக்குப் பசிக்கேல்ல, நீங்க சாப்பிடுங்க"

" இத பாரு கலா, இப்படித்தான் சாப்பிடாமலே இருந்து உன் உடம்பு வீணாகிவிட்டது. முதல்ல கை கால் அலம்பிட்டு வா"

எனக் கூறிய தாய் அடுப்பங்கரையை நாடிச் செல்ல, கலா கிணற்றடியை நாடிச் சென்றாள். கிணற்று நீர் கூட அவளது எண்ணத்தை அறிந்ததைப் போல அவளது கொதிக்கும் மனதிற்கிணையாகக் கொதித்தது. அந்த பிஞ்சு உள்ளத்தின் வேதனையை அவளது தாய் அறிவாளோ... ...? சாப்பிடச் சென்ற் கலா தன் வேதனையை தன் தாய் மீது கோப வார்த்தைகளால் வீசினாள்.

" என்ன கலா இவ்வளவு நேரம் என்ன செய்தாய்?"

" ஏனம்மா இந்த வீட்டுல கொஞ்சம் சுதந்திரமாக நடமாடக் கூட எனக்கு உரிமையில்லையா?"

இப்படியாக இருவரிடையேயும் நிகழ்ந்த வாக்குவாதம் தந்தையின் வரவால் ஸ்தம்பிதமடைந்தது.

அவளிள் அறிவுப் பசி விஞ்சி நிற்க வயிற்றுப் பசியை அவள் கடுகளவும் உணரவில்லை. ஒரு பிடி சாப்பிட்டு விட்டு படுக்கச் சென்றாள். அவளுக்குள் ஆயிரம் எண்ணங்கள் விடை காண முடியாது திண்டாட, நித்திரை வராமல் புரண்டு கொண்டிருந்தாள். தன் நிலையை நினைத்து கண்ணீர் விட்டாள். அதனாலோ என்னவோ நித்திரை தேவன் அவள் மீது இரங்கி தன்னுடன் அரவணைத்துக் கொண்டான்.

அன்று அதிகாலையிலேயே விழித்த கலா எழுந்து ஒரு புத்தகத்தைப் புரட்டினாள். விடிந்த அன்றைய தினம் அவளுக்குச் சாதகமாய் அமைந்தது. காரணம் எழுது வினைஞர் பதவிக்காக அவள் அனுப்பிய விண்ணப்பத்திற்கிணங்க அச்சேவைக்கு அழைப்பு விடுத்து கடிதம் வந்திருந்தது. மகிழ்ச்சியால் மலர்ந்த கலாவின் முகம் செந்தாமரையைப் பழித்தது. விரைவாக குளித்து இறைவனைத் தியானித்து விட்டு பெற்றோரிடம் ஆசி பெற்று சென்றாள். இருந்தாலும் அவளது இலட்சியம் அதுவன்று. தன் உயர்கல்வியைத் தொடர்வதே அவளது லட்சியம்.

தன் இலட்சியத்தை அடைய தேவையான பணத்தை சம்பாதிக்கவே அவள் சென்றாள். காலச் சக்கரம் உருண்டோடியது. கலா தன் மாதச் சம்பளத்தை சேமித்து வந்தாள். அன்று வேலை விட்டு வந்த அவளுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி காத்திருந்தது. அவளது உயிர்த் தோழி கீதா காத்திருந்தாள்.

"ஹாய் கீதா, எப்ப வந்தாய்,? நம்ம பிரண்ட்ஸ் எல்லாம் எப்படி? எல்லாம் நல்லா இருக்காங்களா?"

"ஆமா கலா நாளைக்கு எங்க ஏ.எல். ரிசல்ட் எல்லாம் வருதாம். எல்லாரும் சேர்ந்த போவலாமே"

"ஆம் அதற்கென்ன எத்தனை மணிக்குப் போவோம்?"

"நாளை 9 மணிக்குப் போவோம்"

இவ்வாறாக கீதா விடைபெற்றுச் சென்றாள். தன் பெறுபேறு வரும் ஆவலில் அன்றிரவு கலாவுக்குத் தூக்கமே வரவில்லை. ஒருவாறு தன்னை கட்டுப்படுத்திக் கொண்டு தூங்கினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாலையிலேயே எழும்பிய கலா இறைவனைத் தியானித்துவிட்டு நண்பி கீதாவுடன் பாடசாலை சென்றாள். மாணவர்களது துடிப்பை விட ஆசிரியர்கள் தம் மாணவர்களின் பெறுபேற்றைப் பார்க்கும் ஆவலில் துடித்துக் கொண்டிருந்தார்கள். ஆம். பெறுபேறு வந்துவிட்டது. கணணியை விட வேகமாக ஆசிரியர்களின் கைகள் பெறுபேற்றுப் பொதியைப் பிரித்தன.

பெறுபேற்றைப் பார்வையிட்ட அதிபர், ஆசிரியர்களின் முகங்கள் மலர்ந்தன. ஏனெனில் சகலரும் சித்தியடைந்திருந்தனர். முதல் மாணவியாக கலா சித்தியடைந்திருந்தாள் அவளுக்குப் பல்கலைக்கழக அனுமதி கிடைத்திருந்தது. பாடசாலை முழுவதும் ஒரே மகிழ்ச்சி ஆரவாரம். தன்னை இந்நிலைக்கு ஆளாக்கியவர்களை பணிந்து விட்டு, என்றும் அவள் தியானிக்கும் இறைவனை வணங்கி விட்டு வீடு திரும்பினாள்..

“அம்மா... ..அம்மா.. . எனக்குக் கெம்பஸ் கிடைச்சிட்டுது அம்மா”

“அப்படியா கலா உன் அப்பா கேட்டால் இன்னும் சந்தோஷப்படுவாரு.”

மாலையானதும் அப்பா வீடு திரும்பினார்.

“ அப்பா எனக்கு கெம்பஸ் போகக் கிடைச்சிருக்கு அப்பா”

“ரொம்பச் சந்தோஷம் அம்மா” என்ற அப்பாவின் கண்களில் ஆனந்த கண்ணீர் வடிந்தது.

இவ்வாறாக ஒரு மாதம் கழிந்து விட்டது. பல்கலைக் கழகம் செல்ல நாட்கள் நெருங்க நெருங்க மகளை பல்கலைக் கழகம் அனுப்ப பணம் இன்றி கலாவின் பெற்றோர் வருந்தினர்.மகளின் இலட்சியத்தை உடைத்தெறியும் மனம் கொண்டவர்களல்ல அவளது பெற்றோர்.

“அம்மா நான் சேமித்து வைத்த சிறு தொகைப் பணம் இருக்கு ஏதாவது ஸ்கொலர்ஷிப் கிடைக்கும். எப்படியாவது நான் கெம்பஸ் போகனும்மா !”

என கலா ஏக்கத்துடன் கூறினாள். எனினும் பலரது உதவிகள் மூலம் கலாவின் பெற்றோர் அவளை பல்கலைக் கழகத்துக்குத் தயார்படுத்தினர். உரிய வேளையும் வந்தது. கலா பல்கலைக் கழகத்துள் காலடி எடுத்து வைத்தாள். இப்போது நாளையைப் பற்றிய பல்வேறு எதிர்பார்ப்புகளோடு பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுக்கொண்டிருக்கிறாள்.

ஆம் நாளை தன் இலட்சியத்தை கையிலேந்தி பல்கலைக் கழகத்திலிருந்து பட்டதாரியாக அவள் வெளி வருவாள்.

ஆக்கம் :- கனகரட்னம் புஸ்பகலா,
க.பொ.த.(உ/த) - கலைப்பிரிவு

# தெரிந்து கொள்ளுங்கள்

01. இளஞ்சிவப்பு நகரம் என அழைக்கப்படுவது ?
இந்தியாவின் ஜெய்பூர் நகரம்

02. செயற்கை மழை பெய்விக்கப் பயன்படும் இரசாயனப் பொருள் எது ?
வெள்ளி அயடைட்

03. முதலில் செயற்கை மழை பெய்த இடம் எது ?
ஐக்கிய இராச்சியத்தில் வில்சயா என்ற இடம்

04. வெள்ளை மாளிகைக்கு வசிக்கச் சென்ற முதலாவது அமெரிக்க ஜனாதிபதி யார் ? ஜோன் அடட்ஸ்

05. காற்றாடிகளை முதன் முதல் உருவாக்கிய நாடு எது ?
சீனா

06. விண்வெளிப் பயணத்தில் இறந்த முதல் விண்வெளிவீரர் யார் ? கால்மோவராவ் (ஏப்பரல் 23-1967)

07. நம் கைபட்டதும் உருகக் கூடிய ஒரே உலகத்தின் பெயர் என்ன ? காரீயம்

08. பூச்சியினத்தில் தரையில் அதிக வேகத்துடன் ஓடுவது எது?
கரப்பான் பூச்சி மணிக்கு 5 KM

09. ஹமமிங் பேர்ட் பறவையின் இதயதுடிப்பு ஒரு நிமடத்துக்கு எத்தனை தடவைகள்.? 1200 முறை

10. செயற்கை கண்களை அதிகம் தயாரிக்கும் நாடு எது ?
ரஷ்யா

11. சமாதான சின்னமாக வெண்புறாவை அமைத்துக் கொடுத்தவர் யார் ? ஓவியர் பிக்காஸோ

12. இந்தியாவில் தொலைகாட்சி எப்போது அறிமுகப்படுத்தபட்டது ? 15- 09 - 1959 இல்

13. கண்ணில் சதைவளரும் நோய்க்கு என்ன பெயர் ?
கட்ராக்ட்

14. உலகத் தரக்கட்டுபாட்டுத் திணைக்களம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது ? 1947 இல்

தொகுப்பு : D. உஷாரஞ்சனி
தரம் : 9B

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Wishes From :

# Raj Emporium



Dealers in Textile & Fancy Goods



No : 53B, Police Road,
Ragala - Halgranoya.

With Best Wishes From :

# Asham Textiles & Garments

Dealers In Cloths Whole Sale & Retails




No : 13/1, Bandarawela Road,
Badulla.
Tel : 072-509078.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes From :*

# Topps Marketing

**Sole Agent for TenTen Brand Jelly & Pudding**

**IMPORTERS, EXPORTERS & Distributors**



COLOMBO 11.

TEL : 01-549131, 075-343129

FAX : 0094-74-713601

**e-mail : topps@panlanka.net**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1948 - 1972

சேர் ஹென்றி மொங்மேசன மூவா (1948 - 1949)
அதிகௌரவ மாண்புமிகு வைகவுண்ட் சோல்பறி (1949 -1954)
சேர் ஒலிவர் குணதிலக்க (1954 - 1962)
திரு. வில்லியம் கொபல்லாவ (1962 - 1978)
சனாதிபதி (1972 - 1978)

## இலங்கையின் நிறைவேற்று சனாதிபதிகள் (1978 - 2002)

திரு. J.R. ஜயவர்த்தன (1978 - 1989)
திரு. R. பிரேமதாசா (1989 - 1993)
திரு. D.B. விஜேயதுங்க (1993 -1994)
திருமதி. சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க (1994 இன்றுவரை)

## இலங்கையின் பிரதமர்கள் (1948 - 2002)

அதிகௌரவ மாண்புமிகு D.S. சேனாநாயக்க ( 1948 - 1952)
திரு. டட்லி சேனாநாயக்க (1952) - (1952 - 1953) (1960) - (1965 - 1970)
அதிகௌரவ மாண்புமிகு சேர் ஜோன் கொத்தலாவல (1953 - 1956)
திரு. S.W.R.D. பண்டாரநாயக்க (1957 - 1959)
திரு. W. தகாநாயக்க (1959 - 1960)
திருமதி சிறிமாவோ ஆர்டயஸ் பண்டாரநாயக்க (1960 - 1965) (1970 - 1977) (1994 - 2000)

திரு. J.R. ஜயவர்த்தன (1977 - 1978)
திரு. R. பிரேமதாசா (1978 - 1989)
திரு. D.B. விஜேயதுங்க (1989 -1993)
திரு. ரணில் விக்கிரமசிங்க (1993 - 1994) (2002 - இன்றுவரை)
திருமதி. சந்திரிகா பன்டாரநாயக்க குமாரதுங்க (1994)
திரு. ரட்னசிரி விக்கிரமநாயக்க (2000 - 2001)

தொகுப்பு
பிரேமா சுப்பிரமணியம்
தரம் 11A

## ஒழுக்கமே உயிர் பெற்றிடு

எம் நாடு நலம் பெற்றிடவே ஒழுக்கமே நீ உயிர் பெற்றிடு
தரணியிலே நம் இனத்தவர் இன்மையாக வாழ்ந்திடவே நாளை
நல்ல மனிதனாய் நலமுடன் என்றும் நாம் வாழ்ந்திடவே
ஒழுக்கமே உயிர் பெற்றிடு !

உழைப்பை நம்பி உலகின் போரை தடுத்திடவே
ஒழுக்கமே நீ உயிர்பெற்றிடு !
முத்து போன்ற உன் கருத்தை முன்வைக்க
ஒழுக்கமே உயிர் பெற்றிடு !

சாதி மத பேதமின்றி நிரந்தர நியதியாய் நிலைத்திடவே
ஒழுக்கமே நீ உயர்வு பெற்றிடு !
பட்டுப் போன்ற இவ்வுலகிலே பலரும் பண்புடன் வாழ்ந்திடவே
ஒழுக்கமே நீ உயர்வு பெற்றிடு !

கல்வியை மட்டும் கனிவுடன் கற்று ஒழுக்க வழியில் செல்லவே
ஒழுக்கமே நீ உயிர் பெற்றிடு!
கல்வியிலே கல்விமானாகவும் வாழ்க்கையிலே நிரந்தமாகவும்
ஒழுக்கத்திலே சிறந்தவனாகவும் விளங்க ஒழுக்கமே உயிர் பெற்றிடு !

நாடு நலமாகவும் நாம் பெருமை பெற்றிடவும்
ஒழுக்கமே நீ உயிர் பெற்றிடு !
நாம் அனைவரும் சரிநிகர் சமமாய் வாழ்ந்திடவே
ஒழுக்கமே நீ உயர்வு பெற்றிடு !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கம் - சு. ஸ்ரீகரன்.

*With Best Wishes From :*

S.W.O

# Social Welfare Organization

(Badulla District Branch)

## District Co-ordinatiar


## *R .M. KRISHNASWAMY J.P*

No : 45 Mahiyangana Road, Badulla.

Phone : 055-23335, 072 6629110

Fax : 055-23442, 055-23513


e-mail : swo@slt.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைல்கள் 12 9 6 3 0 12 24 36 48 மைல்கள்

## இலங்கையில் மின்வலு அபிவிருத்தி - 1948




### சுட்டுக் குறிப்புக்கள்

1. கொழும்பு
2. நுவரெலியா
3. நோட்டன்
4. கண்டி
5. கம்பகா
6. வெயாங்கொடை
7. யா-எல
8. பெலியகொடை
9. கொச்சிக்கடை
10. அவிசாவளை
11. மினுவாங்கொடை
12. வத்தேகம
13. தலவாக்கலை
14. மாத்தளை
15. புத்தளம்
16. காலி
17. சிலாபம்
18. மடுகல்ல
19. நாவலப்பிட்டி
20. மட்டக்களப்பு
21. மாத்தறை - டொம்டொல
22. குருநாகல்
23. கேகாலை
24. தெகிவளை - கல்கிசை
25. அம்பலாங்கொடை
26. நீர்கொழும்பு
27. திருகோணமலை
28. யாழ்ப்பாணம்
29. மொறட்டுவை
30. பாணந்துறை
31. களுத்துறை
32. பொல்காவலை
33. அநுராதபுரம்
34. கம்பளை
35. புசல்லாவை
36. குளியாபபிட்டி
37. பதுளை
38. பொகவந்தலாவை
39. மன்னார்
40. அம்பாந்தோட்டை
41. வெலிகமை
42. பருத்தித்துறை - வல்வெட்டித்துறை
43. கடுகண்ணாவை
44. பேருவளை - அளுத்கமை
45. அட்டன் - டிக்கோயா
46. கிக்கடுவை - டொடன்டுவ
47. கோட்டே
48. கொலன்னாவை
49. அப்புத்தளை - தியத்தலாவை - பண்டாரவளை
50. வட்டுக்கோட்டை
51. கொரணை
52. இரத்தினபுரி


S.KRISHNAMURTHY
GRADE 13 (Arts)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes From :*

# R.M.T. Sarma

**தாமிர கருங்கல் சிலைகள், ஆலய மணி, கலசம், திருவாசி மற்றும் சகல ஆலய தேவைகள், புதிய ஆலய அமைப்பு ஆலோசனைகள், சகல பூசை விபரங்களுக்கும் நாடவேண்டிய இடம்**



சு. தட்சனாமூர்த்தி சர்மா
ஸ்ரீ வீரசக்தி விநாயகர் கோவில்
பண்டாரவளை வீதி,
ஹாலி–எல.

தொ.பே. 055- 94604/077-547191

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்திப்போம் தெளிவு பெறுவோம்


கொடுத்தால் உண்டாவது தர்மம்
எடுத்தால் உண்டாவது பாவம்
இகழ்வதையும் புகழ்வதையும் சமமாகக் கருது
உனது மனம் அமைதியாகும்

நேரம் பொன்னானது
பொன் கொடுத்தாலும் கிடைக்காது
ஒளி இருள் ஆகிய இரண்டும்
இயற்கையின் இரண்டு விழிகள்
ஓவியனுக்கு அழகு வேண்டும் - ஆனால்
பெண்ணுக்கோ முழு உலகமும் வேண்டும்
செயல் மூலம் தன் எண்ணங்களை
உருவாக்குபவன் பலசாலி
செய்யும் நல்வினைகளுக்கு இறைவனால்
அளிக்கப்படும் நன்மதிப்பு "இன்பம்"
ஞானம் உதிக்கும் போது
அங்காரம் தானகவே அகலும்.
வெற்றி என்பது போராட்டங்களின் சிகரம்
முயற்சிகளின் முடிவிடம்
புறங்கூறல் புறத் தூய்மையையும்
நேர்மையையும் கெடுத்து விடும்.
சிரித்துக் கொண்டே தவறு செய்யும் யாரும்
அழுது கொண்டே தண்டனை பெற நேரும்.
நம்பிக்கையும், தைரியமும் வெற்றிக் கிரீடத்தின்
ஒளி தரும் இரு வைரங்கள்
உழுபவனுக்கு நிலம் வேண்டும்
செல்வனுக்கு மதிப்பு வேண்டும்
பணம் கொஞ்சம் இருந்தாலும்
கொடுத்தால் தான் மதிப்பு
புத்திமதி கூறுபவரிடம் அன்பு செலுத்து
புகழ்பவரிடம் செலுத்தாதே
வெற்றி என்பது போராட்டங்களின் சிகரம்
முயற்சிகளின் முடிவிடம்.


ஆசிரியை :
ம. ஜுன்பிலிஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes From :*



# Dusshaa Hardware Stores



*No : 2,J, Cocowatta Road,*
*Badulla.*
*Tel : 055-23606.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதந்திரத்தின்பின் இலங்கைப் புகைவண்டிப் பகுதியின் முக்கிய நிகழ்வுகள்

1953 – இலங்கைப் புகைவண்டிப் பகுதிக்கு எம்.1 டீசல் மின்வலு முக்கியமாகக் கொண்ட இயக்கவலுப்பொறி அறிமுகப்படுத்தப்பட்டது.

1954 – 1,310 குதிரை வலுவைக்கொண்ட எம்.2 வகுப்பு பொது உந்து டீசல் மின்வலு பொறித்தொகுதி கொழும்பு திட்டத்தின் கீழ் கனடிய அரசாங்கத்தினால் இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

1956 – இலங்கைப் புகைவண்டிப் பகுதியினால் உடரட்டமெனிக்கே, ருகுணுகுமாரி, பொடிமெனிக்கே, யாழ்தேவி மற்றும் நீண்டதூர புகைவண்டிகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

1958 – எஸ்.2 வலு வண்டிகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

1959 – பாதை உள்ளிணைப்பு செலவழிகளுக்கும் மையப்படுத்தப்பட்ட போக்குவரத்து கட்டுப்பாட்டு முறைக்கும் நிறவெளிச்ச சைகை முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

1968 – மின்இயக்கவலுப் பொறிசாலையும் மற்றும் வலுப் பொறிகள் சாலையும் நிறுவப்பட்டன.

1991 – 10 எஸ்.8 வலுப்பொறிகள் தொடக்கி வைக்கப்பட்டன.

1991 – களனிப் பள்ளத்தாக்கு அகன்றபாதை மருதானையிலிருந்து நுகேகொடைவரை திறக்கப்பட்டது.

1993 – மிகிந்தலை புகைவண்டிப்பாதை போக்குவரத்திற்காகத் திறக்கப்பட்டது.

1997 – களனிப் பள்ளத்தாக்கு அகன்ற பாதை அவிசாவளைவரை திறக்கப்பட்டது.

## அஞ்சல்துறையில் முக்கியநிகழ்வுகள்

1948 அஞ்சல் விநியோகத்திற்காக திணைக்கள வாகனப் பணிகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

1949 கொழும்பிற்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையில் உள்நாட்டு வான் அஞ்சல் பணிகள் தொடங்கப்பட்டன.
அரச ஓய்வூதியக் கொடுப்பனவுகள் பொறுப்பேற்கப்பட்டன.

1958 சிங்கள எழுத்துக்களை முனைப்பாகக் கொண்ட முதலாவது தொகுதி அஞ்சல் முத்திரைகள் வெளியிடப்பட்டன.

1972 1972ஆம் ஆண்டில் 30ஆம் இலக்கச் சட்டத்தின்படி அஞ்சல் அலுவலக சேமிப்பு வங்கி தேசிய சேமிப்பு வங்கியாக மாற்றப்பட்டது.

1976 பொதுநலவாய அஞ்சல் நிருவாகிகளின் 3ஆவது மாநாடு கொழும்பில் நடத்தப்பட்டது.

1979 இலங்கை ஆசியா பசுபிக் அஞ்சல் ஒன்றியத்தில் இணைந்தது.

1981 அஞ்சல் தொலைத் தொடர்பு திணைக்களத்தினை வெவ்வேறாக்கியதன் மூலம் அஞ்சல் திணைக்களம் நிறுவப்பட்டது.

1981 தனியார்துறையினர் முகவர் அஞ்சல் அலுவலகங்களை நிறுவ அனுமதிக்கப்பட்டனர்.
கடுகதி அஞ்சல் பணி அறிமுகப்படுத்தப்பட்டது.
அஞ்சல் பெக்ஸ் பணி அறிமுகப்படுத்தப்பட்டது.

1996 அஞ்சல் குறியீட்டு எண்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.
புதிய தபால் தரம் பிரித்திடும் மத்திய பரிவர்த்தனைச் கட்டடம் திறக்கப்பட்டது.

JEGATHISWARAM
GRADE 10B

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


*With Best Wishes From :*

R. Rajesh

# GLOBAL VIDEO

**Pioneers in Video Filming and Still Photographing**

**Specialist in Wedding Album Designing**





## Make The Unforgettable Occasion In Your Life Immortal

**No : 25D, New Shopping Complex,**
**Badulla.**
**Tel : 072-508987**
**072-505700**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடுகளும் அதன் முக்கியத் தொழில்களும்

01. ஜேர்மனி : இரசாயனப் பொருட்கள், கனரக பொறியியல், கப்பல் கட்டுதல்

02. கிரீஸ் : கப்பல், எண்ணெய்

03. ஸ்பெயின் : இரசாயனப் பொருட்கள், இயந்திரக் கருவிகள், கப்பல்

04. சுவிஸ்சர்லாந்து : கைக்கடிகாரம், துல்லியக் கருவிகள், இயந்திரங்கள்.

05. தாய்வான் : பருத்தி துணிகள், மின்சார சாதனம், கண்ணாடி, சோப்.

06. இங்கிலாந்து : இயந்திரப்பொறியியல், இரசாயனப் பொருட்கள், மோட்டார் வாகனம், மின் பொருட்கள், விமானம்.

07. அமெரிக்கா : இயந்திரப் பொறியியல், தங்கம், மோட்டர் உறுப்புக்கள், விமானம், எண்ணெய்.

08. கியூபா : சர்க்கரை, தேயிலை.

09. வியட்னாம் : சீமேந்து, உலோகவியல், இரசாயனபொருள், காகிதம்.

10. ரஷ்யா : கனரக இயந்திரங்கள், இரசாயனப் பொருட்கள்.

11. சுவீடன் : எஃகு, மரக்கூழ், காகிதம், கழிவுப்பொருள்.

12. அங்கோலா : பருத்தி ஆடைகள், சீமேந்து, எண்ணெய் சுத்திகரிப்பு.

13. அவுஸ்திரேலியா : கோதுமை, இறைச்சி, தங்கம், வெள்ளி.

14. எகிப்து : பருத்தி, தாதுப்பொருட்கள், டயர்கள்.

15. சீனா : பருத்தி, கம்பளி ஆடைகள், இரும்பு.


16. சிம்பாப்வே : உணவுபொருட்கள், உலோகங்கள், சர்க்கரை.

17. பிரேசில் : கப்பல், கோப்பி.

18. ஹொங்கொங்: பருத்தி, பிளாஸ்ரிக், மின்கருவி, கண்ணாடிஉபகரணம்.

19. சவூதி அரேபியா : பெற்றோலியம்.

20. பங்களாதேஷ்: சணல், ஜவுளி, சர்க்கரை, டயர்கள், ஆடைகள்.



தொகுப்பு : S. அசோக்கா
தரம் : 10B

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes From :*

# Manoo Tailors

Expert Ladies & Gents Tailors

Trousers


Shirts

Baby Suits

And

Specialist

in Wedding Suits



No : 19, Badulla Road,
Hali -Ela.
Tel : 077-460678


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes From :*

# விநாயகர் முத்து மணவறை





ௐ முத்து மணவறை

ௐ முத்து சப்பரங்கள் (தேர்)

ௐ ஒட்டியாண செட்

ௐ பூ மாலைகள்

ௐ சமையல் பாத்திரங்கள்

இவையனைத்தும் வாடகைக்கு தரப்படும்

ௐ கோவில் ஐயர்கள்

ௐ கோவில் அலங்கார வேலைகள்

ௐ சாத்துப்படி பூ வேலைகள்

ௐ கும்பாபிஷேகங்கள்

ௐ குறித்த நேரத்தில் செய்து தரப்படும்


திருவிழாக்கள், திருமணங்கள், ருதுசாந்தி ஆகியவற்றை
ஒடர் செய்து தர தற்போது புகழ் பெறும்வினாயகர் முத்து மணவறை
இல்லத்தை நாடுங்கள்.

செல்லையா தர்மலிங்கம்
(தேசிகர்)
த.மகேந்திரன்
உனுகலை,
ஹாலி எல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes From :*

# Karunarathna Stores



No : 12, Badulla Road,

Hali - Ela.

Tel : 055-94545

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானம்.........? (!)

உலக மாதாவின்
கரு சிதைந்துப் போன
குழந்தை

பூலோக மக்கள்
தொலைத்து விட்ட
வசந்தம்

கலகக் காரர்களையும்
கலங்க வைக்கும்
ஆயுதம்

அழிவைத் தரும்
ஆயுத அரக்கனின்
ஜென்ம விரோதி

அமைதி விரும்பிகள்
அன்றாடம் காணும்
அழகிய கனவு

அரசியல் வாதிகளால்
புரிந்து கொள்ள முடியாத
புதுக் கவிதை

மொத்தத்தில் இன்றைய
உலகிற்கு தேவையான
உடனடி நிவாரணம்

ஆக்கம் கி. கிருஷ்ணதேவி
தரம் : 13 கலைபிரிவு

# என் உயிர் நீ தான் அம்மா

முந்நூறு நாள் கருவறையில்
தாங்கி பெற்றெடுத்த தாயே
உதிரத்தை பாலாக்கி இவ்வுலகில்
உயிர் வாழ வைத்த உத்தமியே...

தந்தையில்லா குறையின்றி
தரணியிலே உயர வைத்த தாயே
சொந்தம் சூழயிருந்தும் பிறருதவியின்றி எம்
உயிர் காத்த உத்தமியே...

அம்மா எம்மால் நீ பட்ட துன்பம்
எண்ணில் அடங்காது எத்தனை ஜென்மங்கள்
எடுத்தாலும் அம்மா உனக்கு நன்றிக் கடன்
செலுத்துவது எப்படி ?

அன்னையே எத்தனை பிறவிகள் நாங்கள்
எடுத்தாலும், அத்தனை பிறவிகளிலும்
உங்களையே தாயாக நினைக்க
எங்களுக்கு வரம் தர வேண்டுமம்மா...

ஆக்கம் : ஆ. சர்வதர்ஷினி
தரம் : 11A

# சிந்திக்கச் சில நிமிடங்கள்

- ☐ உலகத்தில் எதுவுமே இல்லாதவனுக்குத் தான் எதையும் தாங்கும் இதயமுண்டு
- ☐ தீக்குச்சி ஒருமுறை சிரிப்பதால் மெழுகுவர்த்தி காலம் முழுவதும் அழுகின்றது
- ☐ அரிசியை நிலத்திற் கொட்டினால் பொறுக்கிவிடலாம். ஆனால் வார்த்தைகளைக் கொட்டிவிட்டால் மீளப் பெற முடியாது.
- ☐ எதைச் சிந்திக்கின்றாய் என்பதில்லை. எப்படிச் சிந்திக்கின்றாய் என்பதில்தான் புதிய கருத்துக்கள் வெளிவருகின்றன.
- ☐ கட்டுப்பாடு மனிதனுக்கு அவசியம். கட்டவிழ்ந்தால் கெட்டுவிடும் இலட்சியம்.

தொகுப்பு:- *U.* செல்வராணி
தரம் *7A*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes From :*



# Marvel Tailors

Expert Gents Tailors &
Specialist in Wedding Suits

**No : 4/A, Dharmadutha Road, Badulla. Tel : 055-30403**

*With Best Wishes From :*






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பிறப்பாக்கி நிலையம் | நதிநீர் ஏந்துப்பாயல் அல்லது எரிபொருள் | தொடக்கப்பட்ட ஆண்டு | தரமிடப்பட்ட இயலளவு (மெவா) | எதிர்பார்க்கப்பட்ட மின்வலு (கிவாம/ஆ) |
|---|---|---|---|---|
| 1. லக்சபானா | களனி | 1950 | 25 | |
| | | 1958 | 25 | 289 |
| 2. விமலசுந்தர | களனி | 1865 | 50 | 112 |
| 3. பொல்பிட்டிய | களனி | 1969 | 75 | 427 |
| 4. புதிய லக்சபானா | களனி | 1974 | 100 | 491 |
| | களனி | 1983 | 30 | |
| 5. கன்யொன் | களனி | 1988 | 30 | 161 |
| **துணைமொத்தம்** | **களனி** | | **335** | **1,480** |
| 6. உக்குவெல | மகாவலி | 1976 | 38 | 177 |
| 7. போவத்தன்ன | மகாவலி/ சுதுகங்கை | 1981 | 40 | 53 |
| 8. விக்டோரியா | மகாவலி | 1984-86 | 210 | 726 |
| 9. கொத்மலை | மகாவலி | 1985-88 | 201 | 482 |
| 10. இரந்தெனிகல | மகாவலி | 1986 | 122 | 378 |
| 11. இரந்தம்பே | மகாவலி | 1990 | 49 | 216 |
| **துணைமொத்தம்** | **மகாவலி** | | **660** | **2,032** |
| 12. இங்கினியாகல | நீர்ப்பாசனம் நீர்த்தேக்கம் | 1963 | 11 | 27 |
| 13. உடவளவை | நீர்ப்பாசனம் நீர்த்தேக்கம் | 1969 | 6 | 8 |
| 14. நிலம்பே | மகாவலி | 1988 | 3 | 12 |
| **துணைமொத்தம்** | **சிறியநீர்மின்வலு** | | **20** | **47** |
| 15. சமனலவேவா | வளவை | 1993 | 120 | 357 |
| **துணைமொத்தம்** | **அனைத்துநீர் மின்வலு** | | **1,135** | **3,916** |
| 16. களனிதிஸ்ஸ நீராவி | உலை எண்ணெய் | 1962-63 | 50 | 312 |
| 17. களனிதிஸ்ஸ வாயுவிசையாழி | பாரடீசல் | 1980-82 | 120 | 749 |
| 18. சப்புகஸ்கந்தை டீசல் | எஞ்சிய | 1984 | 80 | 439 |
| 19. சப்புகஸ்கந்தை டீசல் | தன்னியக்க டீசல் | 1997 | 40 | 273 |
| 20. களனிதிஸ்ஸ வாயுவிசையாழி | தன்னியக்க டீசல் | 1997 | 115 | 851 |
| **துணைமொத்தம்** | **அனைத்துவெப்பவலு** | | **405** | **2,624** |
| **மொத்தம்** | **அனைத்து நிலையங்கள்** | | **1,540** | **6,540** |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes From :*

# RATNA BANKERS




Kotugodalla Road,
Kandy

*With Best Wishes From :*

# Maruthi Enterprises

General Merchants & Commission Agent



**No : 270/5, 4th Cross Street,**
**Colombo -11**
**Tel : 01-386241**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Wishes From :*

# S. Suresh (Ravi)




Badulla.

Tel : 055- 30157

---

*With Best Wishes From :*

# CD MART

## Tele Asia




No : 2D, Super Market,

Badulla.

074 - 499432

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்....

கலைக்கு களமா யமைந்து எங்கள்
கரங்களிலே தவழ்கின்ற வான்மதியே !
காலத்தால் அழியாத கலைவடிவே என்றும்
காத்திடுவோம் உன்னை கண்ணின் கருமணிபோல்

முழு நிலவாய் மிளிர வேட்கை கொண்டு
முதல் முயற்சி நாமெடுத்த வேளைதனில்
முகமலர்ந்து உதவி செய்த உத்தமர்க்கு
அகங்கனிந்து நவில்கின்றோம் "நன்றி"எற்பீர்


நல்லெழிலும் நறுமணமும் கொண்டு "வான்மதி"
நாற்றிசையும் பவனிவர வேண்டுமென்று
அன்பான ஆசிகளும், ஆலோசனைகளும் தந்த
பண்புசால் நெஞ்சினர்க்கு நவில்கின்றோம் "நன்றி" ஏற்பீர்.

வகை வகையாய் விளம்பரங்கள், விடயதானம்.
வான்மதிக்கு நகைகளாய் அணிவித்த நல்லோர் கட்கும்
சொல்லாயும், பொருளாயும் அள்ளி எமக்கீந்த
வள்ளல் பெருமகட்கும் நவில்கின்றோம் "நன்றி" ஏற்பீர்


வெள்ளத்தைப் போல் எமக்கினிய வசனங்களால்
உள்ளத்தால், உழைப்பால் உதவிய ஊவா பிரிண்ட் ஹவுஸ்
முகாமையாளருக்கும், ஊழியர்களுக்கும் மற்றும் உதவிகளால்,
கலைவிழா சிறக்கக் கைகொடுத்த அனைவருக்கும்
தலை தாழ்த்தி நவில்கின்றோம் "நன்றி" ஏற்பீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed By: Uva Print House, Badulla. Tel: 055 - 22504.